N35-9.1
208453

பரைச் சந்தாதாரர்களாக இந்தப் பொங்கற் பெருநாளின் ஞாபகமாகச் சேர்ந்து அவனுக்கு இன்ப மூட்டுங்கள். மற்றும் பொருட்பேறு நிறையப் பெற்றாரனைவரும் போஷகர்களாகவும், பெரும் போஷகர்களாகவும் சேர உறுதிகொண்டு அவனுக்கு உற்சாகந் தாருங்கள். அவனும்,

போங்கலோ போங்கல், போங்கலோ போங்கல்;
எங்கும் இன்பம் இனிதே போங்குக;
மங்கலம் பெருகுக; மழைவளஞ் சுரக்குக;
செந்தமிழ்த் தாய்மொழி செழுமையி னுயர்க;
கைத்தொழில் வளர்க; கனகம் நிறைக;
இத்தரை யெங்கணு மிந்தியர் சிறப்பின்
ஓங்குக; செல்வம் உயர்க; சீர்த்தி
பாங்குறப் பொலிக; பல்வளந் தோன்றுக;
சந்தா தார்கள் தனிச்சிறப் புறுக;
சிந்தை யுருள்கூர் போஷகர் செழிக்க;
பெரும்போ ஷகர்கள் பெருமையும் பெறுந்
திருவுந் தாங்கி தினமுந் தழைக்க;
கட்டுரை பலப்பல கவினுற வழங்கும்
இட்டர்கள் நலமெலாம் ஏந்தி வாழ்கென
அங்கங் குளிர வாழ்த்தி
போங்கலோ போங்கல் என்றுபொங் குவனே.

---

## செங்குந்தர்களுக்கோர் நற்செய்தி

சென்னை, உயர்தர நீதிமன்ற வழக்கறிஞரும் (அட்வகேட்) நமது தலைச்சங்க நிர்வாக உறுப்பினரும், செங்குந்தர் கல்விநிதியின் பொருட்காப்பாளருமான திருமிகு. V. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்கள் சமீபத்தில் சென்னை அரசாங்கத்தினரால் ஜில்லா நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்களென்ற நற்செய்தியை செங்குந்த உலகத்திற்கு மிக்க மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

செங்குந்தர்களில் இவரே முதலாவது ஜில்லா நீதிபதியாவர். இது வரையில் இப்பதவியை செங்குந்தர்களில் எவரும் வகிக்கவில்லை. திரு. முதலியாரவர்கள் மேன்மேலும் பல உயரிய பதவிகளைப் பெற்று நமது சமூகத்திற்கோர் நற்பெயரும் கீர்த்தியும் நிலைநாட்ட அருள்புரியுமாறு முழுமுதற் செழும் பொருளை வழுத்துகின்றோம்.

## நமது ஐந்தாவது மகாநாட்டு விழா

ஐந்தாவது மகாநாடு திருவத்திபுரத்தில் இம்மாதம் 20, 21-ம் தேதி (பிப்ரவரி 2, 3உ) சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் நடைபெறுமென்பதையும், அது சம்பந்தமான வேலைகள் பற்பல துறைகளாக வகுக்கப்பட்டு வெகு துரிதமாக நடைபெற்று வருகிறதென்பதையும் வாசர்களறிந்து மிக மகிழ்ச்சியுறுவார்களென்றே எண்ணுகின்றோம். மகாநாடு சம்பந்தமான முழு விவரங்களும் விளம்பர சபையினரின் பிரசுரங்களினாலும், மித்திரனில் வேறு பக்கங்களில் வெளியிடப் பட்டுள்ள அறிக்கைகள், நிருபங்கள் ஆகியவற்றாலும் நன்கு அறியக்கூடும்.

கண்ணியமும், பொருப்பும் வாய்ந்த அறிஞர்கள் மகாநாட்டுத் தலைவர்களாக அமைந்திருப்பதும், சென்னை அரசாங்க உள்நாட்டு மந்திரியவர்கள் மகாநாட்டைத் திறந்து வைக்க நேர்வதும் இம் மகாநாட்டில் குறிப்பிடத்தக்க விசேஷங்களாகும்.

சென்ற மாத மித்திரனில் 'தலைச்சங்கத்தார்க்கு ஒரு அரிய ஆலோசனை' என்ற தலைப்புடன் நாம் எழுதிய தலையங்கம் செங்குந்தர்களின் உள்ளங்களைப் பெரிதுங் கவர்ந்திருக்கிறதென்று நன்கு விளங்குகின்றது அகில இந்திய கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம் இம் மகாநாட்டுச் சமயம் அமைக்கப்படுதற்கான முயற்சிகளைத் தலைச் சங்கத்தார் மேற்கொள்ளவேண்டுமென்றும், தலைச்சங்கத்தின் அமைப்பை ஜில்லா, தாலூக்கா, கிராமச் சங்கங்களாக மாற்றி, தீவிர பிரசாரத்தின் மூலம் நமது மகாநாட்டுத் தீர்மானங்கள் விரைவில் பயன்படுமாறு செய்தல் வேண்டுமென்றும் நாம் சென்ற மாதம் குறிப்பிட்டிருந்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இந்த அபிப்பிராயங்களைத் தழுவி நமக்குப் பல கடிதங்கள் கிடைத்திருப்பதோடு இத்தீர்மானங்கள் நிறைவேறுதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டுமென்றும், தாங்களும் மிகுந்த துணை புரியத் தயாராக இருப்பதாகவும் பலர் வற்புறுத்தியுள்ளார்கள். இம்மகாநாடு செங்குந்தர்களின் உள்ளங்களைக் கவர்ந்திருப்பதற்கும், மகாநாட்டுக்குப் பெருந்திரளான பிரதிநிதிகள் வர முடிவு செய்திருப்பதற்கும் இவைகள் ஒரு முக்கிய காரணமென்று நாம் நன்கு அறிகின்றோம்.

கடந்த இரண்டு வருடங்களாகக் கைத்தறி நெசவுத்தொழிலின் நிலை மிகமிகச் சீர்கேடடைந்திருக்கிறதென்பதும், நெசவுத் தொழில் புரிவோர் பலரும் சொற்ப வருமானமுமின்றி



தத்தளித்து நிற்கின்றார்களென்பதும் உலகறிந்த விஷயமாகும். உள்நாட்டுப் பட்டுச் சரக்குகளுக்கும், கைலிகளுக்கும் சமீப காலம் வரை தேவை இருந்து வந்ததாயினும், ஜப்பான் பட்டு (சில்க்கு)களாலும், லுங்கிகளாலும் அவைகளும் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நாற்பது ரூபா விற்ற கைத்தறி பட்டுச் சேலைகள் இன்று பதினைந்து ரூபா விற்கின்றன என்றாலும் ஜப்பான் பட்டுச் சேலைகள் ஐந்து ரூபாவுக்குக் கிடைக்கும்போது இவற்றிற்கு எவ்வாறு கிராக்கி ஏற்படக்கூடும்? நூல் நெசவைப் பற்றி சொல்லவேண்டிய அவசியமே இல்லை. இதற்குப் போட்டி ஜப்பான் மட்டுமன்று. உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களோடும் கைத்தறிகளில் நெய்யப்பட்ட நூல் சரக்குகள் எதிர்த்துப் போராடவேண்டியிருக்கிறது. இவற்றோடு இந்திய மில்களின் போட்டியும் மிக அதிகமாகிவிட்டது. இந்திய மில்களெல்லாம் நூல் விலையை உயர்த்திவிட்டுத் தமது மில்களில் உற்பத்தியாகும் ஆடைகளின் விலையை மிகக் குறைத்து விட்டனவாகையால், கைத்தறியில் உற்பத்தியாகும் ஆடைகளுக்குத் தேவையே இல்லாமற் போய்விட்டது. எனவே நெசவுத் தொழிலாளிகளிற் பெரும்பாலோர் அத்தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலுங் கிடைக்கப்பெறாது வருந்துகின்றார்கள். தொழிலை விடாது நடத்தி வருகின்றவர்களுக்கோ, ஒரு நாள் முழுதும்—காலை நான்கு மணிக்குத் தொடங்கி இரவு எட்டு மணிவரையில்—இடையில் சாப்பாட்டு நேரம் தவிர உழைத்தாலும்,—அதுவும் ஒருவரல்ல—குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்து உழைப்பினும் ஒரு வாரத்திற்கு ஒன்றரை ரூபா கிடைக்கின்றதென்றால் அக்குடும்பத்திலுள்ளவர்கள் எவ்வாறு வயிறார உண்ண முடியும்?

இந்த நிலை இன்னும் சிறிது காலம் நீடித்து நிற்குமாயின் நெசவுத் தொழிலாளரின் கதி யாதாகுமெனக் கூறுவதற்கில்லை. எனவே, கொஞ்சமும் தாமதிக்காமல் அதனைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை நெசவுத் தொழிலாளரனைவரும் உடனே மேற்கொள்ளவேண்டியதும், அதன் பொருட்டு ஒரு அகில இந்திய நேசவுத் தொழிலாளர் சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டியதும் மிக அவசியமாகும்.

அரசாங்கத்தினரும் கைத்தறி நெசவுத் தொழிலைக் காப்பதற்கும், வேலையற்றோர் தொகை நெசவுத் தொழிலாளரிடையே பரவாது தடுப்பதற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(1) நாற்பதாம் நெம்பருக்குக் குறைந்த வெளிநாட்டு ஜவுளிகளின் இறக்குமதிகளை மட்டுப் படுத்தவேண்டும்.

## நமது ஐந்தாவது மகாநாட்டு விழா

ஐந்தாவது மகாநாடு திருவத்திபுரத்தில் இம்மாதம் 20, 21-ம் தேதி (பிப்ரவரி 2, 3உ) சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் நடைபெறு மென்பதையும், அது சம்பந்தமான வேலைகள் பற்பல துறைகளாக வகுக்கப்பட்டு வெகு துரிதமாக நடைபெற்று வருகிற தென்பதையும் வாசர்க ளறிந்து மிக மகிழ்ச்சி யுறுவார்க ளென்றே எண்ணுகின்றோம். மகாநாடு சம்பந்தமான முழு விவரங்களும் விளம்பர சபையினரின் பிரசுரங்களினாலும், மித்திரனில் வேறு பக்கங்களில் வெளியிடப் பட்டுள்ள அறிக்கைகள், நிருபங்கள் ஆகியவற்றாலும் நன்கு அறியக்கூடும்.

கண்ணியமும், பொருப்பும் வாய்ந்த அறிஞர்கள் மகாநாட்டுத் தலைவர்களாக அமைந்திருப்பதும், சென்னை அரசாங்க உள்நாட்டு மந்திரி யவர்கள் மகாநாட்டைத் திறந்து வைக்க நேர்வதும் இம் மகாநாட்டில் குறிப்பிடத்தக்க வீசேஷங்களாகும்.

சென்ற மாத மித்திரனில் 'தலைச்சங்கத் தார்க்கு ஒரு அரிய ஆலோசனை' என்ற தலைப்புடன் நாம் எழுதிய தலையங்கம் செங்குந்தர்களின் உள்ளங்களைப் பெரிதுங் கவர்ந்திருக்கிற தென்று நன்கு விளங்குகின்றது அகில இந்திய கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம் இம் மகாநாட்டுச் சமயம் அமைக்கப்படுதற் கான முயற்சிகளைத் தலைச் சங்கத்தார் மேற்கொள்ளவேண்டுமென்றும், தலைச்சங்கத்தின் அமைப்பை ஜில்லா, தாலூக்கா, கிராமச் சங்கங்களாக மாற்றி, தீவிர பிரசாரத்தின் மூலம் நமது மகாநாட்டுத் தீர்மானங்கள் விரைவில் பயன்படுமாறு செய்தல் வேண்டு மென்றும் நாம் சென்ற மாதம் குறிப்பிட்டிருந்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இந்த அபிப்பிராயங்களைத் தழுவி நமக்குப் பல கடிதங்கள் கிடைத்திருப்பதோடு இத்தீர்மானங்கள் நிறைவேறுதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டு மென்றும், தாங்களும் மிகுந்த துணை புரியத் தயாராக இருப்பதாகவும் பலர் வற்புறுத்தி யுள்ளார்கள். இம்மகாநாடு செங்குந்தர்களின் உள்ளங்களைக் கவர்ந்திருப்பதற்கும், மகாநாட்டுக்குப் பெருந்திரளான பிரதிநிதிகள் வர முடிவு செய்திருப்பதற்கும் இவைகள் ஒரு முக்கிய காரணமென்று நாம் நன்கு அறிகின்றோம்.

கடந்த இரண்டு வருடங்களாகக் கைத்தறி நெசவுத்தொழிலின் நிலை மிகமிகச் சீர்கேடடைந்திருக்கிற தென்பதும், நெசவுத் தொழில் புரிவோர் பலரும் சொற்ப வருமானமுமின்றி



தத்தளித்து நிற்கிறார்க ளென்பதும் உலகறிந்த விஷயமாகும். உள்நாட்டுப் பட்டுச் சரக்குகளுக்கும், கைலிகளுக்கும் சமீப காலம் வரை தேவை இருந்து வந்ததாயினும், ஜப்பான் பட்டு (சில்க்கு)களாலும், லுங்கிகளாலும் அவைகளும் தற்போது பெரிதும் பாதிக்கப்பட் டிருக்கின்றன. நாற்பது ரூபா விற்ற கைத்தறி பட்டுச் சேலைகள் இன்று ।।தினைந்து ரூபா விற்கின்றன என்றாலும் ஜப்பான் பட்டுச் சேலைகள் ஐந்து ரூபாவுக்குக் கிடைக்கும்போது இவற்றிற்கு எவ்வாறு கிராக்கி ஏற்படக் கூடும்? நூல் நெசவைப் பற்றி சொல்லவேண்டிய அவசியமே இல்லை. இதற்குப் போட்டி ஜப்பான் மட்டுமன்று. உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களோடும் கைத்தறிகளில் நெய்யப் பட்ட நூல் சரக்குகள் எதிர்த்துப் போராடவேண்டி யிருக்கிறது. இவற்றோடு இந்திய மில்களின் போட்டியும் மிக அதிகமாகிவிட்டது. இந்திய மில்களெல்லாம் நூல் விலையை உயர்த்திவிட்டுத் தமது மில்களில் உற்பத்தியாகும் ஆடைகளின் விலையை மிகக் குறைத்து விட்டன வாகையால், கைத்தறியில் உற்பத்தியாகும் ஆடைகளுக்குத் தேவையே இல்லாமற் போய்விட்டது. எனவே நெசவுத் தொழிலாளிகளிற் பெரும்பாலோர் அத்தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலுங் கிடைக்கப்பெறாது வருந்துகின்றார்கள். தொழிலை விடாது நடத்தி வருகின்றவர்களுக்கோ, ஒரு நாள் முழுதும்—காலை நான்கு மணிக்குத் தொடங்கி இரவு எட்டு மணிவரையில்—இடையில் சாப்பாட்டு நேரம் தவிர உழைத்தாலும்,—அதுவும் ஒருவரல்ல—குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்து உழைப்பினும் ஒரு வாரத்திற்கு ஒன்றரை ரூபா கிடைக்கின்ற தென்றால் அக்குடும்பத்திலுள்ளவர்கள் எவ்வாறு வயிறார உண்ண முடியும்?

இந்த நிலை இன்னும் சிறிது காலம் நீடித்து நிற்குமாயின் நெசவுத் தொழிலாளரின் கதி யாதாகு மெனக் கூறுவதற்கில்லை. எனவே, கொஞ்சமும் தாமதிக்காமல் அதனைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை நெசவுத் தொழிலாளரனைவரும் உடனே மேற்கொள்ளவேண்டியதும்,-அதன் பொருட்டு ஒரு அகில இந்திய நேசவுத் தொழிலாளர் சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டியதும் மிக அவசியமாகும்.

அரசாங்கத்தினரும் கைத்தறி நெசவுத் தொழிலைக் காப்பதற்கும், வேலையற்றோர் தொகை நெசவுத் தொழிலாளரிடையே பரவாது தடுப்பதற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(1) நாற்பதாம் நெம்பருக்குக் குறைந்த வெளிநாட்டு ஜவுளிகளின் இறக்குமதிகளை மட்டுப் படுத்தவேண்டும்.

(2) இந்திய மில்கள் ஒவ்வொன்றின் தாரதம்மியத்திற்கேற்றபடி தறிகளும், கதிர்களும் திட்டப் படுத்தப்பட வேண்டும்.

(3) இந்திய நூல்களின் விலைகளை ஒழுங்கு படுத்த வேண்டும்.

இவைகளை இந்திய அரசாங்கம் கவனித்துத் தக்கன செய்யவில்லையாயின், இந்திய தேசத்திற்கே ஜீவாதாரமாய் விளங்கும் நெசவுத் தொழில் பின்பு எந்தக் காலத்திலும் தலையெடுக்க முடியாத பேரழிவினை அடைந்து விடுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அத்துடன், இந்தியனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் கைத்தறி நெசவுத் துணிகளையே அணிவதாக உறுதிகொள்ள வேண்டும். நெசவுத் தொழிலாளரனைவரும் தம்மால் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளையன்றி பிற ஆடைகளைக் கையினால் தீண்டுவதும் பெரிய பாபமென்னுங் கொள்கையினைக் கொள்ளல் வேண்டும். இவ்வெண்ணங்களை ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோற்றுவிக்கத் தீவிர பிரசாரமும், அதற்கென ஒரு தனி ஸ்தாபனமும் அவசியமாகும்.

இதை உணர்ந்த கொங்குநாட்டு அன்பர்கள், கவந்தம்பாடியில் ஒரு நெசவுக்காரர் மகாநாட்டைக் கூட்டி அரசாங்கத்திற்கு நெசவாளர்களின் குறைகளை விண்ணப்பித்திருப்பதும், கிராமக் கைத்தறி நெசவுக்காரர்கள் சங்கமொன்று அமைத்திருப்பதும்பெரிதும் வரவேற்கத் தக்கனவாகும். அவற்றின் சுருக்கமான வரலாறு அடுத்த மாதத்தில் பிரசுரிக்கப்படும்.

மகாநாட்டு நிர்வாகிகளும், தலைச்சங்கத்தினரும் இவ்விஷயத்தில் தக்க ஏற்பாடுகள் செய்வார்களென நம்புகிறோம்.

இரண்டாவதாகத் தலைச்சங்க அமைப்பினை மாற்றியமைக்கும் விஷயத்திலும், சுதேச சாமான்களை ஆதரித்தல், கலப்பு மணம் புரிதலாகிய தீர்மானங்களைச் செயலில் கொண்டு வருதற்கான திட்டங்களை வகுக்கும் விஷயத்திலும் கவனஞ் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

## அந்தோ ! பிரிந்தனர்களே !

திருவாரூர் ஸ்ரீ தி. க. சி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களும், சென்னை சைதாப்பேட்டை ஸ்ரீ. S. இரத்தினவேல் முதலியார் அவர்களும் கடந்த வாரத்தில் இவ்வுலகம் நீத்தமை கேட்டு மிக்க துன்ப மடைகின்றோம்.






ஸ்ரீ தி. க. சி. கல்யாணசுந்தர முதலியார், திருவாரூர்.

ஸ்ரீ கல்யாண சுந்தர முதலியார் நமது சமூக இயக்க ஆரம்ப கர்த்தருள் ஒருவரும், செங்குந்த மித்திரனைத் தோற்றுவித்தவர்களில் ஒருவருமாவர். குல முன்னேற்ற விஷயத்தில் நிறைந்த ஆர்வ முடையவர். செங்குந்தர் பிரபந்தத் திரட்டின் பதிப்பாளர். திருவாரூரில் நடைபெற்ற நமது நான்காவது மகாநாட்டுப் பொருட் காப்பாளராக இருந்து மகாநாடு வெற்றிகரமாக நடைபெறப் பெரிதும் உழைத்தவர். நமது வள்ளலார் ஸ்ரீ தி. நா. சபாபதி முதலியார் அவர்களின் மூத்த சகோதரர். மதராஸ் பனையகாட் கம்பெனியின் பங்காளர்.

சென்ற மாதத்தில் நாம் திருவாரூர் சென்ற போது இவர் படுக்கையில் கிடந்து நோயினால் வருந்திக்கொண்டிருந்தும் சங்க நலனைப் பற்றியும், மித்திரன் வளர்ச்சியைப்

பற்றியும் மிக்க ஆர்வத்துடன் விசாரித்ததும், தாம் நான்கு ஆண்டுகளின்முன் வழங்குவதாக வாக்களித்த பெருந் தொகையை தமக்குச் சிறிது குணப்பட்டதும் தந்து விடுவ தாகவும், நமது செங்குந்த மித்திரன் ஒழுங்காய் நிலைத்து நடைபெறத் தாம் விரும்புவதால் அதனை மித்திரன் மூல தனத்திற் சேர்க்க வேண்டுமென்றும், மித்திரன் நிதியைப் பெருக்குதற்குத் தகுந்த முயற்சியை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினர். இதிலிருந்தே இவர்களின் குலாபிமானம் நன்கு விளங்கும். இவர் 9-1-35 புதன்கிழமை இரவு 8 மணிக்கு உயிர் நீத்தார். இவரது பிரிவு நமக்குப் பெரு நஷ்டமாகும்.

ஸ்ரீ ரத்தின வேல் முதலியார் அவர்கள் நமது தலைச்சங் கத்தின் உபதலைவர்களுள் ஒருவர். நல்ல அறிவும் உலகானுபவ மும் நிறையப்பெற்றவர். சைதாப்பேட்டை நகரசபையின் உப தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தவர். நமது சங்கவளர்ச்சியில் நிறைந்த பற்றுத லுடையவர். இவர் அடிக்கடி உடல்நலமின்றி யிருந்தன ராயினும் இவ்வாறு திடீரென நேருமென எவரும் நினைக்கவே யில்லை. சென்ற மாதம் நமது வள்ளலார் முதலி யோர் சென்று இவரைக் கண்டபோது மித்திரன் நிதி திரட்ட வேண்டு மென்பதில் அளவிறந்த ஆர்வங்காட்டித் தாம் ஒரு போஷகரா யிருக்க விரும்பிக் கையொப்ப மிட்டதோடு தமது நண்பர்களையும் போஷகர்களாகவும், பரம்பரைச் சந்தாதாரர் களாகவும் சேர்த்து உபகரித்தனர். இவர் பக்க வாதத்தால் திடீரென 17-1-35-ம் தேதி இவ்வுலகம் நீத்ததானது நமது தலைச்சங்கத்திற்கோர் நஷ்டமேயாகும்.

இவ்விருவர்களது பிரிவால் வருந்தும் இவர்களது குடும் பத்தினர்க்கு நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்
### விலை குறைக்கப்பட்டிருக்கிறது

31-3-35-வரையில் மட்டும் கீழ்க்கண்டபடி விலைகள் குறைத்துத் தரப்படும். அதன்பின் இவ்விலைக்குக் கிடைக்காது.

| | பழைய விலை | | | புதிய விலை | | |
|---|---|---|---|---|---|---|
| செங்குந்தர் பிரபந்தத் திரட்டு | 2 | 8 | 0 | 1 | 8 | 0 |
| செங்குந்தர் புராணம் | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| ஒட்டக்கூத்தர் படம் | 1 | 4 | 0 | 0 | 12 | 0 |
| மித்திரன் பைண்டு வால்யூம் | 1 | 8 | 0 | 0 | 12 | 0 |

மகாநாட்டில் திறக்கப்படும் 'செங்குந்த மித்திரன்' காரியாலயத்திலும் இதே விலைக்கு விற்கப்படும்.

# "செங்குந்த மித்திரன்" 9-வது ஆண்டு
# வரவேற்புப் பாக்கள்

(திரு. சி. ச, கந்தையா அவர்கள், கரவை)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

அன்னைத் தமிழ்நா டாற்றுதவத் தாற்செங் குந்த ரரும்பணியால்
பன்னற் கரிய பெருங்கலைஞர் பற்றக் கருதும் வேட்கையினுல்
நின்னைப் பயந்தாள் கவிஞெழுகும் நீங்காத் தமிழ்வா சனைகமழும்
சென்னைத் தேவி அன்னவளின் சேயே! சோதிச் செழுஞ்சுடரே. (1)

சிந்தைக் கினியசெ ழுந்தேனே! சேம நிதியே! சிட்டர்களுக்
கிந்தப் புவியி லோர்கல்னே! எந்தாய்! உந்தன் இசைபரவ
நந்திக் குலத்தில் வந்துதித்த நாதன் காஞ்சி நாகலிங்கன்
வந்தித் தீன்றான் சங்கரனை வாராய்! முத்தே! மித்திரனே! (2)

குலத்திற் பெருஞ்செங் குந்தமதில் கோடித் தவமே யுருவாக
நிலத்திற் பிறந்த நாயகமே! நெடுவே லண்ணல் அடியவராய்
நலத்திற் சிறந்த நவவீரர் நற்கோத் திரத்து ணீபிறந்தாய்
புலத்திற் பெரியோய்! அரும்போதப் பூணே! வாராய் பூரணமே!

திருவா ரூரிற் சபையரயன் செய்ய கமலத் தேவியருள்
பெருவா ரிதிபோ லுறப்பெற்றோன் பேரார் வத்தோ டாதரிக்க
குருவே யாகிக் குலவியவெங் கோன்மா ணிக்க வாசகனும்
அருமா மணியும் பவனியிவண் அனுப்ப வாராய் ஆரமுதே! (4)

குந்தர் குலத்திற் கோரேறே! கோனே! குருடர்க் குணர் வளிக்கும்
நந்தா விளக்கே! நாயகனே! நாலீ ராண்டு நலங்கிளர
வந்தா யிற்றென் கண்மணியே! வயதும் மும்மூன் றெண் மணியே!
எந்தாய்! உதித்த திவ்வாண்டும் உயரப் பவனி உலவிட வா! (5)

கழலீண் டியசேய் துணைக்குலத்துட் கருங்கன் மனத்துக் கயவர்களுன்
அழகின் முறுவற் பூக்கண்டிங் கரசே! தூய்மை யடையாரேல்
மழலைச் செஞ்சொன் மணிப்புனலான் மன்னுஞ் சோதி மயமாவர்
உளமே யறியச் செப்புகின்றேன் உயிரே! வாராய்! உத்தமனே. (6)

வண்ணக் கமல வதனமதை வையம் புரக்கும் வல்லரசே!
கண்ணுக் குருவங் கவினவிவண் காட்டாய் கவிஞர் கற்பகமே!
விண்ணின் றிழிந்த நந்நீர்போல் வெற்று நிலமொன் றற்றேக
தண்ணென் குதலைத் தாதவிழத் தேர்மேல் வாராய் தெள்ளமுதே. (7)

விண்ணிற் கதிரோ னின்னருளால் வையம் பகலை வாங்கிடுமால்
கண்ணின் மணியே! காமர் கலைக் கடலை யுன்னிற் கவர்ந்துண்டு
மண்ணின் மாந்தர் மகிழுகிறார் மன்னா! குந்தர் மித்திரனே!
எண்ணித் தொழுது வழுத்துகின்றேன் எந்தாய்! செந்தா மரைத்
[தாளே.

தூய முனிவன் றிருமேனி தொல்லைச் சனக னாதியர்க்கு
மேய மூன்றா டரைக்கோடி மோனக் கற்ப மருளளித்தால்
நேயற் கிதயங் களிகூர நிலவும் பவனி உலவிடுவோய்!
தீயென் வதனங் கணப்பொழுதில் தீய்க்கும் மயலைச் சுடர்க்
[கொழுந்தே!

திசையெங் கணா நின் றேன்சொட்டும் தெவிட்டா விடயச் சுவை
[யமுதை
நசையின் பெருக்கா னாமள்ளி நனிதின் றினிமை நுகர்ந்தோமால்
வசையில் பவனி வருபவனே! வையத் தரசே! மித்திரனே!
விஜய முனக்கெஞ் ஞான்றினிலும் மிளிர விறையை வழுத்துதுமே!

## மகாநாடு சப்பந்தமான கடிதங்கள்

செங்குந்தமித்திரன் ஆசிரியர் திருவாளர் பி. செ. மாணிக்க வாசக முதலியார் அவர்களுக்கும், ஐந்தாவது மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினருக்கும் எழுதுவது.

ஐயா! வடஆற்காடு ஜில்லாவின் சார்பாக திருவத்திபுரத்தில் நமது ஐந்தாவது மகாநாடு முதல் மகாநாட்டைப்போல் சிறப்பாக நடைபெறுவதற்கான தீவிர முயற்சிகள் நடப்பதை யறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். சங்கரநயினார் கோவில் செங்குந்தர் அபி விருத்தி சங்கக் காரியதரிசி திரு. S. பிச்சாண்டி முதலியார் அவர்கள் இங்கு மகாநாடு சம்பந்தமாக வேலை செய்துகொண் டிருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவி லிருந்து பெருந்திரளானவர்கள் மகா நாட்டில் கலந்துகொள்ள வேண்டிய பிரயத்தனங்களை எடுத்துக் கொண்டிருப்பதோடு ஷை ஜில்லாவிலுள்ள பிரமுகர்களுக்குக் கடிதப் போக்கு வரத்து நடத்திக்கொண் டிருக்கிறோம்.

பத்திரிகைகளில் மாதர் மகாநாடு பற்றி வேண்டுகோள் பல வெளிவந்திருப்பதைத் தாங்கள் பார்த்திருக்கலாம்; வேண்டுவன செய்யவும். நானும், காரியதரிசி அவர்களும் அம்பாசமுத்திரம் பஞ் சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ R. வேலாயுத முதலியார் அவர்களை 28-12-34-ல் சந்தித்து அடுத்த மகாநாட்டைத் திருநெல்வேலி ஜில்லாவில் நடத்துவதுபற்றிய விஷயங்களைக் கலந்தோம். அவர்கள் அது விஷயத்தில் மிக்க ஊக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். திரு முதலியார் அவர்கள் இந்த ஜில்லாவின் பல பிரமுகர்களையும், வியாபாரிகளையும் ஐந்தாவது மகாநாட்டுக்கு அழைத்துக்கொண்டு வர பிரயத்தனம் செய்கிறார்கள். சங்கரன்கோவிலி லிருந்து நாங்கள் பலரும் திரு முதலியார் அவர்களுடன் வந்து சேர்வோம். மகாநாடு வெற்றிகரமாக முடிவுபெற ஆண்டவனை வழுத்துகிறோம்.

திருவுடையான் முதலியார்.



## வரவேற்புக் கழகத்தினருக்கு
## ஓர் வேண்டுகோள்

நமது ஐந்தாவது மகாநாடு, வரும் தைமீ 20, 21-ம் தேதிகளில் வட ஆற்காடு ஜில்லாவின் சார்பாக திருவத்திபுரத்தில் நடைபெறப் போவதாக அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நடைபெற்ற நான்கு மகாநாடுகளும் சமூக மகாநாடு, வாலிபர் மகாநாடு, வர்த்தகர் மகாநாடு என்ற பிரிவுகளுடன் போற்றத்தகுந்த முறையில் சிறப்பாக நடைபெற்றுள்ளன. ஆனால் பெண்கள் மகாநாடு இல்லாதிருப்பது ஓர் பெரும் குறையேயாகும். நமது முன்னேற்ற முயற்சி தீவிரமாய் பலனளியாததற்கு இது ஓர் காரணம் என்பதில் ஐயமில்லை.

நமது நாட்டிற்குப் பெண்களின் முன்னேற்றமே பிரதானம். ஒரு நாட்டின் க்ஷேமமும் முன்னேற்றமும் அந்நாட்டின் பெண்களையே பொருத்திருக்கின்றது. ஆண்கள் எவ்வளவு சீர்திருத்த சிந்தையோடிருந்தாலும், சீர்திருத்தக் கொள்கைகளை நடைமுறையில் செய்ய இயலாது போவதற்குக் காரணம் பெண்களின் முட்டுக் கட்டையே. எனவே, முதலாவதாக பெண்களுக்கே அறிவையும், உலகானுபவத்தையும், சீர்திருத்தத்தையும்வழங்கவேண்டுவது இன்றி யமையாக் கடமை என்பது ஒருதலை. ஆகையால், ஐந்தாவது மகா நாட்டில் பெண்கள் மகாநாட்டையும் கண்டிப்பாகக்கூட்டி சிறப்பிக்க மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:

ச. பிச்சாண்டி முதலியார், சங்கரன்கோயில்

## நிர்வாகிகளுக்குச் சிறந்த விண்ணப்பம்

திருவத்திபுரத்தில், தைமீ 20, 21-தேதிகளில் ஐந்தாவது மகா நாடு நடைபெறப் போவதாக தினமணி, இந்தியா, பகுத்தறிவு பத்திரிகைகளின் வாயிலாக அறிந்து பரவச மடைகிறேன். நடைபெற்ற மகாநாடுகளின் தீர்மானங்களெல்லாம் உருக்கொள்ளுகின்றன. மகா நாட்டுத் தீர்மானங்களில் முக்கியமானவை ஒற்றுமைத் திருமணமும், விதவா விவாகமுமேயாகும். இவை இப்போது சில இடங்களில் நடைபெறுவதிலிருந்து மகாநாடுகள் எவ்வளவு பயனுடைத்தென்பது தெளிவாகிற தன்றோ?

மகாநாடுகளினால் நமது சமூகம் அடைந்துள்ள பலன்கள் மிகப் பல. அவற்றை யெல்லாம் இங்கு வரையின் பெருகும்.

ஐந்தாவது மகாநாட்டிலும் சமூக நலனுக்குரிய பல தீர்மானங்களை நிறைவேற்றவும், மகாநாட்டுத் தீர்மானங்களைத் திட்டம் வகுத்து தீவிர வேலை செய்யவும் மகாநாட்டு நிர்வாகிகளையும், தலைச்சங்கத்தினரையும் வேண்டுகிறேன்.

S. P. V. P. வாலசுப்பிரமணியன்,
ஸ்ரீ முருகானந்த வைத்தியசாலை, தேவகோட்டை.

அன்பார்ந்த ஐயா!

தங்களது செங்குந்த மித்திரனின் எடிட்டோரியல் காலத்துள்ள வியாசத்தை மிக சமீபத்திலேயே காணநேர்ந்தது. காங்கிரஸின் பல அலுவல்களால் யான் பல ஊர்களுக்குச் செல்ல வேண்டியிருந்ததால் தலைச்சங்க சம்பந்தமாகவும், மகாநாடு சம்பந்தமாகவும் தங்களுக்கு எழுதுவதற்கும், சங்கத்தில் மீட்டிங்கு நடத்தி அதற்கு வேண்டுவன உடனே செய்வதற்கும் சாவகாசமில்லாததற்கு மிக வருந்துகின்றேன். கடந்த மாத மித்திரன் தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளன பொன்னேபோல் போற்றத்தக்கன. முக்கியமாக தலைச்சங்கத்திற்குக் கூறிய யோசனை எனது நெடுநாளைய அவாவினைப் பூர்த்தி செய்ததெனவே கருதுகின்றேன். திருவத்திபுரத்தில் நடைபெறும் மகாநாட்டுக்கு நாங்கள் வருகின்றோம். அதுசமயம் ஜில்லா, தாலுக்கா கமிட்டிகளின் அவசியத்தைப்பற்றிய தீர்மானத்தில் நாங்களும் கலந்து கொள்ளுகின்றோம். தாங்கள் எவ்வாறேனும் அதனை அமுலுக்குக் கொண்டு வருவீர்களென நம்புகின்றோம். ஜில்லா சங்கங்கள் அமைக்கப்படின் இந்த ஜில்லாவில் ஜில்லா மகாநாடுகள் ஆண்டுதோறும் நடைபெறவும், கிராமந்தோறும் பிரசாரம் செய்யவும் சௌகரியமா யிருக்கும்.

K. A. காசி விஸ்வநாதன், திருச்செங்கோடு.

## செங்குந்த மித்திரன் ஆசிரியர் அவர்கட்கு

அன்புள்ள ஐயா !

நான் எனது சொந்த ஊரைவிட்டு இங்கு வந்து மூன்று ஆண்டுகளாயின. தங்கள் மித்திரனை விடாது படித்து வருகிறேன். என்னைக் காட்டிலும் எனது மனைவியே மித்திரனைக் கண்டதும் அளவுகடந்த சந்தோஷங்கொண்டு வாசித்து மகிழ்வாள்.

சென்ற மார்கழி மாத மித்திரனைப் பிரித்ததும் அதில் நமது ஐந்தாவது மகாநாடு திருவோத்தூரில் நடைபெறப் போவதாகவும், அங்கு பெண்கள் சம்பந்தமான தீர்மானங்களின்மீது எழுகின்ற விவாதங்களில் பெண்களும் கலந்து அவரவர் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாமென்று மிருந்ததுகண்டு என் மனைவியும் மகாநாட்டுக்கு வரவேண்டுமென வற்புறுத்திக் கொண்டிருக்கிறாள். நானும் ‘பார்க்கலாம்’ என்று சொல்லி வருகிறேன்,

எனது மனைவி, பெண்கள் முன்னேற்ற விஷயமாய் மகாநாட்டில் கலந்துகொண்டு தனது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க விரும்புகிறாள்.

எனவே, கீழ்க்கண்ட விஷயத்தை மகாநாட்டில் தெரிவித்துக் கொள்ள அனுமதிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. பெண்கள், குடும்ப வேலைகள் செய்ததுபோக உள்ள ஒழிவு நேரங்களில் தக்க அறிவைப் பெருக்கவல்ல நீதி நூல்களைப் படிக்கவும், நூல் நூற்றல், பின்னல் போடுதலாகிய வருமானமுள்ள தொழில்களில் கவனம் செலுத்தவும் வேண்டும்.

A. M. முதலியார், பெங்களூர்

## தென்னிந்திய செங்குந்தர். ஐந்தாவது மகாநாடு

## வசூல் விவரம்

### மணப்பாக்கம்

| | |
|---|---|
| பு. சடையாண்டி முதலியார் | 1 |

### திமிரி

| | |
|---|---|
| சு. ரா. பொன்னுசாமி முதலியார் | 15 |
| கொ. சு. குப்புசாமி முதலியார்<br>பொன்னுசாமி முதலியார் | 5 |
| சி. கிஷ்டப்ப முதலியார் | 1 |
| த. தெ. நாராயணசாமி முதலியார் | 2 |
| த. சண்முக முதலியார் | 2 |
| மு. காளத்தி முதலியார் | 1 |
| பி. மு. குப்புசாமி முதலியார் | 3 |
| பி. அப்பாதுரை முதலியார் | 1 |
| அ. நா. முருகப்ப முதலியார்<br>எ. முருகேச முதலியார் | 1 |
| பு. அ. பொன்னுரங்க முதலியார் | 1 |
| | 32 |

### செஞ்சீவிராயன்பேட்டை

| | |
|---|---|
| அருணசல முதலியார் | 2 |

### வேளாப்பாக்கம்

| | |
|---|---|
| கி. அ. கந்தசாமி முதலியார் | 2 |

### திருப்பத்தூர்

| | |
|---|---|
| கா. அ. சண்முக முதலியார் | 50 |
| தி. கா. ரத்தினவேல் முதலியார் | 10 |
| பா. வெ. சென்னமூர்த்தி முதலியார் | 25 |
| ஆ. கோ. சாரங்கபாணிமுதலியார் | 10 |
| பெ. மு. முருகைய முதலியார் | 15 |
| | 110 |

### சேலந்தம்பள்ளி

| | |
|---|---|
| கிராமப்பொதுவில் எஜமானர் கொ. சகாதேவ முதலியார் | 10 |

### கோடுங்காலூர்

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் வையாபுரி முதலியார் | 50 |

### தெள்ளாறு

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | 25 |
| கு. ம. மாசிலாமணி முதலியார் | 1 |
| | 26 |

### குன்னகம் பூண்டி

| | |
|---|---|
| புதூர் பிள்ளையார் கோவில் வீதி பொதுவில் சு. நடேச முதலியார் வகையரா | 10 |
| குண்ணகம் பூண்டி கிராமப் பொதுவில் விநாயக முதலியார் | 5 |
| குண்ணகம் பூண்டி மேட்டுத் தெரு கிராமப் பொதுவில் அகு. பஞ்சாக்ஷர முதலியார், வ. சு. உத்தண்டி முதலியார் | 5 |

### குன்னகம் பூண்டிபுதூர்

| | |
|---|---|
| அயனூர் கோயில் வீதி கந்தசாமி முதலியார், அய்யாவுமுதலியார் வகையரா | 10 |
| ஷை யூர். அயனூர் கோயில் தெரு நீலகண்ட முதலியார், அய்யாதுரை முதலியார் வகையார் | 10 |
| ஷை யூர். முனுசாமி முதலியார் வகையார் | 5 |
| | 45 |

### அம்மையப்பட்டு

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் முனுசாமி முதலியார் | 50 |

### மேகளத்தூர்

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் முருகப்ப முதலியார்<br>அ. தண்டாயுதபாணி முதலியார் | 5 |
| கா. சிங்கார முதலியார் | 1 |
| அ. தண்டாயுதபாணி முதலியார் | 2 |
| | 8 |

### மின்னல்

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | $12\frac{1}{2}$ |
| பட்டு. முத்தப்ப முதலியார் | 1 |
| பட்டு. பரசுராம முதலியார் | 4 |
| | $17\frac{1}{2}$ |

### மின்னல் நரசிங்கபுரம்

| | |
|---|---|
| பு. மு. கோவிந்த முதலியார் | 7 |
| செ. குட்டியப்ப முதலியார் | 1 |
| செ. முனுசாமி முதலியார் | 1 |
| க. மு. பெரியண்ண முதலியார் | 1 |
| மா. குமரப்ப முதலியார் | 1 |
| ம. கு. சித்தப்ப முதலியார் | 1 |
| ம. இலக்ஷ்மண முதலியார் | 1 |
| கா. குள்ளப்ப முதலியார் | 1 |
| வாழி. குள்ளப்ப முதலியார் | 1 |
| கா. கோவிந்த முதலியார் | 1 |
| கா. நடேச முதலியார் | 1 |
| வி. கு. ராமலிங்க முதலியார் | 1 |
| மு. செஞ்சு முதலியார் | 1 |
| வி. சடையப்ப முதலியார் | 1 |
| | 20 |

### தருவராஜப் பேட்டை

| | |
|---|---|
| குமர. அருணசல முதலியார் | 10 |
| சப்பாணி. முனுசாமி முதலியார் | 3 |
| குமர. வேலப்ப முதலியார் | 3 |
| குமர. முத்துவேல் முதலியார் | 3 |
| டி. விநாயக முதலியார் | 1 |
| சிவபாத முதலியார் | 1 |
| தணிகாசல முதலியார் | 1 |
| நாகப்ப முதலியார் | 1 |
| தெ. கந்தப்ப முதலியார் | 1 |
| மூளகா. சஞ்சீவி முதலியார் | 1 |
| இராமப் பொதுவில் | 5 |
| பெரமாண்ட முனுசாமி முதலியார் | 10 |
| தளவா. குப்பண்ண முதலியார் | 10 |
| T. M. கன்னியப்ப முதலியார் | 5 |
| ம. முத்தப்ப முதலியார் | 2 |
| குட்டி சிதம்பர முதலியார் | 20 |
| தளவா. கோவிந்த முதலியார் | 1 |
| இராமப் பொதுவில் | 10 |
| நாசி. நெல்லியப்ப முதலியார் | ½ |
| | 88½ |

### நாகவேடு

| | |
|---|---|
| பூ. கி. காட்டகத்தி முதலியார் | 12 |
| கொடகல். முனுசாமி முதலியார் | 2 |
| S. K. முனுசாமி முதலியார் | 3 |
| S. V. தணிகாசல முதலியார் | ½ |
| | 17½ |

### சமுத்துராயன் பேட்டை

| | |
|---|---|
| கு. மு. அண்ணமலை முதலியார் | 2 |
| நெ. கி. முத்துவேல் முதலியார் | 1 |
| | 3 |

### நெம்மேலி

| | |
|---|---|
| T. R. கிருஷ்ணப்ப முதலியார் | 5 |

### ஆம்பூர் கஸ்பா

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | |
| ஆ. ம. ஆறுமுக முதலியார் வகையரா | 10 |
| பூ. ச. புட்டப்ப முதலியார் அண் சனஸ் | 16 |
| வே. மு. ரங்கசாமி முதலியார் | 2 |
| | 28 |

### ஆம்பூர் மேல்கிருஷ்ணபுரம்

| | |
|---|---|
| A. K. குமாரசாமி முதலியார் | 20 |
| N. K. சிங்கார முதலியார் | 3 |
| P. முனுசாமி முதலியார் | 5 |
| A. R. முருகேச முதலியார் | 2 |
| கிருஷ்ணபுரம் கிராமப் பொதுவில். பெரியதனம் மு. குட்டியப்ப முதலியார், குமர. நா. முனுசாமி முதலியார் | 5 |
| கை. மு. குப்புசாமி முதலியார் | 10 |
| | 45 |

### பள்ளிகொண்டா

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | 3 |
| கா. மா. முருகேச முதலியார் | 1 |
| | 4 |

### வெட்டு வானம்

| | |
|---|---|
| த. மு. அருணசல முதலியார் | 1 |
| வெ. சு. வடிவேல் முதலியார் | 1 |
| | 2 |



### குடியாத்தம்

| | |
|---|---|
| M. V. பீமராஜா முதலியார் | 100 |
| கோட்டை மு. பரசுராம முதலியார் | 15 |
| P. K. கோவிந்தப்ப முதலியார், கங்காதர முதலியார் | 15 |
| வ. சி. வெ. முனுசாமி முதலியார் | 10 |
| அ. ப. அருணகிரி முதலியார் | 5 |
| மா. அ. கோவிந்தராஜு முதலியார் | 40 |
| கு. மு. மாணிக்க முதலியார் | 10 |
| வீ. ச. சின்னதம்பி முதலியார் | 5 |
| செ. வே. ராஜகோபால்முதலியார் | 2 |
| க. தா. கோவிந்தப்ப முதலியார் | 3 |
| க. தா. தி. கெங்காதர முதலியார் | 3 |
| முத்தண்ண நாராயணசாமி முதலியார் | 5 |
| நல்லூர்பேட்டை கிராமப் பொதுவில் ஆவசி மயிலப்ப முதலியார் வகையரா | 10 |
| ரவாண்டை வேணுகோபால் முதலியார் | 3 |
| அ. மு. துரைசாமி முதலியார், சண்முக முதலியார் | 4 |
| முத்து சில வரதப்ப முதலியார் | 3 |
| தூர்க்கம் ஆறுமுக முதலியார் | 2 |
| | 235 |

### சத்துவாசாரி

| | |
|---|---|
| இ. கா. சுக்கிரமணிய முதலியார் | 35 |
| இரு. ரா. மு. குப்புசாமி முதலியார் | 15 |
| பெரியதனம். இராமசாமி முதலியார் | 5 |
| இ. அ. காளத்தி முதலியார் | 2 |
| முனுசாமி முதலியார் | 1 |
| பெ. ப. இஷ்டலிங்க முதலியார் | 4 |
| C. M. ராஜமாணிக்க முதலியார் | 2 |
| | 64 |

### பொன்னை

| | |
|---|---|
| [illegible]. கொ. பாலகிருஷ்ண முதலியார் | 6 |
| [illegible]. சிதம்பர முதலியார் | 3 |
| ப. சு. சாம்பசிவ முதலியார் | 2 |
| அ. வாசுதேவ முதலியார் | 2 |
| குள்ள. சஞ்சீவி முதலியார் | 1 |
| | 14 |

### வேடியங்காடு

| | |
|---|---|
| வேதகிரி முதலியார் | 1 |
| பெரமாண்ட முனியப்ப முதலியார் | 1 |
| சிவராம. முனியப்ப முதலியார் | 1 |
| | 3 |

### சத்திரவாடி

| | |
|---|---|
| வெங்கா. காளத்தி முதலியார் | 15 |
| நல்லந்தி மங்கபதி முதலியார் | 2 |
| தோண்டா. வெங்கடேச முதலியார், கூண்டா. கந்தசாமி முதலியார் | 4 |
| | 21 |

### புத்தூர்

| | |
|---|---|
| தாசரி முருகப்ப முதலியார் மின்னல் எல்லப்ப முதலியார் மூலம் கிராமப் பொதுவில் | 10 |
| மின்னல் எல்லப்ப முதலியார் | 3 |
| | 13 |

### புத்தூர். கோவிந்தபுரம்

| | |
|---|---|
| பெரியதனம். பல்லாரி. கோவிந்த முதலியார், பே. அர்ச்சுன முதலியார், பே. குப்புசாமி முதலியார், பே. கோபால் முதலியார் மூலம் கிராமப் பொதுவில் | 4 |

### நாராயண வனம்

| | |
|---|---|
| பெரியதனம். முடிப்புலி செங்கழனீ முதலியார் மூலம் கிராமப் பொதுவில் | 5 |

### நாராயண வனம் கோட்டை கீழவரம்

| | |
|---|---|
| பெரியதனம். ராமமுனியப்ப அண்ணமலை முதலியார், மே. வெங்கிடேச முதலியார் கிராமப் பொதுவில் | 2½ |

**நகரி புதுப்பேட்டை**

| | |
|---|---|
| வி. க. முருகப்ப முதலியார் | 5 |

**ஏகாம்பர தப்பம்**

| | |
|---|---|
| சா. ஆ. கோபால் முதலியார் | 4 |
| முத்துமாணிக்க முதலியார் | 3 |
| குள்ளி. கோவிந்த முதலியார் அண்டு பிரதர்ஸ் | 2½ |
| கோ. தேசப்ப முதலியார் அண்டு பிரதர்ஸ் | 2 |
| சாந்தான் அண்டு கோ | 2 |
| | 13½ |

**தக்கோலம்**

| | |
|---|---|
| A. R. செல்லப்ப முதலியார் | 50 |
| T. K. கந்தசாமி முதலியார் | 5 |
| சில. குப்புசாமி முதலியார் | 7 |
| நை. ஜலநாத முதலியார் | 5 |
| தாயுமானவ முதலியார் | 5 |
| மணியம் சிங்காரவேல் முதலியார் | 2 |
| செ. முருகப்ப முதலியார் | 3 |
| க. ஆறுமுக முதலியார் | 5 |
| நா. சு. தங்கவேல் முதலியார் | 3 |
| கட. குப்புசாமி முதலியார் | 3 |
| சில. வீரராகவ முதலியார் | 4 |
| கா. வேலு முதலியார் | 6 |
| மு. சு. முருகப்ப முதலியார் | 2 |
| பழனி. அருணசல முதலியார் | 1 |
| செ. சிதம்பர முதலியார் | 1 |
| செ. சுதாசிவ முதலியார் | 1 |
| செ. தணிகாசல முதலியார் | 1 |
| செ. சிங்கார முதலியார் | 1 |
| கந்தப்ப சண்முக முதலியார் | 1 |
| | 106 |

**சோளிங்கபுரம்**

| | |
|---|---|
| பட்டணம். முனுசாமி முதலியார் அண்டு பிரதர்ஸ் | 25 |
| ஆதிமூல முதலியார் | 5 |
| பட்டணம். அருணசல முதலியார் | 10 |
| நா. ல. பூ. பெரமாண்டை முதலியார் | 10 |
| கூ. கோவிந்த முதலியார் | 5 |
| கூ. மு. நரசிம்ம முதலியார் | 5 |
| மே. ஆறுமுக முதலியார் | 5 |
| மு. பரசுராம முதலியார் | 1 |
| அகத்தி. கண்ணப்ப முதலியார் | 1 |
| பட்டணம். ந. சொக்கலிங்க முதலியார் | 1 |
| ஆ. நாகப்ப முதலியார் | 1 |
| தொட்டி. முத்தப்ப முதலியார் | 1 |
| சொ. முருகப்ப முதலியார் | 1 |
| சுப்ப. நா. முனுசாமி முதலியார் | 1 |
| சுப்ப. கோவிந்த முதலியார் | 1 |
| பட்டணம். பெரமாண்டை முதலியார் | 1 |
| மலையம். கு. அருணசலமுதலியார் | 5 |
| மலையம் செ. ஆறுமுக முதலியார் | 5 |
| சல்லா. சின்னமுனுசாமிமுதலியார் | 1 |
| சல்லா. பெரியமுனுசாமிமுதலியார் | 1 |
| ம. செ. சஞ்சீவி முதலியார் | 3 |
| ம. செ. சுப்பாத்தை முதலியார் | 3 |
| ம. செ. முத்தப்ப முதலியார் | 3 |
| | 95 |

**திருவத்திபுரம்—பரிதிபுரம்**

| | |
|---|---|
| பரி. வா. நடேச முதலியார் | 5 |
| சி. ஜெ. முருகேச முதலியார் } சண்முக முதலியார் } | 5 |
| C. V. சுப்பராய முதலியார் | 5 |
| | 15 |

**கிருதனம்பேட்டை**

| | |
|---|---|
| சி. ப. எல்லப்ப முதலியார் | 5 |
| க. ஆ. தியாகராஜ முதலியார் | 5 |
| தி. தா. குப்புசாமி முதலியார் } தி. தா. துரைசாமி முதலியார் } ம. ரா. சோமசுந்தர முதலியார் } | 15 |
| | 25 |

| | | |
|---|---|---|
| ஆக வசூல் மொத்தம் | ரூ | 1187½ |
| சென்றமாதம் வெளியிட்ட வசூல் | ரூ | 568¾ |
| 10-1-35 வரை மொத்த வசூல் | ரூ | 1756¼ |

விளம்பர சபைப் பிரசுரம் 5

# தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு

## திருவத்திபுரம்

நமது ஐந்தாவது மகாநாடு வடாற்காடு ஜில்லாவின் சார்பாக திருவத்திபுரம் போர்டு ஹைஸ்கூல் மைதானத்தில் நிர்மாணிக்கப்பெற்றுள்ள சபாபதிவள்ளலார் மாளிகையில் நிகழும் பவஞு தைமீ 20,21-ம் தேதி (1935ஞு பிப்ரவரிமீ 2, 3வ) சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும்.

### மகாநாட்டுத் தலைவர்கள்

சென்னை அரசாங்க உள்நாட்டு மந்திரி (Home member, Govt. of Madras) கனம். ராவ்பகதூர் A. T. பன்னீர் செல்வம், பார்-அட்-லா அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைக்கக் கனிவுடன் இசைந்துள்ளார்கள்.

அம்பா சமுத்திரம் மிராசுதார் உயர் திரு P. A. பத்மநாப முதலியார் அவர்கள் கொடியேற்று விழாவினை யாற்றுவார்கள்.

தென்காசி பாங்கரும், பிரபல வர்த்தகருமான உயர் திரு T. P. K. ஆறுமுக முதலியார் அவர்களும், மன்னார்குடி முனிசிபல் சேர்மனும், சிறந்த வர்த்தகருமான உயர் திரு. PR. RM. நடராஜ முதலியார் அவர்களும், சென்னை, உயர்தர நீதிமன்ற வழக்கறிஞர் உயர்திரு. V. இரத்தின முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்களும் முறையே சமூக, வர்த்தகர், வாலிபர் மகாநாடுகளுக்குத் தலைமை வகிப்பார்கள்.

மகாநாட்டு வேலைகள் வெகு துரிதமாய் நடைபெற்று வருகின்றன. வசூல் கமிட்டி, பந்தல் கமிட்டி, முதலிய உப கமிட்டியார் தத்தம் வேலைகளைத் தீவிரமாய்ச் செய்து வருகின்றனர். எதிர்பார்த்ததற்குமேல் தொண்டர்கள் மனுச் செய்துள்ளனர். விரைவில் அவர்கள் பயிற்சியளிக்கப்படுவர்.

### மகாநாட்டுக் கட்டணம்

| | |
|---|---|
| வரவேற்புச் சிறப்பு அங்கத்தினர் கட்டணம் | ரூ. 3 |
| வரவேற்பு அங்கத்தினர் கட்டணம் | ரூ. 2 |
| பிரதிநிதி கட்டணம் | ரூ. 1 |

இம் மூவர்களது டிக்கட்டுகளுடன் சாப்பாட்டு டிக்கட்டும் சேர்த்து அளிக்கப்படும். பார்வையாளர்கள் (விசிட்டர்கள்) மகாநாட்டுக் கொட்டகையில் மட்டும் கட்டணம் இன்றி இனமாக அனுமதிக்கப்படுவார்கள். பெண் பிரதிநிதிகளனை வரும் மகாநாட்டுக் கொட்டகையிலும், சாப்பாட்டு விடுதியிலும் டிக்கட் இன்றி அனுமதிக்கப்படுவர். ஏனையோர் சாப்பாட்டு விடுதியில் டிக்கட் இன்றி அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஒவ்வொரு கிளைச்சங்கமும் மகாநாட்டுக்குத் தேர்ந்தெடுத்தனுப்பும் பிரதிநிதிகளின் பெயர்களை 27-1-35-க்குள் தெரிவித்து விடவேண்டும்.

விளம்பர சபைப் பிரசுரம் 6

# தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு

## திருவத்திபுரம்

நிகழும் தைமீ 20, 21-ம் தேதிகளில் திருவத்திபுரத்தில் நடைபெறப்போகும் ஐந்தாவது மகாநாட்டுக்குத் திரண்ட பிரதிநிதிகள் பல ஜில்லாக்களி லிருந்தும் வருவார்களெனத் தெரிகிறது. பிரதிநிதி டிக்கட்டுகள் மிக அதிகமாய் விற்பனை யாகி வருகின்றன. பற்பல ஆலோசனைகளும், அபிப்பிராயங்களும் தெரிவித்து வெளியிலிருந்து கிடைக்கும் கடிதங்களைப் பார்க்கும்போது இம்மகாநாடு மிக உற்சாகம் தந்திருப்பதாக ஊகிக்கவேண்டி யிருக்கிறது. இவ்வுற்சாகத்திற்கு முக்கிய காரணம் தலைச்சங்கத்தின் உறுப்பினர் தேர்தல் இம் மகாநாட்டுச் சமயம் நடைபெறவேண்டி யிருப்பதும், தலைச்சங்க அமைப்பை ஜில்லா, தாலூகா, கிராமச் சங்கங்களாக மாற்ற பலர் அவாவி யிருப்பதும், பெண்கள் சம்பந்தமான தீர்மான விவாதங்களில் பெண்களும் கலந்து கொள்வார்கள் என்பதுமே யாகும்.

தீர்மானங்கள் வெளியூர்களிலிருந்து தினந்தோறும்வந்து கொண்டே இருக்கின்றன. தீர்மானங்க ளெல்லாம் 27-1-35-க்குள் கிடைக்குமாறு அனுப்பிவிடுதல் வேண்டும்.

குடும்பத்துடன் மகாநாட்டுக்கு வர விரும்புவோர் முன்னதாகத் தெரிவித்து விடவேண்டும், அவ்வாறு தெரிவித்தால் அவர்கட்குத் தனி இடங்கள் அமைக்க சௌகரியமாக இருக்கும்.

பிரதிநிதிகள் தங்கள் சொந்த படுக்கைகளைக் கொண்டு வருவது நலம். ஒவ்வொரு சாமான்மீதும் தங்கள் பெயரும் விலாசமும் எழுதிய சீட்டுகள் ஒட்டப்பட் டிருக்கவேண்டும்.

### திருவத்திபுரம் வருதற்கு வழி

மகாநாடு நடைபெறும் திருவத்திபுரம் ஒரு ரயில்வே ஸ்டேஷனல்ல. என்றாலும் நாற்புறங்களிலிருந்தும் பஸ் வசதிகள் இருக்கின்றன. திண்டிவனம், காட்பாடி, காஞ்சிபுரம் ஆகிய மூன்றிடங்கட்கும் மகாநாட்டு ஸ்பெஷல் பஸ் பல ஏற்பாடு செய்யப்படும். எந்த இடங்களிலிருந்து வருவோரும் இந்த மூன்று ஸ்டேஷன்களில் இறங்கியே பஸ் மூலம் திருவத்திபுரம் வந்து சேரவேண்டும்.

சிலோன், மதுரை, தஞ்சை முதலிய தெற்குப் பக்கத்திலிருந்து வருவோர் திண்டிவனத்திலும், பெங்களூர், கோவை சேலம் முதலிய மேற்குப் பக்கத்திலிருந்து வருவோர் காட்பாடி ஜங்ஷனிலும், சென்னை, சித்தூர், சோளிங்கபுரம் முதலிய இடங்களிலிருந்து வருவோர் காஞ்சிபுரத்திலும் இறங்கிவிடவேண்டும்.

இந்த மூன்று ஸ்டேஷன்களிலும் தொண்டர்கள் பிரதிநிதிகளை வரவேற்க எப்பொழுதும் தயாராக இருப்பார்கள்.

விளம்பர சபையார்.

# தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு

## திருவத்திபுரம்

அன்புடைய ஐயா!

நிகழும் பவஹு தைமீ 20, 21உ (1935 ஹு பிப்ரவரிமீ 2, 3) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது சமூக, வர்த்தகர், வாலிபர் மகாநாடுகள் பின் பக்கங்களில் குறித்துள்ள நிகழ்ச்சி நிரலின்படி திருவத்திபுரம் போர்டு ஹைஸ்கூல் மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'சபாபதி வள்ளலார் மாளிகை'யில் நடைபெறும்.

தாங்கள், அன்பர் பலருடன் வந்து மகாநாடுகளைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்.

வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
**M. V. பீமராஜா முதலியார்,**
(முனிசிபல் சேர்மன், குடியாத்தம்)

வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
**A. R. செல்லப்ப முதலியார்,**
(மிராசுதார், தக்கோலம்)

வரவேற்புக் கழகத் தலைவர்
**M. லோகநாத முதலியார்,**
(வடார்க்காடு ஜில்லா போர்டு மெம்பர்)

பொதுக் காரியதரிசி
**K. S. குப்புசாமி முதலியார்,**
(மிராசுதார் & தர்மகர்த்தா)

திருவத்திபுரம்
20—1—35

# நிகழ்ச்சி நிரல்

## பவ௵ தை௴ 20௳ (2-2-35) சனிக்கிழமை

காலை

7-30 திருவோத்தூர் ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயத்திலிருந்து தலைவர்களை ஊர்வலமாக 'சபாபதி வள்ளலார் மாளி'கைக்கு அழைத்து வருதல்.

8-30 கோடி யேற்று விழா

கொடி வணக்கம்.

கொடியேற்றும் பெரியாராகிய அம்பாசமுத்திரம் மிராசுதார் உயர்திரு P. A. பத்மநாப முதலியார் அவர்களுக்கு வரவேற்பு நல்லுரை.

கொடியேற்றும் பெரியாரது உபந்யாசமும், கொடியேற்றலும்.

10-30 மகாநாடு ஆரம்பம்

கடவுள் வணக்கம்.

திறப்பு விழாவினை யாற்றும் சென்னை அரசாங்க உள்நாட்டு மந்திரி கனம் ராவ்பகதூர். A. T. பன்னீர் செல்வம், (பார்-அட்-லா) அவர்களுக்கு உபசாரப் பத்திரம்.

திறப்பாளரின் பேருரை.

வரவேற்புத் தலைவராகிய ஜில்லாபோர்டு அங்கத்தினர் உயர்திரு. M. லோகநாத முதலியார் அவர்களது வரவேற்பு உபந்யாசம்.

தலைவர் தேர்தலும் உபசாரமும்

மகாநாட்டுத் தலைவராகிய தென்காசி பாங்கர் உயர்திரு T. P. K. ஆறுமுக முதலியார் அவர்களது தலைமைப் பேருரை.



மாலை

2-0 விஷயாலோசனைக் கழகம்

4-0 வர்த்தகர் மகாநாடு

வரவேற்புத் தலைவராகிய குடியேற்றம் முனிசிபல் சேர்மன் உயர் திரு. M. V. பீமராஜா முதலியார் அவர்களது வரவேற்பு உபந்யாசம்.

தலைவர் தேர்தலும் உபசாரமும்.

வர்த்தகர் மகாநாட்டுத் தலைவராகிய மன்னார்குடி முனிசிபல் சேர்மன் உயர் திரு. PR. RM. நடராஜ முதலியார் அவர்களது தலைமைப் பேருரை.

5-0 செங்குந்த மித்திரன் பெரும் போஷகர்களின் உருவப் படத் திறப்பு.

5-30 தீர்மானங்கள்

இரவு

8-30 விஷயாலோசனைக் கழகம்

## பவ௵ தை௴ 21௳ (3-2-35) ஞாயிற்றுக்கிழமை

காலை

7-0 ஹைஸ்கூல் ஹாலில் தலைச்சங்கப் பொதுக்கூட்டம்.

9-0 வாலிபர் மகாநாடு

வரவேற்புத் தலைவராகிய தக்கோலம் மிராசுதார் உயர் திரு A. R. செல்லப்ப முதலியார் அவர்களது வரவேற்பு உபந்யாசம்.

தலைவர் தேர்தலும், உபசாரமும்.

வாலிபர் மகாநாட்டுத் தலைவராகிய சென்னை, ஹைகோர்ட் அட்வகேட் உயர் திரு. V. இரத்தின முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்களது தலைமைப் பேருரை

10-0 தீர்மானங்கள்

மாலை

2-30 தீர்மானங்கள்

5-0 தலைவர்களின் முடிவுரை

6-0 வந்தனோபசாரம்

6-30 தலைவர்களின் ஊர்வலம்



திரு. V. இரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.,

அட்வகேட், சென்னை.

இவர், சென்ற மாதத்தில் ஜில்லா நீதிபதியாகத்
தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.



திரு. V. V. C. R. முருகேச முதலியார் அவர்கள்
இவர் சமீபத்தில் நடைபெற்ற ஈரோடு நகரசபைத் தேர்தலில் சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



முத்தண்ணா. நாராயணசாமி முதலியார் அவர்கள்
குடியேற்றம் நகரசபைத் தேர்தலில் இவர் சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## திருவத்திபுரம் என வழங்கும்
# திருவோத்தூர் மான்மியம்

நமது ஐந்தாவது மகாநாட்டை நடத்துவதற்குத் தேர்ந்தெடுத்துள்ள திருவோத்தூர் என்னும் திவ்யதலமானது காஞ்சீபுரத்திற்குத் தென்மேற்கில் 18-வது மைலில் சேயாற்றங்கரையில் அழகாக அமைந்துள்ளது. செந்தமிழ்க் கடவுளாகிய நந்தம் முருகப் பெருமான் அகத்திய முனிவருக்கு உபதேசித்தருளிய சிவதருமோத்தரத்தில் ஓதப் பெற்றுள்ள புண்ணிய தலங்களுள் இதுவும் ஒன்று. சேக்கிழார், மறை ஞானசம்பந்தர், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி, உமாபதி தேவர், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள் முதலிய பெரியோர்களால் சிறப்பித்தோதப் பெற்றிருப்பதோடு திருஞானசம்பந்த மூர்த்திகள், அப்பர் சுவாமிகள் ஆகிய உலகம்போற்றும் சைவ சமயாச்சாரியர்களாலும் தேவாரம் பாடப்பெற்ற பெருஞ் சிறப்பினையுமுடையது.

### பெயர் வந்த காரணம்

முன்னொரு காலத்தில் தேவர்களும், முனிவர்களும் வேதத்தை மறக்கலாயினர். அதனால் அவர்கள் பெருந் துயருழந்து வேதங்களை விரித்தோத வேண்டுமெனச் சிவபெருமானை வேண்டிக்கொண்டனர். வேண்டுவார் வேண்டியவற்றை ஈவானாகிய பரமசிவன் அன்னோர் கோரிக்கையை நிறைவேற்றத் திருவுளங்கொண்டு ஓர் மானிட உருவந்தாங்கி ஒரு மண்டபத்தின்கண் வந்து தங்கியருளினார். அதையுணர்ந்த தேவர்களும், முனிவர்களும், பிறரும் அங்குபோந்து குழுமினர். ஆதிமறையோனாகிய அண்ணல் அவர்களை ஆசீர்வதித்து அவர்கள் வேண்டிக் கேட்டுக்கொண்டபடியே வேதத்தை விரித்தோதி ஆண்டிருந்த சிவலிங்க மூர்த்தத்தில் மறைந்தருளினார். அக்காரணம் பற்றியே அத்தலத்திற்கு வேதபுரி அல்லது சுருதிபுரம் என்னும்பெயருண்டாயிற்று. இது தமிழில் திருவோத்தூர் (ஒத்து - வேதம்) எனப்பெறும்.

### சிவபெருமான் வீர நடனம்

மற்றொரு காலத்தில் வேதங்கள் தங்கள் நாயகனாகிய சிவபெருமானது வீர நடனத்தைத் தரிசிக்கப்பேராவல் கொண்டு அருந்தவங்கிடந்தன. நச்சினார்க்கினியனாகிய பரமசிவன் முன் தோன்றலும் வேதங்கள் ஓர் மானிட உருக்கொண்டு பரமனைத் துதித்து வணங்கி தமது விருப்பத்தை வெளியிட்டன. சிவபெருமான், தமது வீர நடனத்தைக்காண மறைகள் ஆற்று எனக்கருதிக் கையில் தாங்கியுள்ள உடுக்கையின் இருவாயிலிலும் அடைத்து நடம்புரிந்து அவற்றின் கோரிக்கையை நிறைவேற்றியருளினார்.

### ஆண்பனை பெண்பனையானது

இக்காலத்தும் இவ்வூரில் பனைமரங்கள் விசேஷமா யிருப்பதையும், திருஞானசம்பந்த சுவாமிகள் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்

இயதையும் நோக்க ஆளுடைய பிள்ளையார் காலத்திலும் இத்தலத்தில் பனைமரங்கள் அதிகமா யிருந்திருக்க வேண்டுமெனத் தீர்மானிக்க இடமிருக்கிறது. சிவபக்தியிற் சிறந்த ஒரு அடியார், சிவாலயத்தின் அருகே சேயாறு ஓடுவதால் பெருவெள்ளம் வருங்காலத்து ஆலயத்தை ஊறுபடுத்துமோ என அஞ்சி, பனைமரங்கள் ஆற்றங்கரையைப் பலப்படுத்தும் என எண்ணி பனைமரங்களை நிரம்பவைத்து வளர்த்து வந்தார். அவற்றுள் பெரும்பாலானவை ஆண் மரங்களாகவே இருந்தது கண்ட சமணர்கள் இவ்வடியாரது தொண்டையும், சிவபெருமானது திருவருள் திறத்தினையும் இகழ்ந்து 'இவை காய்க்குமோ' எனக்கூறி நகையாடினர். அடியார் மிகவும் மனம் நொந்து தளராது பரமனைப் பரவித் தொண்டாற்றி வந்தனர். சமண மதம் செழிப்புற்றிருந்த அக்காலத்தில் சமயப்போர்கள் நிரம்ப நடந்து வந்தன. அச்சமயம் சான்றோர் மிகுந்த தொண்டைநாட்டுத் தலங்களைத் தரிசிக்க விரும்பிய பரசமய கோளரியாகிய திருஞானசம்பந்த சுவாமிகள் இத்திவ்ய தலத்திற்கும் எழுந்தருளினார். இதனையறிந்த திருவோத்தூர் சிவனடியார்கள் தாயைக்கண்ட சேயைப்போல அளவு கடந்த ஆர்வத்தோடும், ஆனந்தத்தோடும் எதிர்கொண்டு வரவேற்றனர். வரவேற்கப் பெற்ற பிள்ளையார் அகமகிழ்ந்து வேதபுரீசனை திருக்கோயில் புக்கு தரிசித்து உலகு முய்ய திருப்பதிகம் பாடியருளினார். சைவர்கள் குதூகுலம் கொண்டனர். இதுகண்டு பொறாதவர்களும், சிவக்கொழுந்தாகிய ஆளுடைய பிள்ளையாரின் மகிமையை அறியாதவர்களுமாகிய சமணர்கள் பனைவளர்த்த அடியாரைக்கண்டு முன்போலவே இகழ்ந்து பேசலாயினர். அடக்கம், பொறைகளையே ஆபரணமாகக் கொண்ட அவ்வடியார் பிள்ளையார் சந்நிதியில் நிகழ்ந்தவற்றைக் கூறி நின்றனர். அடியார் குறை தீர்க்கவும், சைவம் செழிக்கவும் திருவுளங்கொண்டு வேதபுரீசன் சந்நதி யடைந்து, 'பூத்தேர்ந்தாயன' என்னும் திருப்பதிகத்தை ஓத ஆரம்பித்து 'குரும்பையாண் பனை ஈன் குலை ஓத்தூர்' என்றவளவில் ஆண்பனைகள் யாவும் பெண்பனைகளாகிக் குரும்பையும் குலையும் நிறைந்து நின்றன. இதுகண்ட அடியார்களும் ஏனையோரும் சுவாமிகளின் பெருமையையும், சிவபெருமான் அருள் திறத்தையும் எண்ணி யெண்ணி மகிழ்வெய்தினர். சமணர்களுள் சிலர் நாடு விட்டோடினர். பலர் சைவராயினர்.

## பிள்ளையார் மீது பாம்பை யேவியது

மதுரையில், சமணர்கள் சுவாமிகளால் அடைந்த தோல்வியைக் கேள்வியுற்ற இவ்வூர்ச் சமணர்கள் வெகுண்டு யாகத்தில் ஒருபாம்பைப் பிறப்பித்து அதனை இரவில் சுவாமிகள்மீது ஏவினர். சைவந் தழைத்தோங்க அவதரித்த பிள்ளையார் 'வேந்தன் வாழ் இஞ்சிசூழ் திருமனைக்கேகுக' என்றலும், அது ஊரையும், வேந்தனையும் துன்புறுத்த முயன்றது. சமணர்கள் பலவகையில் முயன்றும் அதைத்தடுக்க முடியவில்லை. பொழுது விடிந்த பின்னர் ஆச்சாரிய சுவாமிகள் 'பரமனே இவ்வாபத்தை நீக்குவான்' என்று கூறித்திருப்பதிகம் பாடினார். அடியார்க் கெளியனாகிய சிவபெருமான் அப்பாம்பை உற்றுநோக்கி எடுத்



தாட்டி கோயிலுட்புகுந்து மறைந்தருளினார். அரசன் பெருமகிழ்ச்சி யெய்தி சைவனானான். சமணர் வலி குன்றி சைவம் தழைத்தோங்கிற்று.

எஞ்சி நின்ற சமணர்கள் மனம் பொறாராகி 'இவர் மதுரையில் அற்புதங்கள் நிகழ்த்தி வெற்றி பெற்றாரென்பது உண்மையாயில் அவற்றை இங்கும் செய்து காட்டட்டும். தோல்வி யுறுவோமாயின் யாங்களும் கழுவேறுகிறோம்' எனச் சபதம் செய்தனர். ஞானப்பாலுண்ட ஐயர் அதற்கிசைந்து அரசன் முதலியோர் முன்னிலையில் ஏட்டைத் தீயிலும் சேயாற்று வெள்ளத்திலும் இட்டு முன்போலவே வெற்றி யெய்தினர். சமண ருஷிகள் சைவ ஏடேறத் தங்கள் பால் குறைந்ததே என்று வருந்திக் கழுவின் காடேறி மாய்ந்தனர்.

சேயாற்றின்கண் ணிட்ட ஏடு வெள்ளத்தை எதிர்த்துச் சென்று கரை யேறிய இடம் இன்றும் 'சேயாற்றை வென்றான்' என்னும் பெயரால் வழங்கி வருகிறது.

உங்கள் சுவாமிகள் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கினால் கழுவேறி மாய்வோம் எனச்சமண ருஷிகள் சபதம் செய்து கழுவேறினதாகவும் கூறுவர் ஒருசாரார். திருவோத்தூருக்கருகில் சமணர்கள் கழுவேறிய இடம் இன்றும் பாழடைந்து சில அடையாளங்களோடு இருப்பதாகவும் கூறுகின்றனர்.

## ஸ்ரீபாநுகவி மாணவர் கழகம்

இந்நகரில் தமிழ்ப்புலமையில் மிகச் சிறந்து, நூலாசிரியரும் உரையாசிரியருமாக விளங்கிய முத்தமிழ் ரத்நாகரம் சைவஸ்ரீ ம. தி. பாநுகவி அவர்கள் பல்லாண்டுகளாக திருநாவுக்கரசு மடத்தில் தங்கி இருந்து தமிழை செவ்வையுறப் போற்றி வந்தார்கள். அவர்கட்குப் பின், அவர் பெயரால் நற்காரியங்கள்செய்தல் முறையெனக் கொண்டு, ஸ்ரீபாநுகவி மாணவர் கழகம் என்னும் ஒரு சங்கத்தை 26-4-28-ல் அத்திருநாவுக்கரசு மடத்திலேயே நிறுவி, அதனை ஆறு ஆண்டுகளாக செவ்வனே நடத்தி வருகின்றார்கள். இக்கழக உறுப்பினருள் பெரும்பாலோர் செங்குந்தர்களே.

## தமிழ்க்கல்லூரி

ஷை கழக மாணவர்கள், சென்னைப் பல்கலைக் கழக வித்வான் பரீட்சைக்குரிய புத்தகங்களைப் பயின்று தமிழை வளர்த்தல் வேண்டுமென்னும் கருத்தோடு "ஸ்ரீ பாநுகவி தமிழ்க் கல்லூரி" ஆரம்பிக்கப்பட்டது. இதில் தற்போது 25 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

திருவோத்தூர்ப் பரிதிபுரத் திருநாவுக்கரசு மடத்தில் 'ஸ்ரீ பாநுகவி நூல் நிலையம்' என்ற ஓர் புத்தகாலயம் பொதுஜன நன்மைக்காக நடத்தப்படுகிறது. இதில் தமிழேயன்றி பல பாஷைகளின் நூற்களும் உள்ளன.

கண்டோர் மனதைக் கவருந்தன்மையில் சேயாற்றங்கரையின் அணித்தாக வேதபுரீசர் ஆலயம் வெகு அழகாக அமைந்திருக்கிறது. இயல்பாகவே சிவபக்தியிற் சிறந்து விளங்கும் செங்குந்த சகோதரர்கள் இவ்வைந்தாவது மகாநாட்டுச் சமயத்தில் இப்புண்ணிய க்ஷேத்திரத்தைத் தரிசித்துப் பெரும்பய னடைவார்களாக.

மகாநாட்டுத்

# தலைவர்களது சரித்திரங்கள்

## கொடியேற்றும் பெரியார்

### P. A. பத்மனாப முதலியார்

உயர்திரு, P. A. பத்மநாப முதலியார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரத்தில் பிரபல நூல் வர்த்தகரும், பிராசுதாரருமான திரு. ஆறுமுக முதலியார் அவர்கள் குமாரராக 1889 வருஷம் பிறந்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய ஞானமுள்ளவர். சென்ற 6 வருஷங்களாக அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் கமிட்டி மெம்பராகவும், 9 வருஷங்களாகப் பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடென்டாகவும் இருந்து வருவதோடு 1925 முதல் 1928 வரை யூனியன் போர்டு பிரசிடென்டாகவும் இருந்தவர். இவரது தந்தையாரின் பெயரால் தீர்த்தபதி ஹைஸ்கூலில் முதல்தரமாகப் படிக்கும் ஒரு செங்குந்த மாணவனுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவர ஏற்பாடு செய்திருக்கிறார். இதனால் இவர் குலாபிமானமும், நம் குலத்தவரிடையே கல்வி பரவவேண்டுமென்ற பெருநோக்கமும் உடையவரென்று வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. திரு. முதலியார் அவர்கள் தென்காசியில் நிறுவப்பெற்றிருந்த செங்குந்தர் பாங்கியின் டைரக்டர்களில் ஒருவராகவும், சில ஆண்டுகள் பிரசிடெண்டாகவும், 1920 லிருந்து 1923 வரை ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயில் டிரஸ்டியாகவும் இருந்துவந்தார்.

தமது தந்தையாரால் திருப்பணி செய்யப்பெற்ற சங்கரலிங்கசுவாமிகோயிலில் துவஜஸ்தம்பம் நிறுவி, அஷ்டபந்தனம் சாத்தி, உற்சவாதிகள் செவ்வனே நடைபெறுமாறு ஏற்பாடுகள் செய்து வைத்ததன்றி பல ஆண்டுகள் அதில் டிரஸ்டி வேலைபார்த்து, தற்போது அகஸ்தியர்கோயில் டிரஸ்டிகளில் ஒருவராக இருக்கிறார். அம்பாசமுத்திரம் தாலுக்காபோர்டு அங்கத்தினராக அது எடுபடும் வரையில் இருந்தார். மிகவும் பிரபலமான குடும்பத்தைச் சேர்ந்த இவர் நமது சமூக மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள உயர்திரு T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் சம்பந்தியாவர். இவர் சகோதரர் நால்வருள் உயர்திரு P. A. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் சில ஆண்டுகள் யூனியன்போர்டு பிரசிடெண்டாக இருந்தார். உயர்திரு P. A. கணபதி முதலியார்



அவர்கள் B. A. தற்போது ஆசிரியர் போதனா கல்லூரியில் எல். டி. (L.T.) பரீக்ஷைக்கும், இவர் குமாரர் B. A. வகுப்பிலும் வாசித்து வருகிறார்கள்.

### சமூக மகாநாட்டுத் தலைவர்

### திரு. தே. ப. கு. ஆறுமுக முதலியார்

நமது ஐந்தாவது சமூக மகாநாட்டுத் தலைவர் திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் 1881௵ ஒரு சிறந்த செங்குந்த குடும்பத்திற் பிறந்தவர். இவர் திரு. குற்றாலலிங்க முதலியார் என்னும் பெரியாரது புதல்வர். திரு. ஆறுமுக முதலியார் அவர்கள் ஆங்கிலமும் தமிழும் நன்கு பயின்றவர். இவர் இளமையிலேயே தமது தந்தையாரோடு வியாபாரம் செய்ய ஆரம்பிக்க, அது இவரது ஊக்கத்தாலும், விடா முயற்சியாலும், நுண்ணறிவினாலும் நாளுக்குநாள் விருத்தியடைந்து கொண்டே வந்தது. சில வருஷங்களுக்குப் பின்னர் முதலியாரவர்கள் நூல் நூற்கும் சில பஞ்சாலைகளின் (Mills) ஏஜெண்டானார். பின்னும் சில காலத்தில் இவரது வியாபாரம் ஓங்கி வளர, தற்போது பிரசித்திபெற்ற நூல் வியாபாரியாக விளங்கி வருகிறார்.

தென்காசி யூனியன் போர்டிற்கு மூன்று முறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதன்றித் திருநெல்வேலி ஜில்லாவில் பிரபல புராதன கோயில்களுள் ஒன்றாகிய சங்கரநாயனார் கோயிலுக்குச் சிலகாலம் தர்மகர்த்தராகவும் நியமிக்கப் பெற்றிருந்தார். செங்குந்தர் நன்மைக்கென செங்குந்தர்களே பங்குக்காரர்களாயுள்ள 'தென்காசிச் செங்குந்தர் பாங்கி' என்னும் ஒரு பாங்கையும் ஏற்படுத்தி இவரே அப் பாங்கிக்கு காரியதரிசியாகவும் நியமிக்கப்பெற்று அதை நடத்திவந்தார். இவர் பெயரை அறியாத வியாபாரிகள் அந்த ஜில்லாவிலும் இதர ஜில்லாவிலும் இல்லையென்றே சொல்லலாம். தேவஸ்தானம், தலஸ்தாபனம் முதலிய எல்லாவற்றிலும் பிற இனத்தவரைப் புகவிடாது தங்கள் மயமாக வைத்திருக்கிற வேளாளர்கள் நிறைந்த திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி யூனியன் போர்டின் தலைவராக மும்முறை தேர்ந்தெடுக்கப் பெற்றதனாலும், சங்கரநாயனார் கோயில் தர்மகர்த்தராக நியமிக்கப் பெற்றதனாலும் இவருக்கு மகம்மதியர்கள் உட்பட்ட பிற இனத்தவரிடத்து எவ்வளவு செல்வாக்கும் நன்மதிப்பும் இருக்கிறதென்றும், செங்குந்தர் பாங்கிற்கு காரியதரிசியாக நியமிக்கப் பெற்றிருந்ததால் இவருக்கு நம்மவரிடத்தும் எவ்வளவு நம்பிக்கையும் நன்மதிப்பும் இருக்கிறதென்றும் தெரி

கிறது. இவர் பொது ஜனங்களின் நன்மைக்குப் பலன் கருதாது உழைக்கும் பெருந்தகைமையும், தர்மசிந்தையுமுள்ளவர். இராமேஸ்வரத்திலுள்ள நமது மடம் பிறரால் கைப்பற்றப்படும் தருவாயிலிருந்தபோது வெகு பிரயாசைப்பட்டு அதைப் பழையபடி நம்மவர் வசமாக்கினார். திருக்குற்றால நீர்வீழ்ச்சிக் கருகிலுள்ள நம்மவர் மடத்தையும் நந்தவனத்தையும் பெரும்பொருள் செலவிட்டுப் புதுப்பித்து வெகு ஒழுங்காக அமைத்து வைத்திருக்கின்றனர். இவற்றாலும் இப்பெரியார் சிறந்த குலாபிமானி என்பது சொல்லாமலே விளங்கும். 1933 ஏப்ரல் மாதம் நிறுவப்பெற்ற தென்காசி பாங்கிக்கு மானேஜிங் டைரக்டராக இருந்துவருகிறார். 1929 ஜனவரியில் ஈரோட்டில் கூடிய நமது முதலாவது வர்த்தக மகாநாட்டுத் தலைவராக இருந்தாரென்பதை யாவரும் அறிவர்.

### வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
### திரு. மா. வே. பீமராஜா முதலியார்

குடியேற்றம் திருவாளர் மா. ஆ. சி. வே. பீமராஜா முதலியார் அவர்கள் ஈரோட்டில் கூடிய நமது முதலாவது மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவர். இவருக்குத் தற்போது வயது 44-ஆகிறது. மா. ஆ. வெங்கடாசல முதலியாரது நான்கு புதல்வருள் இவர் மூத்தவர். நிறைந்த செல்வந்தர். பிரபலமான புகையிலை வியாபாரி. தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய ஞானமுள்ளவர். குடியேற்றத்தில் பரம்பரையாய் மிகுந்த செல்வாக்கும் அந்தஸ்துமுள்ள ஒரு பெரிய குடும்பத்தில் தோன்றியவர். இவர் 34-வது வயதில் குடியேற்றம் முனிசிபல் கௌன்சிலரானார். ஓராண்டுக்குப் பின்னர் ஷை முனிசிபல் கௌன்சில் சேர்மனாகி அப்பதவியில் பல ஆண்டுகளாக இருந்து வருகிறார்.

சென்ற பல வருஷங்களாகத் தாலுக்காபோர்டு ஏற்படும் வரையில் அதன் அங்கத்தினராக இருந்ததன்றி பலவருஷ காலமாக ஜில்லாபோர்டு அங்கத்தினராகவும் இருந்து வருகிறார். செங்குந்தர்கள் பெருந்தொகையினராக வசிக்கும் குடியேற்றத்திலுள்ள உயர்தர பாடசாலையின் ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துதவும் பொது ஸ்தாபனத்திற்குத் தலைவராயிருந்து மிக்க ஊக்கத்துடன் ஷை தர்மத்தை நடத்தி வருகிறார். சென்னைச் சட்டசபைத் தேர்தலில் தைரியமாக நின்ற செங்குந்தர் இவர் ஒருவரே. அச்சமயத்தில் நம்மவர்களுக்குள் இருந்த கக்ஷி வித்தியாசத்தினால் இவர் தோல்வியடைய நேர்ந்தது. கக்ஷி வித்தியாசமில்லாதிருக்குமாயின் நிச்சயமாய் ஜயம் பெற்றிருப்பார் என்பதிற் சந்தேகமில்லை.

---



### வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
### திரு. அ. ரா. செல்லப்ப முதலியார்

இவர் வடாற்காடு ஜில்லாவைச் சார்ந்த தக்கோலம் என்னும் க்ஷேத்திரத்தில் பரம்பரையாய்ச் செல்வாக்குள்ள ஒரு பெரிய குடும்பத்தில் தோன்றியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் போதியஞானம் வாய்ந்தவர். தக்கோலம் யூனியன் போர்டு அங்கத்தினர் பதவியையும், இன்னும் இதர பல பொதுநலக் கழக அங்கத்தினர் பதவியையும் தாங்கி எக்காலத்தும் இடையறாது தேச ஊழியம் புரிந்து வருபவர். பிராம்மணரல்லாதார் இயக்கத்தின் முக்கிய அங்கத்தினரிலொருவர். பிராம்மணரல்லாதார் சம்பந்தமாய்க் கூடும் கூட்டங்களிலோ மகாநாடுகளிலோ இவரைப் பார்க்காதிருக்க முடியாது என்றால் இவருக்குள்ள பொதுநல ஆர்வம் எத்தகையதென நாம் விளக்க வேண்டியதில்லை. ஆண்டில் மிக இளைஞரே யாயினும் அனுபவமும், விஷய ஞானமும், வாக்கு வன்மையும் பெரிதும் வாய்க்கப் பெற்றவர். இவரது பரம்பரை, செல்வாக்கு, இளமை, சமூக முன்னேற்ற ஆவல், வாக்குவன்மை, ஊக்க மாதியன கருதியே காஞ்சீபுரத்தில் நடைபெற்ற நமது இரண்டாவது வாலிபர் மகாநாட்டைத் திறந்துவைக்கும் பெரும்பணியை அவ்வரவேற்புக் கழகத்தார் இவருக்கு அளித்தனர். இத்தகைய சிறப்புடையார் இவ்வைந்தாவது வாலிபர் மகாநாட்டின் வரவேற்புத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது மிகவும் பொருத்த முடையதாகும்.

---

# நமது ஐந்தாவது மகாநாடு

## இத் தை மாதம் 20, 21-ம் தேதிகளில் திருவத்திபுரத்தில் நடைபெறும்

## செங்குந்தர்களனைவரும் திரண்டு வருக

# விசித்திர உலகம்

## தேங்காய் வேட்டையாடும் நண்டுகள்

தென்னை மரங்கள் அடர்ந்த அநேக தீவுகளில் படத்தில் காட்டியுள்ளது போன்ற ஒரு வகையான நண்டுகள் இருக்கின்றன. இவை சமுத்திரத்தில் வசிக்கின்றன. பசி எடுத்தால் கரைக்குச் சென்று அங்குள்ள தென்னை மரங்களில் ஏறி, தேங்காய்களைப் பறித்து, நாரை உரித்து உடைத்துத் தின்றுவிட்டு ஓட்டை எறிந்து விடுகின்றன. இவற்றின் கொடுக்குகள் மகா பலமுள்ளவை. ஒரு மனிதன் கையைத் துண்டிக்கத் தக்க அவ்வளவு பலம் இதன் கொடுக்குகளுக்கு இருக்கிறதாம்.



## குரங்குப் பறவை

பறக்கும் அணில் இருப்பதாக மியூசியங்களில் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், பறக்கும் குரங்குகள் இருப்பதாக இதுவரை கேள்விப்பட்டதில்லை. குரங்குப் பறவைகள் மனிதனைவிட உயரமானவை. இதன் தலையும், முகமும் குரங்கைப் போன்றிருக்கும். இது மிகப் பயங்கர முடையவை. நீக்ரோவர்கள் இதைக் கண்டால் நடுங்கிப் போகிறார்கள். அதற்குப் பெரிய இறக்கைகள் இருக்கின்றன. தேக முழுவதும் குரங்குகளுக்கு இருப்பதைப் போன்றே ரோமம் அடர்ந்திருக்கிறது. இந்தக் குரங்குப் பறவைகள் ஆகாயத்தில் வெகு உயரத்திலும் பறந்து செல்லக்கூடுமாம்.

## வாலில் கண்ணுள்ள மீன்

மீன்களில் சிராமீன் என ஒருவகை மீன்கள் இருக்கின்றன. இவற்றிற்கு மற்ற மீன்களைப்போல் முகத்தில் இரண்டு கண்கள் இருப்பதோடு வாலில் ஒரு கண் அதிகமாக இருக்கிறது. இந்தக் கண்ணினால் அது பின்புற நிகழ்ச்சிகளை அறிந்து கொள்கிறது. ஆனால் முன்புறமுள்ள கண்களைப்போல் இந்தக் கண்ணுக்கு அவ்வளவு பார்வை சக்தி கிடையாதாம்.

## ஒரு வார இன்ஷியூரன்ஸ் முறை

நியூயார்க் நகரில் ஒருவார இன்ஷியூரன்ஸ் முறையொன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒருவன் தன்னை ஒரு வார காலத்திற்கு



இன்ஷியூர் செய்து கொள்ள விரும்பினால் ஒரு பென்னி நாணயத்தை அதற்கென வைத்துள்ள யந்திரத்தில் போட்டால் உடனே அந்த யந்திரத்தின்மூலம் ஒரு பாலிஸியைத் தருகிறார்கள். ஒரு தினத்துக்கு அந்தப் பாலிஸி செல்லும். அதற்குள் ஏதாவது அந்தப் பாலிஸிதாரனுக்கு ஆபத்து நேர்ந்தல் பாலிஸியைத் தருபவருக்கு ஒரு பெருந்தொகை வழங்கப்படுமாம்.

008

## தக்காளி காய்க்கும் உருளைக் கிழங்குச்செடி

மாடு வயிற்றில் ஆடு பிறப்பதும், பெண்கள் பன்றிக்குட்டி பெறுவதும் இந்தக் காலத்தில் நடைபெறும் இயற்கை விநோதங்களாக பத்திரிகைகளில் அடிக்கடி காண்கின்றோம். அத்துடன் ரசாயன சாஸ்திரிகள் செய்யும் அற்புதங்கள் அநேகமாக நாளுக்கு நாள் வெளி வருகின்றன. ரிச்சர்ட் பேர்பாங்ஸ் என்பவர் பேர்பெற்ற தாவர ஆராய்ச்சி நிபுணர். இவர் உருளைக் கிழங்குச் செடியில் தக்காளி காய்க்கச் செய்கின்றார். செடியின் வேரில் சிறந்த உருளைக் கிழங்குகளும், செடியின் மேற்புறத்தில் படத்தில் காட்டியபடி தக்காளிகளும் காய்க்கும்படி அவர் செய்திருக்கிறார்.



## குரைக்கும் விட்டில் பூச்சி

நாய்களைப்போல் உரத்துக் குரைக்கும் விட்டில் பூச்சிகள் ஜப்பானில் இருக்கின்றன. ஜப்பானியர் வீடுகளைக் காவல் செய்ய இந்த விட்டில் பூச்சிகளையே வளர்க்கிறார்கள். அந்நியரைக் கண்டால் இந்தப் பூச்சிகள் மிகச் சத்தமிட்டுக் குரைக்கின்றன. இச்சப்தத்தில் எஜமானர்கள் விழித்துக் கொள்ளுகிறார்கள். நாய்களை வளர்ப்பதை விட இதனை வளர்ப்பதால் பெரும் பொருள் மிச்சமாகின்றது.

## தானே பதில் சொல்லும் டெலிபோன்

ஆஸ்திரியாவில் நவீன டெலிபோன் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. ஒருவர் வெளியில் போகும்போது எப்பொழுது திரும்பி வருவார் என்றநேரத்தையும், தான் வெளியில் சென்றநேரத்தையும் குறிப்பிட்டு ஒரு கருவியை டெலிபோனுடன் இணைத்து விட்டால் போதும். எவரேனும் அவருக்கு டெலிபோன் செய்வார்களே யானால் அவர் வெளியில் சென்றிருக்கிறாரென்றும், இன்ன நேரத்தில் திரும்பி வருவாரென்றும் அந்த டெலிபோன் பதில் கூறுகிறதாம்.

## 6 வருடங்களில் 58 மனைவிகள்

அர்ஜெரோ என்ற ரஷ்யர் ஒருவர் சென்ற ஆறு வருடங்களில் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவராக 58 பெண்களை மணந்து கொண்டாராம். இவர்கள் மூலமாக 107 பிள்ளைகள் பிறந்திருக்கின்றன

வாம். இவரது வஞ்சகச் செயல் வெளிப்படவே இவருக்குப் பத்து வருட சிறைத் தண்டனை இரண்டு மாதங்களின் முன் விதிக்கப்பட்டிருக்கிறது.

## 10 வயதில் பூரண வளர்ச்சி

உலகத்தில் தினந்தோறும் பல விசித்திரங்கள் வெளிவருகின்றன. செயற்கை முறையால் பெண்களுக்குக் கர்ப்பத்தை உண்டாக்கி பிரசவிக்கச் செய்யும் முறை வெற்றியடைந்திருப்பது பத்திரிகைகளில் வெளியாகி இருக்கிறது. ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் லெனார்ட் ரௌன்டீரீ என்பார் வேறொரு அதிசய ஆராய்ச்சியில் இப்போது வெற்றியடைந்துள்ளார். அவருடைய ஆராய்ச்சியின்படி பிறந்த குழந்தைகளுக்கு சில தினங்களில் தன் தாய்ப்பால் வேண்டியதில்லை. 6 மாதத்தில் நடக்கக்கூடும். 5 வயதில் நிறைந்த சரீரபலம் ஏற்பட்டுவிடும். 10 வயதில் பூரண வளர்ச்சி யடைந்து விடுவர்.



## 7 வயது நிபுணனான லெனன் பேஸன்

சரியாக 7 வயதும் நிரம்பப் பெறாத இச்சிறுவன் லண்டனுக்கு சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் வசிப்பவன். கணக்கு போடுவதில் இவன் ஒரு மேதாவி. எத்தனை ஸ்தானங்களுடைய எண்களைக் கொண்ட பெருக்கல் வகுத்தலா யிருந்தாலும், காகிதமும் பென்சலுமின்றி மனதினாலேயே பார்த்துச் சில வினாடிகளில் பதில் கூறிவிடுகிறான். இது ஒரு அபூர்வ சக்தியாகும்.

---



உபாத்தியாயர் :—ராமு! கடவுள் நமக்கு ஏன் இரண்டு காதுகளைக் கொடுத்திருக்கிறார்?

ராமு :—உபாத்தியாயர் சொல்லும் பாடங்களை ஒரு காதால் கேட்டு மற்றொரு காதால் விடுவதற்கு ஸார்.

—மே. தீ. அம்பலத்தாடி, அசனம்மாபேட்டை.

* * *

கிறிஸ்தவர் :—(ஒரு வைஷ்ணவரை நோக்கி) உங்கள் கிருஷ்ணன் திருட்டு வெண்ணெயை வைத்துக்கொண்டு தின்கிறாரோ?

வைஷ்ணவர் :—ஆம். அந்தத் திருட்டு வெண்ணெய்க்குத்தான், உங்கள் கிறிஸ்து மண்டியிட்டு இரு கைகளையும் நீட்டிக் கேட்கிறார்.

—வீ. வீரப்பன், துறையூர்.

* * *

விருந்தளிப்போன் :—தாங்கள் 'தையல்' இலையில் சாப்பிடுவீரா?

விருந்தாளி :—நான் 'தையல்' இலையில் சாப்பிடமாட்டேன். என் இலையில் 'தையல்' சாப்பிடுவாள்.

—T. M. செங்கோடன், திருச்செங்கோடு.

* * *

கணேசன் :—அப்பா அண்ணாமலை! ஒரு அணா இருந்தால் கொடு. நான் காசிக்குப் போய்வரப் போகிறேன்.

அண்ணாமலை :—பேஷ். காசிக்குப் போய் வர ஒரு அணா போதுமா? குறைந்தது நூறு ரூபாய் வேண்டுமே?

கணேசன் :—அதெல்லாம் எனக்கு வேண்டியதில்லை. 'அரையணா மொட்டை, அரையணா கொட்டை' இது இருந்தால் போதுமானது.

V. P. மன்னார், தேவிகாபுரம்.

* * *

மாமனார் :—எங்கள் பெண்ணை அடித்துத் துரத்திவிட்டு மறுபடியும் எங்கள் வீட்டில் வந்து கொஞ்சுகிறாயே. உனக்கு வெட்கமில்லையா?

மருமகன் :—இருந்ததுங்கோ. தங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்தது முதல் அது எங்கோயோ ஓடிவிட்டதுங்கோ.

—*அ. த. பெருமாள், தும்மாப்பன்பேட்டை.

---

* பரிசுபெற்ற விகடம்.

மணி :—மீனு ! புருஷரை நம்பக்கூடா தம்மா.
மீனு :—ஏன் நம்பக்கூடாது ?
மணி :—என் புருஷர் சில நாளைக்குமுன் நான் சமையல்வேலை கற்றுக்கொண்டால் நல்ல வெகுமதி கொடுப்பதாகக் கூறினர்.
மீனு :—உனக்கு என்ன வெகுமதி கொடுத்தார் ? காசுமாலை ஏதேனும் கிடைத்ததா ?
மணி :—காசுமாலையா ! சமையல்காரியை நீக்கிவிட்டு எனக்கு சமையல் வேலையைத்தான் கொடுத்தார்.

—கா. மா. ராமலிங்க முதலி, காஞ்சி.

* * *

சாஸ்திரிகள் :—அந்த வீட்டுக்காரர்கள் சுத்த தரித்திரம் போலிருக்கு !
நண்பர் :—எப்படித் தெரியும் ?
சாஸ்திரிகள் :—காலணு வேண்டுமென்று அவர்களிடம் கடன் கேட்கப்போனேன். அதுகூட இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

—எஸ். கந்தையா, கரவை.

* * *

உபாத்தியாயர் :—கோவிந்தா ! முத்துபோல் எழுதாவிட்டால் மண்டையைப் பிளந்து விடுவேன்.
கோவிந்தன் :—சார் ! நான் முத்தைப் பார்த்ததுகூட இல்லையே! எப்படி முத்தைப் போல எழுதமுடியும்? —S.R.வேல்சாமி, சிவகிரி.

* * *

பிரசங்கியார் :—மகாஜனங்களே ! கோழியின்மீது உங்களுக்கு அவ்வளவு ஆசை எதற்கு? ஆடு மாடுகள் இருக்கின்றனவே.
கேட்டுக்கொண் டிருப்போர் :—ஆட்டையும் மாட்டையும் துணியில் மறைத்துக்கொண்டு போக முடியுமா ?

—N. R. கிருஷ்ணன், ஆரணி சைதாப்பேட்டை.

* * *

எஜமான் :—ஜாக்கிரதை. நீ என்னிடம் வேலைக்கு இருக்கும் வரையில் உண்மையே பேசவேண்டும். பொய் பேசினுயோ......?
வேலையாள் :—ஆமாங்கோ. நீங்க வீட்டிலே இருந்துகொண்டே யாராவது வந்து கேட்டா 'இல்லையென்று சொல்' என்கிறீங்களே, அப்போது கூடவா ? —G. K. வேல், ஆரணி சைதாப்பேட்டை.

* * *



அவர் :—நீங்கள் எப்போதாவது ரயில்வே ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறீரா ?
இவர் :—ஆகா. அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரு குகைக்குள் ரயில் போய்க்கொண்டிருக்கும்போது நான், என் மனைவி என்று நினைத்து வேறு ஒரு பெண்ணை முத்தமிட்டுவிட்டேன். அப்புறம்எனக்கு நேர்ந்தது தெரியுமா? —K. காசி, புதுவை



ஒருவர் :—ஐயோ, பாவம். இப்போதுதான் உங்கள் மகன் ஜெயிலிலிருந்து வந்ததாகக் கூறினீர்களே ! என்ன குற்றத்திற்காக தண்டனை கிடைத்தது ?

மற்றவர் :—சே! அவன் குற்றமொன்றும் செய்யவில்லை. ஜெயிலில் உத்தியோகம் பார்க்கிறுன்.

—A. R. சுந்தரம், கல்கத்தா.

* * *

எஜமான் :—அடே, காப்பி ஆய்விட்டதா ?

வேலையாள் :—ஆய்விட்டதுங்கோ.

எஜமான் :—சரி, இரண்டு டம்ளர் நிறைய கொண்டுவா.

வேலையாள் :—என்னுங்கோ, எல்லாம் ஆய்விட்டதென்று சொன்னு, ரண்டு டம்ளர் கொண்டுவா என்கிறீங்களே.

—சு. நா. குமாரகுரு, கல்லாலம்பூண்டி.

* * *

உடல் பருமனுள்ள ஓர் ஏழை மனிதன் :—ஐயா, மஹராஜ்! நீங்கள் எங்கு செல்கிறீர்கள் ?

தனவந்தன் :—நான் சங்கீதக் கச்சேரிக்குப் போகிறேன்.

ஏ. மனிதன் :—நான்கூட வரட்டுமா ?

தனவந்தன் :—நீ வந்தால் அங்கு உன்னைச் சேர்க்கமாட்டார்கள் பெரிய மனுஷர்களைத்தான் உள்ளே விடுவார்கள்.

ஏ. மனிதன்:—என்ன ஐயா, என்னைவிட நீர் பெரிய மனுஷரோ?

—R. வீரபத்திரன், காஞ்சீபுரம்.

* * *



சுந்தரமய்யர் :—(இருட்டில் போகிறவனைப் பார்த்து) யார் போகிறது ?
புரோகிதர் :—ஏன் ?
சு. அய்யர் :—ஏன் என்றால் தெரியவில்லையே ?
புரோகிதர் :—குரல் கூடவா தெரியவில்லை !
சு. அய்யர் :—தோட்டி ராமனு?
புரோகிதர் :—இல்லை ! புரோகிதர் ராமய்யர்.
சு. அய்யர்:—இதை முன்னமே சொல்லித் தொலைக்கக் கூடாதா ?

—T. M. செங்கோடன், திருச்செங்கோடு.

—

# பண்டைத் தமிழ்ப் புலவர் மாண்பு

[A. S. முத்தைய முதலியார் B. A., கோட்டாறு]

பண்டைத் தமிழ் அரசரே யன்றி தமிழ்ப் புலவர்களும் மாண்புடன் வாழ்ந்து வந்தார்கள். புலவர்கள் வறுமை நோய் வாய்ப்பட்டும், மானம் அழிந்து வாழும் வாழ்வை அறவே மாற்றினார்கள். அரசரேயாயினும் தம்மை மதியாத வரது வாயில் அணுகார்கள். முகமாறித் தரப்பட்ட பரிசிலைப் பெற்றார்கள் இல்லை. தினையளவாக மதித்துப் பாராட்டினார்கள்.

தொல்லாணை நல்லாசிரியர்களான புலவர்கள் தங்கட்கு வறுமைப் பிணி யுற்ற விடத்தும், அதைத்தீர்ப்பதற்கு அன்பிலார் வாயில் அணுகார்.

“மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்”

“தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை”

என்ற இத்தகைய அரிய பெரிய அமுத மொழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினார்கள். இழிவந்த செய்து பிழைக்கவேண்டும் என்ற எண்ணம் சிறிதேனுங் கிடையாது.

பெருஞ்சித்திரனார் என்னும் பெயருக்கேற்ப பெருமை பெற்ற புலவர் வெளிமான் என்னும் ஓர் குரிசிலினிடத்தில் பரிசில் பெறச்சென்றார். அப்பொழுது அவ் வள்ளல் செயலற்றுக் கிடந்தார். ஆயினும் தன் தம்பி இளவெளிமானைக் கூப்பிட்டு, புலவர்க்கு வேண்டியதைக் கொடுக்கும்படித் தெரிவித்தான். இளவெளிமான் பரிசில் கொடுக்கச் சிறிது காலம் நீட்டினான். உடனே அவண் நின்றும் அகன்று குமணவள்ளலிடத்திற் சென்று பரிசிலாக யானையைப் பெற்று வந்து இளவெளிமான் காவன் மரத்திற் கட்டி அரசனைப் பார்த்து,

“இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்
இரவலர் உண்மையுங் காணினி இரவலர்க்கு
ஈவோர் உண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த



நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே”

என்று கூறினார். இதில் நின்றும் அப்பெரியார் எத்துணை அரும் பெருங்குணங்கள் உடையராய் இருக்கவேண்டுமென்பது தெள்ளிதிற் புலனாகும்.

பெருந்தலைச் சாத்தனார் என்னும் பெரிய புலவர், கடிய நெடுவேட்டுவனிடத்திற் பரிசில் பெறச் சென்றார். அவன் சிறிது காலம் நீட்டித்தான். இதைப் பொறாது புலவர் “முற்றிய திருவின் மூவராயினும், பேட்பின் றீதல் யாம் வேண்டலமே” என்று கூறிவிட்டு அவண் நின்றும் அகன்றார். இன்னார் வறுமையால் வருந்திய காலத்தும் தம் அறிவிற்குரிய செம்மையினின்றும் திறம்பாத நன்னிலை யுடையவர்.

அரசரே யெனினும் அவரிடத்தும் பழி பயக்குஞ் செயல் காணப்படின் அவரைப் பாடுதலும் மதித்தலுஞ் செய்யாது வெறுத்து உரைக்கும் பெருங்குண முடையவர். ஒருக்கால் இளங்கண்டீரக் கோவும், இளவிச்சிக்கோவும் ஒன்றாக இருந்த பொழுது, சாத்தனார் இளங்கண்டீரக் கோவைத் தழுவி இளவிச்சிக்கோவைத் தழுவாது விட்டார். அதன் காரணத்தை வினவ அவனது முன்னோர் தீச்செயலை எடுத்துக் காட்டினார். ‘இளங்கண்டீரக் கோவின் முன்னோர் மிகவுங் கொடையாளிகள். இவர்கள் நெடுந்தூரம் சென்ற காலத்தும், இவர்கள் மனைவிமார்கள் பரிசிலர்க்கு வேண்டியவற்றை வழங்கிவந்தார்கள். ஆனால் இளவிச்சிக்கோவின் முன்னோரில் ஒருவனான நன்னன் என்பான் தன் சோலையிலுள்ள பசுங்காய் நீரில் மிதந்து ஓட, நீராடவந்த் ஒரு பார்ப்பனி அதை எடுத்துத் தின்று விட, அதற்காக அவளைக் கொன்றவன். இவன் முன்னோன் ஒருவன் பாடிவரும் புலவரைக் கண்டால், லோபகுண மிகுந்து வாயிற் கதவுகளை அடைத்துக் கொடுஞ் செயலையும் புரிந்து வந்தான்’ எனக் கூறினர். இதனால் இப்புலவரின் பெருமிதமான குணம் நன்கு விளங்குகின்றது.

புலமை மிக்க சான்றோர்கள், இடித்துக் கூறும் தன்மை யுடையவர்களாக விளங்கினார்கள்.

அரசர்கள் செய்யத் தகாதவற்றைச் செய்ய ஆரம்பித்தால், உடனே புலவர்கள் இடித்துக் கூறித் தடுத்தார்கள்.

செவிகைப்ப சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு”

என்பது மறைமொழி. எந்த அரசர்கள் இதற்கு இணங்கி ஒழுகினார்களோ அவர்களே மேன்மை பெற்றுத் திகழ்ந்தவர்கள்.

ஒரு காலத்தில் சோழர் குலத்து உதித்த அரசர்கள் நெடுங்கிள்ளியும், நலங்கிள்ளியும் பகைமைகொண்டு போர் தொடங்கினர். இதனைக்கண்ட கோவூர்கிழார் என்ற பெரும் புலவர் நலங்கிள்ளியின் பாற்சென்று,

இரும்பனை பெண்டோடு மிலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்னகண்ணியும் ஆர்மிடைந் தன்றே நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையு மன்றே அதனாற்
குடிப்பொரு ளன்று நும் செய்தி, கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தற்கு
மெய்ம்மலி யுவகை செய்யும் இவ்விகலே.

என்று கூறி, போர் நிகழாது தடுத்தார். அதனைக்கேட்ட அரசர் இருவரும் இத்தகையபுலவர் பொருள் உரை போற்றி, அதன் வழிநின்று பகைமை நீங்கி, அன்பு கலந்த உள்ளத்தராய் விளங்கினார்கள்.

கோப் பெருஞ் சோழனுக்கும் அவன் மக்கட்கும் பகைமை மூண்டது. அதனால் சோழன் தன் மக்களோடு பொருதற்கு எழுந்தான். இதை அறிந்த அந்நாட்டுப் புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார் என்பார் இவர் தம் பகைமையை மாற்றக்கருதி, அரசனை அண்மி "வெற்றி வேந்தே! நின்னுடன் போர்செய்ய வந்தவர் சேர பாண்டியர்களு மல்லர். நீ இவ்வுலகை நீங்கின், அரசுரிமை அன்னார்க்கே உரித்து. உனது புதல்வர் தோற்றாலும், உனது செல்வத்தை அவர்க்கொழிய வேறு யாருக்குக் கொடுப்பாய்" என்று கூறினார். இந்த அற வுரையைக்கேட்ட கோப்பெருஞ் சோழன் போரை நிறுத்தி உலக இன்பத்தை வெறுத்துத் துறவறத்தை மேற்கொண்டான். அரசன், புலவர் பெருமானால் அறிவுச்சுடர் கொளுத்தப் பெற்றான்.

இத்தகைய பெருமை பெற்ற புலவர் பெருமக்கள் வாழ்ந்து வந்த நாடாகும் இத் தமிழ் நாடு.

(தொடரும்)

# நேயர்கள் நிருபம்

## இந்தியாவி லிருந்து இலங்கைக்கு சுவிகாரமா?

செங்குந்த மித்திரன் ஆசிரிய ரவர்கட்கு

ஐயா,

1934-ம்௵ நவம்பர் மாத செங்குந்த மித்திரன் வெளியீட்டில் "ஒரு நல்ல சந்தர்ப்பம்" என்னும் பாகம், "தேர்தல் புராணம்" என்னும் வியாசத்தின் கீழ் மிகவும் பொருத்தமா யெழுதப்பட்டிருக்கிறது முக்கியமானதே. தாங்கள் வரைந்த பிரகாரம் திரு. சி. குமாரசாமி முதலியார் அவர்கள் 'செவ்வமும் கீர்த்தியும் மிக்கவர், கல்வியறிவு நிரம்பியவர், நற்குணங்களனைத்தும் ஒருங்கே திரண்டுவந்த உருவனையர்,' என்று நாங்களும் நம்புகிறோம். என்றாலும் இந்தியாவையும் இலங்கையையும் சுவிகாரஞ் செய்வதனால் இணைக்க முடியாதென்பது எங்கள் துணிபு. விவாக பந்தத்தினா லன்றி, வேறு வகைகளினா லிணைத்தல் புதிய வஸ்திரத்தை மிகவும் பழைய வஸ்திரத்தோடு இணைத்தலை ஒக்குமென்றே நாங்கள் கருதுகிறோம்.

ஷை முதலியாருக்கு இலங்கையில் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் மிகவும் நெருங்கிய பந்துத்துவமும், உறவுமுறையும், ஜாதி ஐக்கிய நண்பரு முண்டென்பது வெளிப்படை. அவரி னிரத்த வுரித்தான ஏழைப் பிள்ளைகளு மிருக்கின்றனர். அவர்கள் சதா கண்முன் நிற்கின்றனர்; பசியால் வாடுகின்றனர்; கல்விக்கு இரக்கின்றனர்; வஸ்திரத்திற்குப் பிச்சை யெடுக்கின்றனர். அவர்களை யெல்லாம் விடுத்து வெகு தூரத்திலுள்ள இந்தியாவிலிருந்து சுவிகாரம் பெற விரும்புவது ஏனோ தெரியவில்லை.

"தன்னைப்பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை யெடுக்க தம்பி கும்பகோணத்தில் கோதானம் பண்ணுகிறார்" என்பதை யொப்பதாக வன்றோ இச்செய்கை இருக்கின்றது.

இந்தியாவி லிருந்து வரும் சுவிகார புத்திரன் இன்பமாய் வளர்க்கப்படுவான், சஞ்சலமின்றி மகிழ்ச்சியுடன் இருப்பான் என்பது என்ன நிச்சயம்? வளர்ப்போருக்குதான் இரத்தத்துடிப்பு உண்டாகுமா? இறந்துபோன தங்கள் புத்திர னிருக்கும்போதும், அப்புத்திரனுற்பத்தியாகு முன்னும் முதலியாரினதும் அன்னாரின் மனைவியாரினதும் நெருங்கிய இரத்த உறவினரின் பிள்ளைகளை ஆர்வத்தோடு பார்த்திருப்பார்களா? புன்முறுவல் செய்திருப்பார்களா? அவ்வாறு எவரும் செய்ய முடியாதென்பது இயற்கைத் தத்துவமல்லவா? அறிவும், செல்வமும் நிரம்பப்பெற்ற முதலியார் சுவிகாரம் பெறும் எண்ணத்தை நீக்கி தமது செல்வத்தையும், கல்வி யறிவையும்

இருமைக்கும் பயன்படக்கூடிய தரும கைங்கரியங்களில் அதிலும் முதன்மையாக வித்தியா தருமத்தில் செலவிடுவராயின் உலகம் அவரை எக்காலத்தும் புகழ்ந்து போற்றுமே. அவரது பெயர் உலகுள்ளளவும் பொன்றாப் புகழுடன் நின்று நிலவுறுமே. மித்திரன் ஆசிரியரவர்களும், அவர்போன்ற மற்றும் குல நண்பர்களும் இத்தகைய சீரிய தருமத்தைச் செய்யுமாறு மேற்படி முதலியாருக்கு அறிவுறுத்தவும், அதற்கு அவர் ஒருப்படவில்லையாயின் இலங்கையிலேயே நெருங்கிய இரத்த உறவினரின் பிள்ளைகளில் ஒருவனை சுவிகாரம் பெற முயற்சிக்கவும் அவரைத் தூண்டும்படி வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,

ஓர் யாழ்ப்பாணச் செங்குந்தன்.

குறிப்பு:—மக்கட்பேறு வாய்க்கப்பெறாதார் அயலார் மகனை சுவிகாரம் செய்து கொள்ளாது தமது அறிவையும் பொருளையும் அறநெறியில் செலவிடுதல் வேண்டுமென்பதே இதனை எழுதிய அன்பரின் முதற்கருத்தாகும். இக்கருத்து மிகச் சிறந்ததே யாயினும் இத்தகைய உயரிய நோக்கம் சாதாரணமாய் அனைவரது உள்ளத்திலும் அரும்புவது அருமையாகும். எவரும் பிறர்க்கு உபதேசம் செய்வது எளிது. ஆனால், செயலில் நடத்திக்காட்ட நேரும் சமயங்களிற்றான் அவ்வுபதேசத்தின் அருமையும், அதனை எவரும் எளிதில் கையாளுதல் இயலாதென்பதும் புலனாகும். ஒருவர்க்குரிய பொருள் முற்றையும் பொதுப்பணிக் காக்குவதென்பது உயர்ந்த மெய்ஞ்ஞானமும், பரந்த நோக்கமும், 'எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே, அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே' என்ற தாயுமானாரின் அருளமுதம் பாய்ந்தோடுந் திருவுள்ளமும் வாய்க்கப் பெற்றார்க்கன்றி ஏனையோர்க்கு இயலாதென்பது வெள்ளிடை மலை.

இரண்டாவதாக, தமது பொருளை பொதுநலத்திற் பயன்படுத்த விரும்பாதார் இரத்தக் கலப்புள்ள உறவினரின் மகனை சுவிகாரம் செய்து கொள்ள வேண்டுமென்றும், தமக்குச் சம்பந்தமில்லாத வெகு தூரத்திலுள்ள ஒருவனை சுவிகாரமாக ஏற்றுக்கொள்ளுதல் கலந்த உள்ளத்துடன் வாழ்க்கை நடத்துவதற்கு முடியாத தாகுமென்றும் குறிப்பிடுகின்றார்.

இக்கருத்தினை, சுவிகாரமாகத் தமது மகனைத் தர முன் வருபவர்களும், அவனை ஏற்றுக்கொள்பவர்களுமாகிய இரு பகுதியினரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுவது மிக மிக அவசியமாகும். நமது நோக்கமனைத்தும் இந்தியாவிற்கும் இலங்கைக்கு மிடையே உறவு கற்பிக்க வேண்டு மென்பதே. சுவிகாரம் தர முன் வருவோர் இவ்வொரு தூய்மையான எண்ணத்தை மனத்திற் கொள்ளவேண்டுமே யன்றி, தமது மகனுக்குப் பொருள் கிடைக்கு மென்றோ, அல்லது தமது மகன் பிற்காலத்தில் ஓர் உயர் தனிச் செம்மலாய்த் திகழக்கூடு மென்றோ நினைத்தல் கூடாதென்று அறிவுறுத்துகிறோம். இவ்வெண்ணங்களுடன் தருவராயின் நமது நோக்கம் முற்றுப் பெறுதற்கு முர-



ணாகவே காரியங்கள் பிற்காலத்தில் நிகழக்கூடுமென நாம் உறுதியாய் நம்புகிறோம். சுவிகாரம் தருவோர் நெருங்கிய உறவினராயினும், சம்பந்தமே இல்லாத அயலாராயினும் அவர்கள் மாட்டு இத்தூய எண்ணம் இல்லையாயின் சுவிகாரத்தின் நோக்கமே மாறுபடக் கூடும்.

மூன்றாவதாக விவாக பந்தத்தினா லன்றி வேறு வகைகளினால் இந்தியாவையும் இலங்கையையும் இணைத்தல் முடியாதென்பது அன்பர் கருத்தாகும். விவாக பந்தத்தால் இணைப்பது மிகச்சிறந்த தென்பதி லையமில்லை. என்றாலும், வேறொன்றினாலும் இணைத்தல் முடியாதென்பது ஒப்புக்கொள்ளத் தக்கதாக யில்லை. சுவிகாரம் செய்தலும் இதற்கோர் சிறந்த வழியென்றே எண்ணுகின்றோம். ஆனால், சுவிகாரம் செய்யுமுன் இரு திறத்தினரும் நன்கு கலந்து ஒருவர்க்கொருவர் அபிப்பிராயங்களை உள்ளூற அறிதல் இன்றியமையாததாகும்.

இந்த சுவிகாரத்தினாலேயே யன்றி விவாக பந்தத்தினாலும் இணைப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்ற தென்பதையும், விரைவில் அதுவும் நிறைவேறக் கூடுமென்பதையும் சமூக ஒற்றுமையில் ஆர்வமுடைய அன்பர்கள் பலருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவ்விடயங்களனைத்தையும் முன்னதாக நினைப்பூட்டிய யாழ்ப்பாணச் செங்குந்தருக்கு நமது நன்றியினை அறிவித்துக்கொள்வதோடு இரு பெரு நாட்டுச் செங்குந்தர்களையும் இணைப்பதில் அவருக்குள்ள ஆர்வத்தின் மிகுதியால் கிளத்திய இவ்வையப்பாடுகளை செங்குந்தரனைவரும் நன்கு அலசிப்பார்க்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(ஆசிரியர்)


வஸந்த விகடன்

(ஓர் உயர்தர ஹாஸ்ய மாதப் பத்திரிகை)

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கட்டுரைகள், கதைகள், படங்கள் அடங்கியதோர் மாதப் பத்திரிகை. சந்தா ரூ. 1. தனிப்பிரதி அணா 1½. ஒவ்வொரு ஆங்கிலமீ 20-ந் தேதி வெளிவரும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்குத் திறமை வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைக்கு உடனே எழுதுக.

மானேஜர், 'வஸந்த விகடன்' ஆபீஸ், மதுரை.

# கல்யாண சுந்தரத்தின் கல்யாணி

(ஜே. ரவூல். இலேர், புதுவை.)

காலை ஏறக்குறைய ஏழுமணி. இளஞ்சூரியன் உதித்தது கிழக்கு வானத்திலோ அல்லது இந்த அறையிலோ என்று கண்டோர் சந்தேகிக்கும் வண்ணம், அழகு வாய்ந்த கோமளம் தன் வீட்டு மெத்தையிலுள்ள அறையில் ஒருநாள் காலையில் அமர்ந்து பத்திரிகை ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தாள். சட்டென்று ஜன்னல் பக்கம் திரும்ப, வீதியில் சற்று தூலைவில் வந்துக்கொண்டிருந்த ஒரு இளைஞன்மேல் அவள் திருஷ்டி விழுந்தது. அவனை அவள் சிறிது கூர்ந்து கவனித்தாள். அவ்வாறு கவனித்ததற்குக் காரணம் சில தினங்களாக அவ்விளைஞன் வீட்டில் இரவு மணி ஒன்பதானதும் திறமையான ஆர்மோனிய வாசிப்போடு பொருந்திய கல்யாணி ராகத்தில் பாடும்பாட்டு அவள் மனதைத் துளைத்து வந்ததே. அவ்வித பாட்டுக்குக் காரணபூதர் அவரே என்று அவளறிவாள். அந்த வாலிபனும் இவளைக் கவனித்துப் பார்த்தும் பாராதவன்போல் அவ்விடத்தைத் தாண்டினான்.

பிடிவாதக்காரர்கள் ஒரு கூட்டம் கூடினால் அதில் தலைமை வகிக்க வேண்டியவர் கோமளத்தின் தந்தை குலசேகரம் பிள்ளை. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் எனக் கடைசிவரையில் சாதிக்கும் இயல்பினர். தமிழிலே தேர்ந்தவளும், பிடில் வாசிப்பதில் வன்மை யுடையவளும், மிருதுபாஷினியும், சுந்தரவதன முடையவளுமான அவளை, திருச்சிக்கடுத்த ஒரு கிராமத்தில் அவலக்ஷணத்தின் அவதாரமும், நிரட்சரகுட்சியும், ஆனால் திரண்ட செல்வத்துக் கதிபதியும், தன் நெருங்கிய பந்துவுமான ஒரு இளைஞனுக்கு வதுவை செய்து கொடுப்பதெனக் குலசேகரம் பிள்ளை தீர்மானித்திருந்தார்.

கோமளம் இராகம் பாடுவதிலும், ஹார்மோனியம் வாசிப்பதிலும் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தாள். அவளுக்கிருந்த இராக பைத்தியம் அவளது மனதை தினந்தோறும் கல்யாணி ராகத்தைப்பாடி களிக்கும் இளைஞன்மீது செலுத்தியது.

குலசேகரம் பிள்ளை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். இந்த இளைஞனோ காந்தி சிஷ்யன். தினந்தோறும் அன்னியத்துணி பகிஷ்காரம் செய்யும் ஆண்தகை. கருப்பும் செகப்புமாகிய இவ்விரண்டும் கூடுவது எப்படி? 'ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும்' என்பதுபோல் கோமளம் தன் தந்தையாரின் தீர்மானத்தைத் தன் தாய் ஒருநாள் சொல்லக்கேட்டு இடிவிழுந்தவள் போலானாள். தன் கருத்தை வினயமாய்த் தந்தைக்குத் தெரிவிக்கும்படி வேண்டினாள். ஆனால், தாயாருக்கோ குலசேகரம் பிள்ளையை நெருங்கவும் பயம். கொஞ்சமேனும் கோமளத்தைக் கலந்து யோசியாமலே திருமண காரியங்கள் ஒன்றன்பின் ஒன்றாக முஸ்தீப்பு செய்யப்பெற்றன. பத்திரிகைகளும் அச்சடித்தாய்விட்டன. குலசேகராருக்கோ திரண்ட செல்வ



மும் நெருங்கிய பாத்யதையும் உடைய மாப்பிள்ளை கிடைப்பானா என்கிற கருத்து.

அவர் தேர்ந்தெடுத்திருக்கும் மாப்பிள்ளையோடு வாழ்க்கை நடத்தவேண்டியவள் கோமளமே யன்றி குலசேகரம் பிள்ளை அல்ல. இவ்விஷயம் கோமளத்தின் மனதில் பளிச்சென்று மின்னல்போல் தோன்றித் தோன்றி மறைந்தது. இக் கலியாண விஷயத்தில் தன் பிரியக் குறைவை தெரிவித்தே விடுவதென்று ஒருநாள் தந்தையை அணுகினாள். கோமளம் தனக்கு வேண்டிய நகைகளைப்பற்றி கேட்க வந்திருப்பாள் என்று குலசேகரம் பிள்ளை நினைத்தார். சந்தோஷித்தார். ஏனெனில் திருச்சி மாப்பிள்ளை இதற்காக ரொக்கம் அனுப்பியிருந்தான்.

கோமளம்:—"என் பிரிய தந்தையே! பொருள் ஒன்றையே பெரிதாகக் கருதி என்னை பொருத்தமற்ற ஒருவருக்கு வாழ்க்கைப்படுத்த மனம் வந்ததா? கைநிறைந்த பணத்தைவிட கண்ணுக்கு நிறைந்த கணவனே மேல். அன்பில்லாக் கல்யாணத்தால் குணம் ஆவதுண்டோ? ஆயிரம் காலத்துப் பயிரல்லவா? செல்வம் சாத்வீக விருத்தியை அளிக்குமோ?"

குலசேகரம் பிள்ளையவர்கள் துள்ளி எழுந்தார். பிள்ளையவர்கள் தன் நசிச்சேரி விருந்து குதித்தெழுந்த மாதிரியைப் பார்த்திருந்தால் நாற்காலியில் ஏதோ விசை முடுக்கி இருந்தே அவரை அப்படித் தூக்கிப்போட்டது என்றே நினைக்கநேரும். கோபத்துடன் பேசத் தொடங்கினார். "நாலு பக்கம் புரட்டக் கற்றுக் கொண்டாயன்றோ? அதனால் விளைந்த கேடு இது. 'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்' என்று சும்மாவா சொன்னார்கள் முன்னோர்கள். பகல் முழுவதும் காந்தி பெயரைச் சொல்லிக்கொண்டு தெருவெல்லாம் சுற்றிக்கொண்டு வந்து, இரவானதும் 'ஙொய் ஙொய்' என்று அந்த ஆர்மோனியத்தை அடித்து அக்கம் பக்கத்திலுள்ளோர் தூக்கத்தைக் கெடுக்கும் அசட்டுப் பையன்மேல் உன் மனம் சென்றிருக்கிறதென்று நான் அறிவேன்."

டெலிபோனில் அதே நிமிடம் அழைப்பு. குலசேகரர்க்கு ஏதோ அவசரமாய் வரும்படி உத்தரவு ஏற்பட்டது. கடுகடுத்த முகத்துடன் உரிய உடையணிந்து வெளியே புறப்பட்டார்.

இதற்கு முந்திய தினம் அதே நேரத்தில் தன் செல்வி தமிழிலும், சங்கீதத்திலும் கொஞ்சம் ஆராய்ச்சி யுடையவள் என்று மிக்க மகிழ்ச்சியோடு தன் நண்பரொருவரிடம் பெருமை பாராட்டிக்கொண்ட அவர், 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என்று இப்பொழுது தன் கொள்கையை மாற்றிக் கூறத் தொடங்கிவிட்டார். அது பணத்தால் கொழுத்த அந்தத் திருச்சி மாப்பிள்ளையை மணக்க உடன்படவில்லை என்கிற காரணத்தாலாகும். ஆலைப் பலாவாக்கலாம். சுணங்கன் வாலை நிமிர்த்தலாம். நீலநிறக் காக்கைதனைப் பேசுவிக்கலாம். ஆனால் குலசேகராருடைய மூர்க்கத்தைத் தணிப்பது முடியாத காரியம். ஓயாச் சிந்தனை வாய்ப்பட்டாள் கோமளம்

அந்நியத்துணி மறியல், கள்ளுக்கடை மறியல் தீவிரமாக நடந்து வந்த நாட்களில் நமது கதையும் நிகழ்ந்தது. குறிப்பிட்ட இடத்துக்கு இன்ஸ்பெக்டர் குலசேகரம் பிள்ளை அமளியை அடக்க ஓடோடியும் சென்றார். சாத்வீகப் போராட்ட மென்பதை மறந்து மறியல் செய்யும் தேசப் பற்றுள்ள வாலிபர்களுக்காகப் பரிந்து, சில காலிகள் போலீஸ் வீரரைத் தாக்கினர். குலசேகரம் பிள்ளைக்கு சண்டையின் வலுவில் நல்ல அடி விழுந்தது. காயமும் ஏற்பட்டது. ஆனால் அச்சமயத்தில் கல்யாணசுந்தரம் வந்து அவரைத் தூக்கி வேண்டிய உபசரணைசெய்து அவரை இவ்விடம்சேர்த்து அகன்றான். அவன்மட்டும் வந்து உதவியில்லாவிட்டால் குலசேகரர் கதி அதோகதியாயிருக்கும்.

அன்று மாலை தினசரியில் இன்ஸ்பெக்டர் குலசேகரம் பிள்ளைக்கு நேர்ந்த விபத்தும், கல்யாணசுந்தர மென்னும் வாலிபன் அவருக்கு உறுதுணையா யிருந்தமையும் பாராட்டி எழுதப்பட்டிருந்தது. இதை வாசித்த கோமளம் புன்னகை பூத்தாள். ஆனால், அதே தினசரியின் அடுத்த பக்கத்தைத் திருப்பியதும் அவள் அடியற்ற நெடுமரம்போல் சாய்ந்தாள். "கல்யாண சுந்தரம் வீடு திரும்பு கையில் மோட்டார்காருக்கு இரையாகிக் கால் முறிந்து இப்பொழுது ஆஸ்பத்திரியி லிருக்கிறன். அவன் நிலைமை கவலைக்கிடமா யிருக்கிறது" என்று அங்கு குறிப்பிடப்பெற்ற செய்தி அவளை மூர்ச்சிக்கச் செய்தது.

கோமளம் கடவுளை நோக்கிச் செய்த களங்கமற்ற பிரார்த்தனை மகத்துவத்தால் குலசேகரரும், கல்யாண சுந்தரரும் கொஞ்சநாளில் பூரண சுகமடைந்தனர். குலசேகரரின் மனமும் அதற்குள் சற்று மாறுதலடைந்திருந்தது.

தேசப்பற்றுடைய கல்யாண சுந்தரம் கல்யாணிராகத்தில் பாடும் பாட்டு, மொழிப் பற்றுடைய கோமளத்தின் மனதைக் கவர்ந்து அதுவே காதலாய் முகிழ்த்திருப்பதை நன்கு உணர்ந்த குலசேகரர் தன் பழைய கொள்கையினை மறந்தார். அவள் விருப்பத்திற் கிசைய நடக்கத் தீர்மானித்தார்.

கோமளம் இப்பொழுது (Mrs. Kalyanasundaram) மிஸஸ் கல்யாண சுந்தரம் என்று சொல்லவும் வேண்டுமோ!

மாகாண புத்தகசாலை

எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்

வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்

விலாசம்:—

151, பவழக்காரத் தெரு சென்னை.

# மாதர் பகுதி

## பலகாரம் செய்முறை

[M. S. கோடன், திருச்செங்கோடு]

### மலபார் அல்வா

ஒரு வாயகன்ற பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் விட்டு, நன்கு பழுத்த பலாச்சுளைகளை துண்டு துண்டாய் நறுக்கி அதனுள் போட்டு, அடுப்பில் வைத்து பலாச்சுளைகள் வேகும் வரையில் கிளறவேண்டும். பின்பு நன்கு தூள்செய்த வெல்லத்தையாவது, அஸ்கா அல்லது ஜீனியையாவது வேண்டிய அளவு அதில் போட்டு அது குழம்பாகி அல்வா பதத்திற்கு வருகின்றவரை கிளறி, கொஞ்சம் நெய்யும் தேங்காய்ப் பாலும் விட்டு, தகுந்த அளவு ஏலப்பொடி, முந்திரிப்பருப்பு, பாதாமி, திராக்ஷை முதலியவைகளைப் போட்டு நன்றாய்க் கொதிக்க வைத்து, இரண்டொரு கிளறு கிளறி அடுப்பைவிட்டு இறக்கி, அகன்ற தாம்பாளத்திலாவது, பீங்கான் பிளேட்டிலாவது ஊற்றி, துண்டுகளாகச் செய்துகொள்ளவேண்டும். தின்பதற்கு இது மிகவும் ருசியாக இருக்கும்.

### காசி அல்வா

கல்யாண பூஷணிக்காய் ஒன்றை எழெட்டாக நறுக்கி அதை நன்கு துருவிக்கொண்டு சுத்தமாகச் சலவைசெய்த கெட்டியான வெள்ளைத் துணியில் போட்டு ஜலத்தைப் பிழிந்து மொத்தையாக்கிய பின், வேண்டிய அளவு ஜீனிசேர்த்து சாரப்பருப்பு, முந்திரி, திராக்ஷை, பாதாமி முதலியவைகளைப் போட்டுக் கலந்து, நெய்யி விட்டு வேகவைக்க வேண்டும். அதன் பிறகு, அத்துடன் ஏலப்பொடி, குங்குமப்பூ இவைகளை வேண்டியவரையில் போட்டு, ஐந்தாறு கிளறு கிளறி அடுப்பை விட்டு இறக்கிக்கொள்ளலாம். இது வாய்க்கு மிகுந்த ருசியை அளிப்பதுடன் தேகத்திற்கும் நல்லது. மலபந்தத்தையொழித்து தேகபலத்தைத் தரும் :

### பம்பாய் அல்வா

ஒரு நல்ல பூஷணிக்காயை மேற்சொன்னபடி அல்வா செய்து இறக்கி ஒரு தாம்பாளத்தில் கொட்டி சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். இதுவும் உடம்புக்கு ஆரோக்கியமானது.

# சிறுவர் சிறுகதை

## நீல விளக்கு

(ஈ. வே. சோ. கோவை)

முன்னொரு காலத்தில், ஒருதேசத்தின் சேனையில், ஒரு சிப்பாய் அநேக யுத்தங்களில் தன் ராஜாவுக்காக சண்டை யிட்டான். அந்தப் போர் வீரன் மிகவும் தீரமாக முன்னணியில் சண்டைசெய்த கடைசி மூன்று யுத்தங்களில் பலத்த காயங்களடைந்தும் அவைகளோடேயே உயிருக்குத் துணிந்து சண்டை செய்தான்.

அந்த யுத்தங்களில் அவ்வரசனுக்கு ஜெய மூண்டாகியதால் தேசத்தில் அமைதியும் செழிப்பும் நிலவியது. அந்த வீரன் அரசனிடம் சென்று யுத்தங்கள் முடிவாகி விட்டதாலும், தனக்கு காயங்களால் பலஹீனமா யிருந்ததாலும், சிறு வயதி லிருந்தே குடும்பத்தையும் சொத்தையும் கவனியாமல் சேனைக்கு வந்துவிட்டதாலும் தனக்கு சாப்பாட்டிற்கும், வசிப்பதற்கும் வசதி செய்யும்படி வேண்டினான்.

ஆனால், நன்றி யில்லா அவ்வேந்தன் " இந்தச் சமாதான காலத்தில் என்னிடம் உனக்கு வேலையில்லை ; நீ உன் வீட்டிற்குப் போகலாம் " என்று சொல்லி விட்டான்.

பார்த்தான் பட்டாள வீரன் ! ' ஆ ! இந்த நன்றியற்ற அரசர்களுக்காக கஷ்டப்பட்டு, உயிர் துறக்கும் பாமர மக்களாகிய நாம் ஏமாந்து போகிறோம். துண்டடி படுவதும், உயிரிழப்பதும், கை கால் அறுந்து கஷ்டப் படுவதும் ஏழை மக்களாகிய நாமாயிருக்க, அதன் பயனை, பெருமையை, லாபத்தை அனுபவிப்பது இவ்வன்னெஞ்சம் படைத்த சோம்பேறிகளா யுள்ளார்களே ! இதேபோன்று நம் தொழிலாளித் தோழர்களும் பெரும்பாடு பட்டு பகலும் இரவுமாக உழைத்து உழைத்து உணர்ச்சியற்று ஊண் உறக்கத்திற்கு வாடி, இருக்க இடமின்றி, கட்டத்துணியின்றிக் கதறுகிறார்கள். ஆனால், அவ்வுழைப்பின் பலனால் உண்டு உடுத்தி உறங்கிக் களிப்போர் செல்வந்தர்களா யிருக்கிறார்கள். இவ்வுலகின் நீதியற்ற தன்மை என்னே! அந்தோ! ஏழை மக்களாகிய தொழிலாளர்களும், பட்டாளத்துச் சிப்பாய்களாகிய எம்போன்றவரும் ஒருவருக்கொருவர் எதிரிகளாக்கப்பட்டு ஒருவர் மேல் ஒருவர் " உஸ் " ஸுப்படுத்தப்பட்ட நாய்கள்போல் விரோதித்து சகோதரத் தன்மையை மறந்துவிடுகிறோம். நம் நாட்டு ஏழைகளும் பிறநாட்டுப் பஞ்சையரும் சண்டையிட்டு மடிய இருநாட்டு அரசரும், பணக்கார வணிகர்களும் உணவு உடைகளாகிய விற்பனையில் கொள்ளை லாபம் கொழித்து கெக்கலி கொட்டுகிறார்கள். இதை ஆலோசித்துப் பார்த்தால், இருதேச அரசரும், வணிகரும் ஒன்று சேர்ந்து இருதேசத்திய ஏழை மக்களையும் வாட்டி வருத்தி வதக்கி, ஊன் உயிர் இரண்டையும்



உறுஞ்சுகிறார்கள் என்று நிச்சயமாகத் தெரிகிறது ! இனிமேலாவது இவ் வேமாற்றத்தைக் கண்டு நம் ஏழை மக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் உழைப்பின் பலனைப் பறிகொடுக்காமல் தாமே அனுபவிக்க முயற்சிக்க வேண்டும். " என்று யோசனை செய்துகொண்டே தன் ஊர் செல்லும் பாதையில் நடக்கலானான்.

ஊருக்குப்போகும் பாதையில் ஒரு அடர்ந்த காட்டைக் கடக்கும்போது வழி தெரியாமல் தவித்தான். சுற்றிப் பார்க்கும்போது சிறிது தூரத்தில் ' மினுக், மினுக் ' என்று வெளிச்சம் தெரிவதைக் கண்டான். அங்கு யாராவது இருக்கக்கூடுமென யூகித்து அவ் விளக்கை நோக்கி நடந்தான். அங்கே ஒரு குடிசையையும் அதில் ஒரு கிழவியையும் கண்டான். அவள் ஒரு கிழட்டுச் சூனியக்காரி. வீரனுக்கு அது தெரியாததலின் யாரோ மூதாட்டி என்று நினைத்து ' பாட்டி ! எனக்கு மிகவும் பசியாகவும், களைப்பாகவும் இருக்கிறது. கொஞ்சம் உணவும், இரவு தங்க இடமும் கொடுத்தால் உனக்கு வெகு புண்ணியமாகும். இல்லாவிட்டால் நான் இறந்து விடுவேன்' என்றான்.

சூனியக்காரி:—' ஒகோ ! சேனையை விட்டு ஓடி வந்தவனுக்கு உணவும், உறங்க இடமும் தரவேண்டுமோ? இருந்தாலும் எனக்கு ஒரு காரியம் செய்தால் உன் வேண்டுகோள்படி செய்கிறேன்.'

வீரன்:—'உனக்கு நான் என்ன செய்யவேண்டும் ?'

அவள்:—' நீ நாளைக்கு என் பூந்தோட்டத்தைக் கொத்தித் தர வேண்டும். இன்று நான் கொடுப்பதற்கு அது பிரதியாகிவிடும். '

வீரனும் அதை ஒப்புக்கொண்டு இரவு தங்கினான். காலையில் எழுந்ததும் சுறு சுறுப்பாக தன் முழு சக்தியையும் உபயோகித்துத் தோட்டத்தைக் கொத்தினான். ஆனால் பொழுது விழுந்து இருட்டாகியும் கூட முழுதும் முடிய வில்லை.

அந்தச் சூனியக்காரி:—' நீ ஒரு சோம்பேறி; இன்றைய பொழுதைக் கடத்திவிட்டாய். நாளைக்கும் உன்னை வைத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதற்குப் பிரதியாக நீ காட்டிலுள்ள விறகையெல்லாம் வெட்டி எனக்குக் கட்டிக்கொண்டுவந்து போடவேண்டும்' என்றாள்.

மறுநாள் வீரன் எவ்வளவோ கஷ்டப்பட்டு வேலைசெய்தும் வேலை முடியவில்லை. ஆயினும் விறகுக் கட்டைகள் பலவற்றைச் சேகரித்து விட்டான்.

அன்றும் கிழவி கோபமாக ' நீ விறகைக் கட்டிப்போடாமல் இன்றைக்கும் ஏமாற்றி விட்டாய் ! நாளைக்கும் உன்னை வைத்திருக்க வேண்டியிருக்கிறது ! ஆயினும் நாளைக்கு மிகவும் சுலபமான வேலை' என்று சொன்னாள். ' அது என்ன? ' என்று வீரன் கேட்டான்.

அவள்:—' என் வீட்டின் பின்புறம் உள்ள வறண்ட கிணற்றில் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் ஒரு நீல விளக்கு இருக்

கிறது. அதைத் தவறிப்போட்டு விட்டேன். நீ எடுத்து என்னிடம் கொடுத்துவிட வேண்டும்; அவ்வளவுதான் உன் வேலை, என்றாள்.

மறுநாட் காலை கிழவி வீரனை ஒரு கூடையில் வைத்துக் கயிற்றினால் கிணற்றுக்குள் கட்டிவிட்டாள். உள்ளே மிகவும் மங்கலாக ஒரு நீலநிற விளக்கு எரிந்துகொண்டிருந்ததை வீரன் கண்டான் இறங்கி விளக்கை எடுத்துக்கொண்டு கூடையில் ஏறித்தன்னை மேலே இழுக்கும்படி கிழவிக்குக் கயிற்றை ஆட்டிச் சைகை செய்தான். கிழவியும் நீல விளக்கைப் பெறலாம் என்ற ஆசையுடன் மேலே இழுத்தாள். சுமார் தரை மட்டத்திற்கு வீரன் விளக்குடன் வந்த உடனே, அக்கிழவி ஆத்திரத்துடன் 'அந்த விளக்கைக் கொடு' என்று கையை நீட்டிப் பிடுங்கவந்தாள். பார்த்தான் வீரன். அவள் இருந்த நோக்கத்தில் விளக்கைப் பிடுங்கிக்கொண்டு தன்னைக் கிணற்றில் விழும்படி கயிற்றை விட்டுவிடுவாள் என்று ஊகித்துணர்ந்த வீரன் 'நான் தரை மேல் வந்த பிறகு தான் விளக்கைத் தருவேன்' என்று, விளக்கைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். அந்தச் சூனியக்காரி தன் மோசடியான எண்ணம் பலிக்காது எனக் கண்டதும் கோபத்துடன் கயிற்றை விட்டுவிட்டாள்.

வீரனும் விளக்கும் அதிக ஆபத்தின்றி கிணற்றில் விழுந்தார்கள். வீரன் 'சரி, நம் கதி இது தான்; இந்த கிணற்றிலிருந்து இனி மேலே போக முடியாது. பட்டினியால் மடியவேண்டு மென்பது தான் நம் தலையெழுத்து' என்று நினைத்துக்கொண்டே கடைசியாய் புகைபிடிக்கும் குழாயை எடுத்து எப்பொழுதும் எரிந்துகொண்டிருந்த நீல விளக்கில் புகை பற்றவைத்துக் குடித்தான்.

அவன் சிறிது நேரம் குடித்ததில் புகை மெதுவாக ஆகாயத்தில் சிறிது தூரம் எழும்பியது. அச்சமயம் அவனுக்கு எதிரில் திடீரென்று ஒரு குட்டை மனிதன் தோன்றி 'எஜமானே! தங்கள் உத்தரவு என்ன? அதன்படி செய்ய சித்தமா யிருக்கிறேன்' என்று கூறினான்.

ஆச்சரிய மடைந்த வீரன்:— 'நான் எதற்கு உனக்கு உத்தரவிட வேண்டும்.'

குள்ளன்:— 'நான் நீல விளக்கைச் சேர்ந்தவன், உங்கள் உத்தரவுப்படி நடப்பது என் கடமை'

வீரன்:— 'அப்படியானால், நான் வெளியேறும்படி உதவி செய்'

அக்குறுகியோன் 'வாருங்கள்' என்று சூனியக்காரி அளவற்ற பொக்கிஷத்தை மறைத்து வைத்திருந்த சுரங்கத்தின் வழியாக வழி காட்டிப் போனான். முதலில் அக்குள்ளன் நீல விளக்கையும் கையில் கவனமாக எடுத்துக்கொண்டு வந்தான். அந்த திரவியத்தில் தூக்க முடிந்த அளவு வீரன் எடுத்துக்கொண்டு குள்ளனைத் தொடர்ந்து வெளியேறினான். மேலே வந்ததும் குள்ளன், 'இன்னும் என்ன செய்ய



வேண்டும்.' என்றான். வீரன் 'உடனே அந்தச் சூனியக்காரியை நியாயாதிபதி முன் கொண்டுபோய் சரியானபடி தண்டிக்கவேண்டும்' என்றான்.

சில விநாடிக்குள் அத்திருட்டுக் கிழவியை வீறிட்டுக் கத்தக்கத்த ஒரு காட்டுப்பூனை தூக்கிக்கொண்டு வேகமாய் ஓடிற்று. 'இன்னேரம் அவள் தண்டிக்கப்பட்டுத் தூக்குமரத்தில் தொங்கிக்கொண்டு இருப்பாள். வேறு என்ன காரியம் செய்யட்டும்' என்றான் குள்ளன்.

அவ்வீரன் 'இப்போது வேறு வேலை யில்லை; நீ போகலாம். வேண்டும்போது கூப்பிடுகிறேன்' என்றான். அக்குட்டையன் 'நீர் கூப்பிடவேண்டிய அவசியமில்லை. என்னை அழைப்பதற்கு அந்த நீலவிளக்கைத் தூண்டி புகை பற்றவைக்க வேண்டியது தான் தாமதம், தக்ஷணம் நான் உன்பக்கத்தில் வந்து நிற்பேன்,' என்று சொல்லி மறைந்துவிட்டான்.

அப் போர்வீரன் நேராகப் பட்டணத்திற்குப்போய் ஒரு சத்திரத்தில் தங்கி வசிக்கலானான். தன்னைப்போன்ற போர்வீரர் தொழிலாளிகள் முதலானவர்களுக்கு நீல விளக்கின் இரகசியத்தை இரகசியமாகச் சொல்லி அதனால் பல விஷயங்களுக்கு அனுகூலம் செய்துவைத்தான்.

ஒருநாள் நீல விளக்கில் புகை பற்றவைத்தான். குள்ளன் 'உத்தரவு என்ன' என்று கேட்டுக்கொண்டே அவன் முன் தோன்றினான்.

வீரன், 'நான் இந்நாட்டு அரசனுடைய சேனையில் அவனுக்கு என்று என் உயிரைத் துரும்பாக மதித்து பல யுத்தங்களில் பலத்த காயங்களுடன் சண்டைசெய்தேன். கடைசியில் காயமடைந்த என்னை சிறிதும் நன்றியில்லாமல் பட்டினி கிடந்து சாகும்படி விட்டுவிட்டான். அதற்குத் தகுந்த நியாயம் பெறவேண்டும், என்றான். குள்ளன் 'அதற்காக நான் என்ன செய்யட்டும்' என வினவினான்.

வீரன்:— 'நீ இன்றிரவு ராஜாவின் மகளை என துறைக்குக் கொண்டுவா; எனக்கும் என்போன்ற ஏழைகளுக்கும் அவள் வேலைக்காரியாக பணிவிடை செய்துவிட்டுப் போகட்டும்' என்றான். குள்ளன் உடனே 'இந்தவேலை எனக்குப் பிரமாதமான தன்று. ராஜனறிந்தால் உன் தலைக்குப் பிரமாதம் வந்து விடும், என்று கூறிச் சென்றான். (தொடரும்)

---

## இரண்டு ரூபாய் பரிசு

பிரதி மாதமும் பிரசுரிக்கப்படும் விகடத் துணுக்குகளில் சிறந்த ஒன்றுக்கு இனி 2 ரூபா பரிசளிக்கப்படும். மற்றவை அவர்கள் பெயர்களுடன் வெளியிடப் பெறும். (ப-ர்)

# பொறாமைப் பெருந் தீ

அல்லது

# அற்ப ஆசையின் ஆபத்து

(திரு. ச. கந்தையா, கரவெட்டி)

"காது என்ன அடைச்சா போச்சு; கூப்பிட்டால் பேசுகிறீர்களில்லையே. சேலை வாங்கிப் போடும்படி எத்தனை நாளாச் சொல்றது. தீபாவளியைப்பற்றிச் சிந்தித்தீர்களா? படுக்கையைவிட்டெழுந்தால் பாவமா வந்துவிடும்" என்று கர்ஜித்தாள் அம்புஜம்.

இடியிடித்தாற் போன்ற இப் பேரிரைச்சலைக் கேட்ட இராமசாமிப்பிள்ளை திடுக்கிட்டு எழுந்தார். தர்மபத்தினி காளி உருவுடன் விளங்குகிறாள். பிள்ளையவர்களுக்குப் பாதி உயிர் போய்விட்டது. "கண்ணே! மானேஜர் வீட்டுக்குப் போய் இப்போதுதான் திரும்பி வந்தேன். சம்பளம் நாளைக்கே தரப்படுமாம். உனக்கு வேண்டிய வஸ்திரங்களை நாளைக்கே நிச்சயமாக வாங்கிவிடுகிறேன்" என்று பல்லை யிளித்தார் பிள்ளையவர்கள்.

சாயந்தரம் 5-மணி; புடவை"ஷாப்" ஒன்றினுள் நுழைந்தார் பிள்ளை. உள்ள எல்லா தினுசு சேலைகளும் காட்டியாய்விட்டன. பிள்ளைக்கோ ஒன்றிலும் மனம் படியவில்லை.

"என்னசாமி! 'காலணாவுக்குக் குதிரையும் வேணும்; காததூரம் போகவும் வேணும்' எனக் குரங்குப்பிடி பிடிக்கிறீர்கள்" எனச் சிறிது எரிச்சலுடன் ஒரு போடு போட்டான் கடைக்காரன்.

இராமசாமிப்பிள்ளை எப்பொழுதுமே ஒரு பெரிய பயங்கொள்ளி. எனவே ஏறுண்ட நாகம்போலத் திகைத்து நோக்கினார். அப்புறம் அதிகமாகப் பேச்சை வளர்த்திக்கொள்ள அவரது மனம் இசையவில்லை. சேலைகளும் வாங்கியாய்விட்டன.

வெளியேறினார் பிள்ளை. எதிர்க்கடையில் நின்ற ஒருவன் கையை நீட்டி வரும்படி சைகை செய்யவே பிள்ளையும் அங்கு சென்றார். "என்ன சாமி, புடவைகள் என்ன விலை?" என்று சொல்லிக்கொண்டே கையை நீட்டினான். "எட்டேகால் ரூபா" எனக் கூறிவிட்டு புடவைகளைக் கொடுத்தார் பிள்ளை.

"ஓ! எட்டேகால் ரூபாவுக்குக் கொடுக்கமுடியாது." "ஆமாம்; பன்னிரண்டு ரூபா வரையிற் சொல்லிவிட்டார்கள். அவர்கள் சொல்லியபடி கொடுக்க நாங்கள் என்ன அவ்வளவு மடையர்களா? "போடா பேயா! இந்தத் துணிகளை $8\frac{1}{4}$ ரூபாவாகவா கொடுக்கும்படி சொல்லுகிறாய்; நீ புடவை வாங்குபவன் போலத்தான் தோற்றுகிறது. 12 ரூபாவுக்குக் குறையக் கேட்கவே வேண்டாம்; போய்விடலாம்."



எனச் சொல்லிவிட்டு மற்றப் புடவைகளுடன் சேர்த்துவிட்டான் சண்டாளன்.

பார்த்தார் பிள்ளை; "அட சனி! இதேது பேரிழவாயிருக்கிறதே! ஏதாவது திருப்பிக் கேட்டால் முதலில் உதை விழுந்தால்;......"

வெறுங்கையுடன் வீடு வந்து சேர்ந்தார் பிள்ளை. தர்ம பத்தினியின் வாழ்த்தொலி பேரிகைபோ லிருக்கிறது. இரவு கழிந்தது.

காலை யெட்டு மணி. கடித மொன்று பிள்ளையவர்களுக்கு வந்தது.

அன்புடையீர்! கொழும்பு 10-1-35.

உங்களுடைய புடவையைப் பெற விரும்பினால் இன்று சாயந்தரம் $6\frac{1}{2}$ மணி யளவில் கடற்கரைக்குத் தனிமையாய் வாருங்கள். உங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. இது சத்தியம்.

அன்பன்..................

பிள்ளைக்கு ஆநந்த மொருபுறம்; அச்சம் ஒருபுறம். பெரிதும் யோசித்தார். ஈற்றில் "போவதுதான்" என்ற முடிவுக்கு வந்தார். மணியும் $6\frac{1}{2}$ ஆய்விட்டது. புறப்பட்டு நேரே கடற்கரையை யடைந்தார். பின்புறமாக வந்த ஒரு வாலிபன் "நீங்கள்தானா ராமசாமிப்பிள்ளை" என்றான். "ஆம்" என்றார் பிள்ளை.

"சரி, இங்கே வாருங்கள்" என அழைத்துச் சென்று ஒரு காரில் ஏற்றினான். கார் மனோவேகமும் பின்னிடச் சென்று ஒரு வீட்டின் தெரு வோரமாக நின்றது. எல்லோரும் வீட்டுள் சென்றனர்.

"ஸார்! ஒளிக்காமல் உள்ளதைச் சொல்லும். உமது மானேஜர் சோணாசலம் பிள்ளைக்கு நான் பகைவனென்பது உமக்கே தெரியும். என்னைப்பற்றி ஏதாவது உங்களிடம் அவர் கலந்து ஆலோசித்ததுண்டா? உண்மை சொன்னால் ரூபா 1000 இனாம் தருகிறேன்"

பிள்ளை யவர்களுக்கு ஆயிரம் ரூபா என்ற உடன் நாக்கில் நீர் சுரந்தது. "1000 ரூபா இனாமளிப்பது உண்மைதானே"

"அதற்கென்ன ஆட்சேபம். அது முற்றிலும் உண்மையான காரியம்........"

**[இந்தக் கதை முடிவு பெறமல் குறைவாக நிற்கிறது. எனவே, உயரிய நீதி யொன்றைக் கற்பிக்கும் வகையில், மீத்திரனில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாத அளவில் இந்தக் கதையினைப் பூர்த்தி செய்து 5-2-35க்குள் நமக்குக் கிடைக்குமாறு அனுப்ப ஒவ்வொருவரும் முயற்சி செய்யுங்கள். அவ்வாறு அனுப்பப் பெறுமவற்றுள் சிறந்த ஒன்றுக்கு 2 ரூபாய் பரிசளிக்கப்படும். (ப-ர்)]**

# பாவத்திற்கு மன்னிப்புண்டோ?

["பால்யன்"]

பரீட்சை முடிவுகாலம்: தியாகராஜன் அன்று தனது கடைசி பரீட்சையாகிய "எகனமிக்ஸ்" ஸை (Economics) எழுதிவிட்டு இடையர் வீதியில் உள்ள தனது வீட்டிற்கு பஸ்ஸில் போகிறான். தான் எழுதி வந்த "எகனமிக்ஸை"ப்பற்றி அவனுக்கு ஒரு சிறிதும் நினைப்பே இல்லை. ஏன் என்றால் தன் மனமாய கோவிலில் இருத்தி கனவிலும், நனவிலும் பூஜித்து வரும் பெண் தெய்வம் அவன் எதிரே உட்கார்ந்திருந்தாள்.

ஆம்! அவள் அவ்வளவு அழகு உடையவளே! தியாகராஜனுக்கு அவள் அழகிய வசீகர முகத்தை உற்று நோக்க, நோக்க, கிரேக்கர் காலத்தில், "டிராய்" (Troy) நகரில் வசித்த இணையிலா அழகு வாய்ந்த "ஹெலன்" என்னும் மாதரசியைப் பற்றி சரித்திரத்தில் படித்தது ஞாபகத்திற்கு வந்தது. இவள் இக்காலத்திய ஹெலனோ என்ற பிரமிப்பும் அடைந்தான்.

தியாகராஜனுக்கு அவளுடன் பேசவேண்டும் என்ற ஆசை. எனவே, மெதுவாக "ஆ! நீ ராமுவின் தங்கை யல்லவா?" என்றான்.

வெட்கிய அம்மங்கை, "இல்லையே! எனக்கு அண்ணனே கிடையாது".

தியாகராஜ் —"நீ, அவனைப் போலவே இருக்கிறாய். அதே முகம்; அதே அழகிய கண்கள். ஒரு வேளை அவன் உன் உறவினனாய் இருக்கலாம். இல்லையா?"

தேவகி—(அதுதான் அவள் பெயர்—புன் முறுவல் பூத்தாள்.) "எனக் கொருவரும் அப் பெயருடையவர்கள் உறவின ரில்லை. ஆனால், பாலு எனது தந்தையின் ஒன்று விட்ட சகோதரரின் புதல்வன். காலேஜில் "செகண்ட்" கிளாஸ் படிக்கிறான்.

தியாகராஜ்:— ஓகோ! அப்படியா? பாலு எனது ஆப்த நண்பர்களில் ஒருவனா யிருந்தும் இதுவரை உன்னைப்பற்றி ஒரு வார்த்தை கூட என்னிடம் பேசியதில்லை! அவன் மாத்திரம் இங்கிருந்தால் என்ன செய்வேன் தெரியுமா?"

தேவகியின் கன்னங்கள் சிவந்து, தலை நாணியது. தியாகராஜனின் "கணீர்" என்ற குரலையும், சிரித்த முகத்தையும், அவனுக்கே தெரியாது தோற்றுவித்த கண்ய குணத்தையும் காண அவன்மேல் ஒருவித பிரியம் கொண்டாள்.



இடையர் வீதி வந்தது. அவளிடம் விடைபெற்றுத் தனது வீட்டுக்குச் சென்றான். சில தினங்களில் அவளது ஆப்த நேசனானான். தேவகியின் வீட்டில் அவள் தாயையும், பாலுவையும், அவளையும் தவிர வேறொருவரும் கிடையாது.

* * *

தியாகராஜ் மேலே படிக்கும் உத்தேசத்தை—(தற்காலக் கல்வி, அறிவு வளர்ச்சிக் கல்ல வென்னும் திடமான நம்பிக்கை யுடையவனாதலால்) நிறுத்தி விட்டு பல கம்பெனிகளுக்கும், ஆபீஸ்களுக்கும் அப்லிகேஷன் போட்டிருந்தான்.

மே மாதம் 'ரிஸல்ட்' வந்தது. தியாகராஜ் (First class) முதல் வகுப்பில் தேறி இருந்தான். இவனுடைய அப்லிகேஷன் ஒன்றுக்கு மதராஸ் கம்பெனியிலிருந்து பதிலும் வந்திருந்தது.

தேவகிக்கு தியாகராஜை விட்டுப் பிரியவேண்டுமே என்ற கவலை; தியாகராஜனுக்கு தேவகியை விட்டுப் போகவே மனம் இல்லை. கம்பெனிக்குச் சென்று ஆஜராகவேண்டிய நாள் வந்தது. இன்னும் ஒரு வருடத்திற்குள் வந்து தேவகியை மணந்து செல்வதாக பிரமாணிக்கம் செய்யவே கண்ணீரும் கம்பலையுமா யிருந்த தேவகி மனந் தேறி விடை கொடுத் தனுப்பினாள்.

* * *

சில மாதங்கள் கடந்தன. அழகிய தேவகியை மணம் செய்து கொள்ள பலர் வந்து கேட்டனர். ஆனால் தேவகியின் தாயார் அவள் தியாக ராஜனின் காதலி என்றும், இன்னும் சில மாதங்களுள் அவனே வந்து அவளை மணந்து செல்லக்கூடும் என்றும் விடை இறுத்தாள்.

தேவகி எழுதிய பல கடிதங்களுள் ஒன்றுக்காவது பதில் கிடைக்கவில்லை; மனம் மிக வருந்தினாள். தன் காதலனுக்கு என்ன நேர்ந்ததோ, தேக அசௌக்கியமோ—அல்லது—அங்கு மலிந்துள்ள பரத்தையர் கண்வீச்சு வலையில் மயங்கி வீழ்ந்து தன்னை மறந்து விட்டாரோ என்றெல்லாம் எண்ணும் போது அவள் மனம் படாத பாடு பட்டது. அதை நினைந்து பல இரவுகள் துயில் கொள்ளாது புரண்டு புரண்டு கண் கலங்கினாள். என்றாலும், தனது தியாகராஜ் அவ்விதம் செய்ய மாட்டார் என்ற சூரிய ஒளி அவ்வப்போது அவள் கவலை—துக்க மேகத்திடை கிளம்பும்; மனம் தேறுவாள். தனது தாயிடத்திலும் ராஜன் எப்படியும் தன்னை மணந்து செல்வான் என்று அடிக்கடி கூறுவாள்.

இவ்வாறு ஒரு வருடமும் நான்கைந்து மாதங்களும் கழிந்தன. ஒரு நாள் தேவகி ஒரு "டாக்ஸீ" யில் காலேஜிலிருந்து வந்து கொண்டிருந்தாள். ஒயின் மயக்கத்தால் தலை கிறு கிறுத்து "டிரைவ்" செய்து கொண்டுவந்த ஆங்கிலேயனது 'பிளஸர்' ஒன்று, "டாக்ஸியில்" மோதியது. வண்டிக்காரனுக்குப் பலத்த காயம்; தேவகிக்குச்

சரியான அடி. அப்போது அவ்வழியே சென்ற "ரெட்கிராஸ்" பஸ் இவர்கள் இருவரையும் ஏற்றிச் சென்று திருச்சி அரசாங்க ஆஸ்பத்திரியில் சேர்த்தது. தேவகியின் வேண்டுகோளின்மேல் தேவகியை அவள் வீட்டிற்கு "பஸ்ட் எயிட்" டுக்குப் பிறகு எடுத்துச் சென்றார்கள்.

ஹோம் டாக்டரும், நர்ஸ்களும் அவளை சிகிச்சை செய்தனர். தான் இனி இவ்வுலகில் அதிக காலம் வசித்திருக்க முடியாதென்று எப்படியோ அறிந்ததின் பேரில் ராஜனுக்கு உடனே வருமாறு ஒரு தந்தி கொடுக்கச் சொன்னாள்.

தந்தியும் கொடுக்கப்பட்டது; தியாகராஜனும் வந்து சேர்ந்தான்;

தியாகராஜ் தனது காதலி வீட்டு வாசற் படியில் டாக்டரை சந்தித்தான். மிகுந்த வருத்தத்தோடு 'அவளுக்கு உடம்பு எப்படி இருக்கிறது? சொல்லும்! சொல்லும்!!' என்று கதறினான்.

"பரவாயில்லை; நீ சரியான வேளையிலேயே வந்திருக்கிறாய். உனக்காக அவள் வெகுநாள் காத்திருந்தாள். சந்தோஷமாக இப்போது உயிர் துறப்பாள்' என்று வருத்தத்துடன் தெரிவித்தார் "ஓ!" என்று தலையி லடித்துக் கொண்டான்.

பின்பு, மெதுவாக சப்த மின்றி தேவகியின் அறைக்குள் நுழைந்தான். அங்கிருந்த கட்டிலில் தேவகியைக் கண்டான். ஆ! இவ்வளவு அழகியின் இன்னும் சரிவர துவங்காத வாழ்வை கடவுள் முடிக்கிறாரே என்ற எண்ணம் அவன் மூளையைத் துளைத்தது. "ஆ! தியாகு!" என்ற இனிய குரல் அவன் காதுக்கு எட்டியது.

தேவகி! நினது தந்தி கண்டேன். ஓடிவந்தேன். நான் ஒரு—" என்பதற்குள்,

"எனக்கு விடை கொடுத்தனுப்ப அல்லவா? ராஜு!"

"ஆ! கடவுளே! தேவியே! அதற்கல்ல!—

"ஆமாம்! தியாகு! இன்னும் ஒரு மணி அல்லது இரு மணி நேரத்தில் அப்படியே செய்வாய்! நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன்—காதலிக்கிறேன். என்—எப்போதும் நேசிப்பேன்," என்றாள். அவள் அழகிய முகம் காதலனை விட்டுப்போகப் போகிறோமே என்ற எண்ணரிய துயரை 'பளிச்'சென்று காட்டியது.

"இந்த எக்ஸிடன்ஸ்." நடந்திராவிடில் விஷயம் வேறாக அல்லவோ இருக்கும். நான் உலகில் முக்கியமாக அடையவேண்டுமென்றிருந்ததை அடைந்திருப்பேனே!—உன்னை மணந்து இருப்பேனல்லவா?"—என்றாள்.

"உன்னை மணந்து கொள்ளத்தானே நான் இங்கு வந்தது—அதனால்" என்றான். இதைக் கேட்டதும் தேவகியின் முகம் ஒளியுற்றது. உன்னைக் கணவனாகக் கொண்டபிறகு இந்த உலகில் நான் வேண்டுவது ஒன்றுமே இல்லை" என்றாள், உவகையடைந்த தேவகி.



தியாகு வெளியே காத்துக்கொண் டிருந்த டாக்டரிடம் ஏதோ 'குசுகுசு' வென்று சொல்லிவிட்டு வந்தான்.

கொஞ்ச நேரத்தில் ரெவரன்ட் ஸ்டோன் (Rev Stone) ஆஜரானார். அவர் கையில் ஒரு விவாக லைசென்ஸும், ஒரு வணக்க புத்தகமும் இருந்தன.

தியாகனும், தேவகியும் ஞானத் தண்ணீர் தெளிக்கப்பெற்று "பேப்டைஸ்" செய்யப்பட்டனர். மோதிரம் மாற்றிக் கொண்டதும் வணக்க புத்தகத்தைத் திறந்து "மடமட" வென்று படித்தார் சாமியார்.

விண்ணுலக வாசற்படி யண்டை அனுமதி பெற்றுக்கொண்டிருந்த தேவகி தியாகராஜனின் மனைவியானாள்.

இதற்கு முன் ராஜு ஏன் வரவில்லை என்றாவது, தனது லெட்டர்களுக்கு ஏன் பதில் எழுதவில்லை என்றாவது தியாகுவை கேட்டாளில்லை. 'நாம் ராஜனின் மனைவியாக இறக்கிறோம்' என்ற நினைப்பே அவளுக்கு முழு மன திருப்தியையும், சாந்தியையும் அளித்தது. அவள் உலகில் வசித்ததற்கு இதுவே போதுமென்ற மன அமைதியோடு உயிர் நீத்தாள். தியாகு துடிதுடித்து அலறினான்.

* * *

ரெவ் ஸ்டோன் கூடத்தில் உட்கார்ந்திருந்தார். ராஜு அவரை அணுகி, ஈன சுரத்தில், "அய்யனே! பாவத்திற்கு மன்னிப்புண்டோ?" என்றான்

அவர்: "பாவத்திற்கா, மகனே?"

"ஆம் அய்யனே! நான் ஒரு பாதகன்! அவள் கடிதங்கட் காவது—,"

"என்ன பாவம் செய்தாய்?"

"ஒருவன், ஒரு மனைவி உயிருடனிருக்க மற்றொருவளை மணந்த மிகப்பெரும் பாவந்தான்!—" என்று குழறினான்.

---

## சிறுகதைப் பரிசுகள்

**தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.**




## கிரீக்தேச அறிஞர் ஒருவர் கூறிய அறமொழிகள்

ஒரு தந்திரசாலி 'மைலிடஸ்' என்னும் அறிஞரைத் தயங்கும்படி செய்யவேண்டுமென்று மிகக் கடினமான சில கேள்விகளைக் கேட்டான். அவைகளுக்கு அவ்வறிஞர் சிறிதும் தயக்கமின்றி உடனுக்குடனே குறிப்பாகவும், தெளிவாகவும் விடையிறுத்தார். *அவையாவன :—*

1. *மிகவும் பழைமையானது எது ?*
கடவுள்—ஏனென்றால் அவர் எக்காலத்தும் உள்ளார்.

2. *அனைத்திலும் அழகான வஸ்து எது ?*
இவ்வுலகம்—ஏனென்றால் இது கடவுள் சிருஷ்டி.

3. *எல்லாவற்றிலும் மிகப் பெரியது எது ?*
ஆகாயம்—ஏனென்றால் சிருஷ்டியிலுள்ள சகலத்தையும் அது தன்னுள் அடக்கிக்கொண்டுளது.

4. *யாவற்றையும் விட நிலையாக உள்ளது எது ?*
நம்பிக்கை—ஏனென்றால் மனிதன் எல்லாவற்றையும் இழந்து விட்ட போதிலும்கூட அவனிடம் அது இருந்து வருகிறது.

5. *எல்லாவற்றையும் விட சிறந்தது எது ?*
நல்லொழுக்கம்—ஏனென்றால் அது இன்றேல் நல்லது வேறென்று மிருக்கமுடியாது.

6. *அனைத்திலும் வேகமானது எது ?*
எண்ணம்—ஏனெனில் ஒரு விநாடிக்கும் குறைவான காலத்திற்குள் அது அண்டகோளங்களுக்கும் அப்பாற் செல்லும் சக்தி வாய்ந்ததா யிருக்கிறது.

7. *எல்லாவற்றையும்விட பலமுள்ளது எது ?*
அவஸ்யம்—ஏனென்றால் அது, வாழ்க்கையில் நேரும் சகல கஷ்டங்களையும் எதிர்க்கச் செய்கிறது.

8. *சகலத்திலும் சுலபமானது எது ?*
உபதேசம்—ஏனென்றால் அது வெறும் வாய்ச்சொல்தானே.

9. *எல்லாவற்றைவிட மிகக் கடினமான காரியம் எது ?*
தன்னைத்தானே அறிந்துகொள்ளல்—ஏனென்றால் அது பல நாள் பழக்கத்தால்—ஆசாரியன் அருளினல் சித்திக்க வல்லது.

10. *அனைத்தையும்விட அறிவுள்ளது எது ?*
காலம்—ஏனெனில் அது சகலத்தையும் வெளிப்படுத்திவிடுகிறது.

ஈ. வே. சோ. கோவை.

# வர்த்தமானம்

## தமிழ்நாட்டு நடப்பு

*சென்னையை யடுத்த கோடம்பாக்கம் என்னும் திவ்விய தலத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ பழநியாண்டவர் ஆலய திருப்பணிகள் ஸ்ரீ பாக்கியலிங்கத் தம்பிரான் சுவாமிகள் முயற்சியால் செவ்வனே செய்யப்பெற்று 8-2-35 காலை 7½ மணிக்கு மஹா கும்பாபிஷேகமும் அன்றிரவு வீதிவல உற்சவமும் மிகச் சிறப்பாய் நடைபெறுமென ஒரு அன்பர் அறிவிக்கின்றார்.*

---

*வடாற்காடு ஜில்லா குருவராஜப் பேட்டையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு தைப்பூச அபிஷேகம் நிகழும் தை மாதம் 6உ நடைபெறுமென்றும், மறுநாள் அலங்கார வீதிவல உற்சவமும் ஏழைகள் அடியார்களாகியவர்களுக்கு அன்னதானமும் நடைபெறுமென்றும் ஒரு நிருபர் அறிவிக்கிறார்.*

---

*மதுரை ஜில்லா பழனி அடிவாரத்தில் நமது மரபினர்களுக்குப் பொதுவான மடத்தில் பின்புறமுள்ள காலி நிலத்தில் ரூ. 3000-0-0 வரை செலவு செய்து தல்லாகுளம், கோரிப்பாளையம், திருவாப்புடையார் கோவில் செங்குந்த உறவின் முறையார்களாலும், ம-௱-௱-ஸ்ரீ தி. ச. பழனியப்ப முதலியார், த. நா. பழனியப்ப முதலியார், ப. மு. வையாபுரி முதலியார், ப. மு. ப. முத்துக்குமரன் முதலியார், அ. ம. ப. ம. பழனியாண்டி முதலியார், செ. செண்பக முதலியார் இன்னும் சிலருடைய முயற்சியாலும், பல ரூம்கள் தடுக்கப்பட்டும், சுமார் 1000 பேர்கள் வரை தங்கும்படியான வசதிகள் செய்யப்பட்டும் நிகழும் பவ௵ கார்த்திகை௴ 27உ புதன்கிழமை யன்று கிரஹ பிரவேசம் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. அதே நாளில் ஸ்ரீ தண்டபாணிக்கு தீபாராதனைகள் நடாத்தி சுமார் 3000 பேர்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.*

---

## தமிழ் அபிவிர்த்தி சங்கம், இளங்குளத்தூர்

*ஷை சங்கத்திஞதரவில் 1-1-35-ல் 1-வது பொதுக்கூட்டம் மூத்திருஞாண்டிமுதலியாரின் தலைமையின்கீழ் கூடிற்று. சங்கத்தின் அங்கத்தினர் உள்பட சுமார் 50 பேர் குழுமி இருந்தனர்.*

*கூட்டத்தினிடையே மூத்துரூமலிங்கம் 'சங்கமும் அதன் பயனும்' என்பதுபற்றி நன்கு விளக்கிக் கூறினர். அதன்பின் சங்கத்தின் நிபந்தனைகள், நடவடிக்கைகள் காரியதரிசியாரால் வாசித்துக் காண்பிக்கப்பட்டு அக்கிராசனர் முடிவுரையின் பின் கூட்டம் இனிது கலைந்தது.*

## வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு திருவினர் நன்கோடை

வாலாஜாபாத் உயர் திருவாளர் வா. தியாகராய முதலியார் அவர்கள் இறந்தமைக்காக அன்னார் பிள்ளைகள் 16-12-34-ல் திருமேனிக்காப்புச் செய்து நடுகல் விழா நிகழ்த்திய காலை ஈண்டிருந்த அறிஞர்க்குழுவில் பாரிப்பாக்கம் தமிழாசிரியர் உயர் திருவாளர் பா. கண்ணப்ப முதலியார் அவர்கள் "நடு கல் நிலைபேறு" என்னும் பொருள் பற்றியும், சென்னை கோவிந்த நாயக்கன் கல்லூரித்தலைமை ஆசிரியர் உயர்திருவாளர் மணி கோடீசுர முதலியார் அவர்கள் B. A. L. T. "இறை கழலுற்றூரும் ஈமவழிபாட்டு முறையும்" என்ற பொருள் பற்றியும், செங்குந்த மித்திரன் ஆசிரியர் உயர் திரு பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "வந்தவாறு, போமாறு" என்பது பற்றியும் பௌஞ்சியூர் உயர்திருவாளர் நாராயணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் அரிய சொற்பொழிவுகளாற்றினார்கள். நண்பகலில் ஏழைகள் 5000 பேருக்கு அறுசுவையுடன் கூடிய நால்வகையுண்டியும் கூடியவிருந்து நடைபெற்றது.

பிற்பகலில் 3-30 மணிக்கு இந்துமத பாடசாலையின் வடலூர் வள்ளலார் மாணவர் விடுதியில் ஒருபொதுக் கூட்டம் கடவுள் வாழ்த்துடன் தொடங்கிற்று. சென்னை நகராளும் கழகக் கல்வித்துறைத் தலைவர் உயர்திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B. A. L. T. தலைமை பூண்டார். மறுமையாக்கம் பெற்ற திரு. வா. தியாகராய முதலியார் நினைவுக்குறிக்கென அன்னார் திருமகனார் உயர்திருவாளர் வா. தி. பஞ்சாக்ஷர முதலியார் அவர்கள் தனக்குரிய தியாகராய மன்றம் என்ற ஒருபெரிய கட்டடத்தை இந்துமத பாடசாலைக்கெனப் பேரறிஞர் திருமுன்னர் அளித்தார்.

பின்னர் "இறந்தபின் என்னாவோம்" என்பது பற்றி "நவசக்தி" ஆசிரியர் உயர்திருவாளர் திரு. வி. கல்யாண சுந்தர முதலியாரும், "வாழ்வாவது மாயம்" என்ற செய்தி பற்றி திருநெல்வேலி உயர்திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் M. A. M. L அரிய விரிவுரைகள் கேட்போர்ப் பிணிக்குந்தன்மையில் ஆற்றி சபையோரைப் பேரானந்தக் கடலில் திளைக்கச் செய்தனர். தலைவர் முடிவுரை கூறிய பின்னர், இந்துமத பாடசாலையினுரிமையாளர் திருவாளர் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களால் தலைவருக்கும் கொடையளித்த பெரியாருக்கும், விரிவுரையாளர்களுக்கும், ஏனைய பெரியோர்களுக்கும் நன்றி கூறினர். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இரவு 7 மணிக்கு இனிது நிறைவேறியது.

ஷை பாடசாலையையும் அதன் உறுப்பாய திருவள்ளுவர் தொழிற்சாலையையும் வடஆற்காடு கோட்டக் கழகத்தலைவர் ஜனாப் சௌக்கார் ஹக்கீம் சாயபு பகதூர் அவர்கள் 5-1-35 சனிக்கிழமை பிற்பகல் பார்வை யிட்டபின், மெய்கண்டார் மாணவர் கழகத்தின் சிறப்புக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்கள். வெளியூர்களினின்றும் ஏறக்குறைய 1000 பேர் பிரபலஸ்தர்கள் வந்திருந்தார்கள். மாணவ



மாணவிகள் நிகழ்ச்சி நிரலிற் கண்டபடி பல அரிய சொல்லாட்டங்களும், நடிப்புக்களும், நிகழ்த்திக்காட்டினர், தலைவர் தமது முடிவுரையில் இப்பாடசாலையைப் பார்த்துத் தான் பெருமகிழ்ச்சி யடைந்ததாகவும், இப்பாடசாலையின் தொழிற்சாலை செவ்வனே நடைபெறுவதுகாண இன்புறுவதாகவும், ஒரு குருகுலமுறையில் விடுதி நடப்பது நன்முறையெனவும், எல்லாமத ஜாதிமாணவரும் இங்கு படிப்பது மிக்க சிறப்பினதென்றும், தன்னால் இயன்ற அளவு இப்பாடசாலையின் தேவைகளை முற்றும் தீர்க்கமாகப் பரிசோதித்தறிந்து உதவுவதாகவும் கூறிமுடித்தார்கள். நன்றி கூறியபின்னர் கூட்டம் நிறைவுற்றது என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

---

16-12-34 ஞாயிற்றுக்கிழமை வைகுண்ட ஏகாதசி தினம் இரவு சுந்திர விநாயகக் கடவுளுக்கும் முருகப்பெருமானுக்கும் அபிஷேக ஆராதனை நடைபெற்றது. அதன்பின் சுப்ரமணியக் கடவுள் ஆலய தகரக்கொட்டகையில் கல்லாலம்பூண்டி ஸ்ரீலஸ்ரீ திருஞான சிவயோக முருகாநந்த ஸ்வாமிகளால் 'ஒட்டக்கூத்தர் சரித்திரமும் மகாநாட்டு வைபவமும் நமது தலைச்சங்கத்தின் ஊக்கமும்' என்பதுபற்றி இரவு 12½ மணி வரை உபன்யசிக்கப்பெற்றது. சுமார் கூட்டத்திற்கு 500 ஜனத்திற்குமேல் விஜயம் செய்திருந்தனர். கடைசியில் விபூதி குங்குமப்பிரசாத சந்தண தாம்பூலம் வழங்கப்பட்டன.

சிவகுகனடிமை ஏகிரி சஞ்சீவி முதலியார்,
பேங்கர் & செங்குந்தனடியார், பொதட்டூர்பேட்டை.

---

## மஹாத்மாகாந்தி தேசீய வாலிபர் சங்கம், அம்மாபேட்டை, சேலம்

வழக்கம்போல் ஞாயிற்றுக்கிழமை (6-1-35) மாலை 7 மணிக்கு 5-வது கூட்டம் சங்கத்தின் உபதலைவர் T. R. ஆறுமுக முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் கூடிற்று. 'ஒற்றுமை' என்பது பற்றி பார்த்தசாரதி உபந்நியசித்தார். பின்பு ஆ. பழனியப்பன், மு. அருணாஜல முதலியார், உபாத்தியாயர் V. S. துரைசாமி சாமர், M. P. பொன்னுசாமி முதலியார், P. S. அர்த்தனாரி முதலியார், P. கந்தசமிமுதாலியா K. P. பச்சையப்ப முதலியார், M. கோபாலாச்சாரியார் ஆகியவர்கள் அதைத் தழுவிப் பேசியபின் தலைவர் முடிவுரை கூற இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

உபகாரியதரிசி M. A. ரத்ன முதலியார்.

---

செனெட் தொகுதியிலிருந்து சென்னை கார்ப்பொரேஷனுக்கு ஓர் அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பதற்காக 17-12-34-ல் நடந்த தேர்தலில் திவான்பகதூர் A. ராமசாமி முதலியார் வெற்றிபெற்றார்.

---

சென்னை சட்டசபை உபதேர்தலில் திருச்சி ஸ்ரீரங்கம் தொகுதிக்கு ஸ்ரீ. பி. ஆர். தேவர் போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவிலுள்ள பிரெஞ்சு இலாகாவில் சீனி, வத்திப்பெட்டி ஆகியவற்றிற்கு இதுவரையில் தீர்வை விதிப்பதில்லை. இப்பொழுது புதுவை சட்டசபையில் நிறைவேறிய தீர்மானத்தின் பயனாக சர்க்கரைக்கு இரண்டு அந்தர் மூட்டை 1-க்கு 1-8-0 ரூபாயும், வத்திப்பெட்டிக்கு 40 குச்சி உள்ளதற்கு ஒரு பைசாவும், 80 குச்சி உள்ளதற்கு இரண்டு பைசாவும், 80 குச்சிக்கு மேற்பட்டவற்றிற்கு மூன்று பைசாவும் தீர்வை விதிக்கப்படுமாம்.

---

ஜோலார்பேட்டையிலிருந்து வெளிவரும் 'சமதர்மம்' என்ற பத்திரிகைக்கு 3000 ரூபா ஜாமீன் கட்டுமாறு சென்னை சர்க்கார் உத்தரவிட்டுள்ளார்கள்.

---

சென்னைக்கும் கராச்சிக்குமிடையே தபால்களைக் கொண்டு போகும் தபால் விமானம் 7-1-35-ம் தேதி குறித்த நேரத்தில் தபால்கள் வந்து சேராமையால் தபால்களை ஏற்றிக் கொள்ளாமலே சென்னையினின்றும் புறப்பட்டுச் சென்று விட்டது. எனவே மறுநாள் காலை சென்னை விமான சங்கத்திற்குச் சொந்தமான விமானமொன்றை ஸ்பெஷலாக ஏற்பாடுசெய்து தபால்களை அனுப்பிவைத்தனர். அது தபால் விமானத்தை பம்பாயில் பிடித்து விட்டதால் இவ்வாரத்தில் லண்டன் தபால்களில் காலதாமதம் ஏற்படுவதற்கில்லை.

---

செங்கல்பட்டு - அரக்கோணம் கிளைபாதையில், 'டீஸல்' ஆயில் இஞ்சின்களை உபயோகிப்பதென்று தென்னிந்திய ரயில்வே கம்பெனியார் யோசனை செய்திருக்கிறார்கள். இந்த ஆயில் இஞ்சின்கள் நீராவி இஞ்சினைவிட அதிகவேகமாகச் செல்வதோடு அதிக பளுவை இழுக்குமாம். இது வெற்றிகரமாக முடிந்தால் மெயின் லயனிலும் இந்த இஞ்சின்களை உபயோகிப்பார்களெனத் தெரிகிறது.

---

மதுரையில் க்ஷவர சலூன்களுக்கு லைசென்ஸ் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்னும் முனிசிபல் விதியை மதுரை நகர சபையார் அமுலுக்குக் கொண்டு வருவதென முடிவுசெய்திருப்பதால் மதுரையிலுள்ள எல்லா நாவிதர்களும் அதை ஆட்சேபித்து 8-1-35 முதல் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர்.

---

சென்னை, வர்ணாஸ்ரம சுயராஜ்ய சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ எம். கே. ஆச்சாரியார் தலைமையில் ஒரு தூதுக் கோஷ்டியார் சென்னை கவர்னரைச் சந்தித்து சட்டசபையில் மதங்களுக்கென 10 ஸ்தானங்களை ஒதுக்கி, 6 ஸ்தானங்களை இந்துக்களுக்கும், 2 ஸ்தானங்களை முஸ்லிம்களுக்கும், 2 கிருஸ்தவர்களுக்கும் ஒதுக்க வேண்டுமென்றும், மத விஷயங்களில் சட்டசபை தலையிடக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டனர்.

---

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த எல்லா கிராமங்களிலும் இவ்வாண்டு சரியான விளைவு இல்லாமையால் கீழ்க்கண்ட சகாயங்களை புதுககோட்டை சர்க்கார் செய்வதென முடிவு செய்துள்ளனர்.



(1) சமஸ்தானத்தைச் சேர்ந்த எல்லா கிராமங்களிலும் இவ்வருட கிஸ்தியை ஜனவரி முதல் ஜூன் வரை 6 தவணையாக வசூலிக்கப்படும்.

(2) ஜலமில்லாத காரணத்தால் நான்கணா திட்டத்திற்கும் குறைவாக விளைந்துள்ள நிலங்களுக்கு 100-க்கு 50 வீதமே வரி வசூல் செய்யப்படும்.

(3) இன்னும் எங்கெங்கு எம்மாதிரியான உதவி வேண்டுமென அறிவித்தால் உடனே கவனித்துச் செய்யப்படும்.

---

முனிசிபல் சேர்மன்களுக்கும், கமிஷனர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி சென்னை சர்க்கார் சென்ற டிஸம்பர் மாதம் வெளியிட்டுள்ள உத்தரவில் கீழ்க்கண்டபடி குறிப்பிட்டுள்ளார்கள்.

உத்தியோக முறையில் முனிசிபல் கமிஷனருக்கும் சர்க்காருக்கும் நடைபெறும் எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களும் சேர்மன் மூலமாகவே நடைபெற வேண்டும். கவுன்சில் சார்பாகவோ அல்லது சொந்த முறையிலோ கமிஷனர் எழுதும் கடிதங்களை சேர்மன் தடைப்படுத்தவோ அல்லது திருப்பி யனுப்பவோ கூடாது. வேண்டுமானால் தனது குறிப்பை அதில் சேர்த்து அனுப்பலாம். கவுன்சில் கூட்ட விஷய அட்டவணையை சேர்மன் கமிஷனரைக் கலந்து தயாரிக்கவேண்டும். கவுன்சில் ஆலோசனைக்குக் கமிஷனர் சமர்ப்பிக்க விரும்பும் விஷயத்தைச் சேர்மன் தடுக்கக்கூடாது. சேர்மன் தானாக ஒரு விஷயத்தை அதில் சேர்த்தால் கமிஷனர் இதைப்பற்றி குறிப்பு எழுத சேர்மன் அனுமதிக்கவேண்டும். ஆட்சேபகரமான விஷயத்தை ஒரு கவுன்சிலர் கொண்டுவந்தால் அதிலுள்ள ஆட்சேபத்தை கமிஷனர் எடுத்துக் கூறலாம். முனிசிபல் காரியாலயத்துக்கு வந்தே சேர்மன் எல்லாவற்றையும் கவனிக்கவேண்டும். வீட்டுக்கு ஒன்றையும் எடுத்துக்கொண்டு போகக்கூடாது. சட்டப்படி எல்லா முனிசிபல் அதிகாரிகளும் சிப்பந்திகளும் கமிஷனருக்கு உட்பட்டவர்கள். கமிஷனர் மூலமே இவர்களுக்கு சேர்மன் உத்தரவிடவேண்டும். கவுன்ஸில் தீர்மானங்களை அவரே அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். முனிசிபல் நிர்வாகத்திற்குக் கமிஷனர் பொறுப்பாளி. கௌன்சில் கூட்ட நடவடிக்கைகளுக்கே சேர்மன் பொருப்பாளி யாவர்.

---

திருச்சி துரைராஜுவுக்கு 4-1-35-ல் பிறந்த பெண் குழந்தைக்கு 'ரஷியா' என்று பெயர் சூட்டப்பட்டதாம்.

---

சென்னையில் ஜே. எஸ். கண்ணப்பரை ஆசிரியராகக் கொண்டு நடைபெற்று வந்த தமிழ் தினசரியாகிய 'இந்தியா' என்ற பத்திரிகை 15-1-35 முதல் 'தினமணி' என்ற பத்திரிகையுடன் இணைக்கப்பட்டுவிட்டதால் இனி இந்தியா வெளிவராது.

---

தற்பொழுது தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையிலும் இடப்பட்டிருக்கும் 50 பவுண்டு கனமுள்ள ரயில் தண்டவாளங்களை எடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக செங்கல்பட்டு திருமணி கேட்டுக்கருகாமை வரையில் 75 பவுண்டுகனமுள்ள தண்டவாளங்களும், அங்கிருந்து விழுப்புரம் வரையில் 60 பவுண்டு கனமுள்ள தண்டவாளங்களும் போடுவதற்கு ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

இப்பொழுது தாம்பரம் வரையில் இருக்கும் எலெக்டரிக் டிரெயின் சர்விசை செங்கல்பட்டு வரையில் கொண்டு வருவதற்காக இம்மாதிரி ஏற்பாடுகள் செய்யப்படுகிறது என்று கருதப்படுகிறது. அன்றியும் இப்பக்கங்களில் ரயில்வே போக்குவரத்து அதிகமாக இருப்பதால் கனமுள்ள தண்டவாளங்கள் போடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

——

## இந்தியச் செய்திகள்

இந்தியா சட்டசபையின் முதல் கூட்டம் இம்மாதம் 24-ந்தேதி ஆரம்பமாகும். அன்று வைசராய் ஆரம்ப உபந்யாசம் செய்வார்.

——

ராஜாங்க சபை பிப்ரவரி௴ 14௳ ஆரம்பமாகும்.

——

குன்வார் மகாராஜ் சிங் இம்மாதம் தென்னாப்பிரிக்கா ஏஜண்டு பதவியிலிருந்து விலகுகிறார். அவருக்குப் பதிலாக ராஜாங்க சபை அங்கத்தினரான ஸ்ரீ சையத் ரஸா அலியை நியமனம் செய்துள்ளனர்.

——

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளி ஜூபிலி நிதிக்கு பஞ்ச் மகாராஜா ஒரு லட்ச ரூபா நன்கொடை வழங்கியுள்ளார்.

——

இந்திய போக்கு வரத்து ஆலோசனை கவுன்சில் இம்மாதம் 9, 10, 11 தேதிகளில் புதுடில்லியில் கூடி ரயில்மோட்டார் போக்குவரத்தை போட்டி யில்லாமல் செய்வதற்காக 'பஸ் டிரைவர்களுக்கு வைத்திய பரிசோதனை செய்வது, பிரயாணிகளுக்கு ஏற்படும் ஆபத்திற்காக இன்ஷியூர் செய்வது, பஸ் எண்ணிக்கைகளை திட்டப்படுத்துவது ஆகிய ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளனர்.

——

இந்திய—பிரிட்டிஷ் புதிய வர்த்தக ஒப்பந்தமொன்று 9-1-34-ல் லண்டனில் கையெழுத்திடப்பட்டது. அதில், இந்தியாவில் எல்லா பிரிட்டிஷ் சாமான்களுக்கும் இறக்குமதித் தீர்வையில் சலுகை காட்ட வேண்டுமென்றும், இந்தியத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விஷயமாக பிரிட்டிஷ் கைத்தொழில்களை காப்புவரி போர்டார் விசாரித்து அவர்கள் கூறுவதை கவனிக்க வேண்டுமென்றும், எப்பொழுது வேண்டுமானாலும் காப்பு வரியைப்பற்றி புனராலோசனை செய்ய எந்த பிரிட்டிஷ் கைத்தொழிலுக்கும் உரிமை யுண்டென்றும் கூறப்பட்டுள்ளது.



ஒட்டாவா ஒப்பந்தம் அமுலிலிருக்கும் வரையில் இவ்வொப்பந்தமும் அதைத் தழுவியதாக இருந்துவரும். இவ்வொப்பந்தத்தில் இந்திய சர்க்கார் சார்பாக இந்திய வர்த்தக ஹை கமிஷனர் சர். பி. என். மித்ராவும், பிரிட்டிஷ் சர்க்கார் சார்பாக சர். வால்டர் ரன்ஸிமெனும் கையொப்ப மிட்டனர்.

——

## வெளியுலகப் போக்கு

லண்டன் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மர்லிபோன் என்ற குற்றவாளி தன்னைச் சிறைப்படுத்த வேண்டாமென்றும், இஷ்டமானால் நல்ல அடி கொடுத்து தன்னைச் சீர்திருத்தி நல்வழிப் படுத்துமாறும் வேண்டிக்கொண்டானாம். பலமுறை சிறைப்பட்டும் அவன் நடத்தை திருந்தாமையால் அடிகொடுத்தால் ஒருக்கால் திருந்தக்கூடுமென்பது அவன் கருத்தாம்.

——

ஹங்கேரியா என்ற தேசத்தில் மேரியா அண்டோபியா என்ற இளவரசிதான் அவருடைய குடும்பத்தில் கடைசியான வார்சாக இருந்தாள். மேற்படி குடும்பத்தில் பெண்வார்சுக்கு சொத்துரிமை கிடையாது. எனவே, ஆஸ்திரிய இம்பீரியல் கோர்ட்டார் அப்பெண்ணைப் 'புருஷன்' எனத் தீர்மானம் செய்து சொத்துக்கு உரிமையாக்கினர். அந்த இளவரசி பர்டினாண்டு என்னும் இளவரசனை மணந்தபோது அவள் கணவனாகவும், இளவரசர் மனைவியாகவும் இருந்து பதிவு செய்து கொண்டனராம். வம்சாவளிப் பத்திரங்களில் அவளது பெயர் புருஷனாகவே குறிப்பிட்டு வந்துள்ளனர்.

——

துருக்கிக்கு அருகில் இம்மாத ஆரம்பத்தில் ஏற்பட்ட பூகம்பத்தால் 15 கிராமங்கள் நாசமாகிவிட்டன.

——

அடுத்த மாதம் 19-ந் தேதி அமெரிக்காவில் நடக்கப்போகும் மோட்டார் பந்தயத்தில் சர். மெல்காம் காம்பெல் கலந்துகொள்வதற்காக ஒரு நூதன மோட்டார் செய்துள்ளார். அதன் எடை $4\frac{3}{4}$-டன். இவர் சென்ற வருடம் நடைபெற்ற இதே போட்டியில் மணிக்கு 272 மைல் வேகத்தில் சென்று கீர்த்திபெற்றவர். இவ்வாண்டில் அதைக்காட்டிலும் அதிக வேகமாய்ப் போகக்கூடுமென்பது அவர் நம்பிக்கை.

## இரண்டு ரூபாய் பரிசு

பிரதி மாதமும் பிரசுரிக்கப்படும் விகடத் துணுக்குகளில் சிறந்த ஒன்றுக்கு இனி 2 ரூபா பரிசளிக்கப்படும். மற்றவை அவர்கள் பெயர்களுடன் வெளியிடப் பெறும். (ப-ர்)

# கிளர்ச்சி

## செங்குந்த இளைஞர் சங்கம், மதுரை

சங்கத்தின் நிருவாகக் கூட்டமொன்று கடந்த 9-12 34 ஞாயிறன்று தலைவர் திரு. நா. ப. பழனிக்குமாரு முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்கூடி இரண்டொரு விஷயங்கள் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டன.

23—12—34 ஞாயிறன்று பொதுக்கூட்டம் தலைவர் திரு. நா. ப. பழனிக்குமாரு முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது கீழ்க்கண்ட விஷயங்கள் ஏகமனதாக நிறைவேறின.

வட ஆற்காடு ஜில்லாவில் திருவத்தி புரத்தில் நடைபெற விருக்கும் நம்மவர் ஐந்தாவது மகாநாட்டை இச்சங்கம் முழுமனதுடன் வரவேற்பதுடன், சமீபந்தொட்டு பத்திரிகை வாயிலாக பல அன்பர்களும் பெண்மணிகளும் எழுதிவருவதே போல் இச்சங்கத்தினரும் பெண்கள் மகாநாடு ஒன்று கூட்டவேண்டுமென வரவேற்புக் கழகத்தினரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

மேற்படி மகாநாட்டுக்கு இந்நகரிலிருந்து அமார் 30 பெயருக்கு குறையாமல் இச்சங்கத்தின் சார்பாக அனுப்பிவைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

## சங்க ஆண்டு விழா

எமது சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா நாளது (3-1-35) பவஹு மார்கழிமீ 19உ தல்லாகுளத்தில் ஸ்ரீ மாணிக்கா எல். ரெங்கநாயகி அம்மாளுக்குச் சொந்தமான மண்டபத்தில் நமது மாபெருந்தலைவர், கொடைவள்ளல் உயர் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களின் அவைத் தலைமையின்கீழ் நடைபெற்றது.

அன்று பகல் 2 மணிக்கு சென்னையிலிருந்து வந்திருந்த செங்குந்த மித்திரன் ஆசிரியர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், மா. அ. கனகசபை முதலியார், வாலாஜாபாத் இந்துமத பாடசாலை நிர்வாகி உயர் திரு. மாசிலாமணி முதலியார், தலைவர் திரு. தி. நா. சபாபதி முதலியார் முதலியவர்கள் திருவாப்புடையார் கோவிலிலிருந்து மோட்டார்களில் பாண்டு வாத்திய முழக்கத்துடன் ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டனர். வழி நெடுக தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு முனிசிபல் மோட்டாரினால் தண்ணீர் தெளிக்கப்பட்டிருந்தது.

செங்குந்தர் திருப்புகழ் சபையினர் இறைவணக்கம் பாடினர். காரியதரிசி க. சண்முகவேலு தலைவர் அவர்கட்கு வரவேற்புப் பத்திரமொன்று வாசித்தளித்தார். சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு அறிக்கை வாசித்து சமர்ப்பிக்கப்பட்டது.



தலைவர் முன்னுரைக்குப் பின் நிகழ்ச்சி நிரலிற் கண்டவாறு வாலாஜாபாத் இந்துமத பாடசாலை நிர்வாகி உயர் திரு. W. T. மாசிலாமணி முதலியார் அவர்கள் "தொழிற் கல்வி" எனும் விஷயங் குறித்து மிக்க விரிவாகப் பேசி யாவரையும் பரவசமுறச் செய்தனர். நமதிளஞ்சிங்கம் உயர் திரு. பி. செ. மாணிக்கவாசகம் அவர்கள் "இளைஞர் இயக்கம்" என்பது குறித்து வீரமுழக்கம் செய்து அங்கு வீற்றிருந்த இளைஞர்கள் அனைவர் உள்ளத்தும் சமூக உணர்ச்சி பொங்கித் ததும்புமாறு சொன்மாரி பொழிந்தார். பின் சென்னை தலைச்சங்க நிர்வாகிகளி லொருவரான உயர் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும், அருபபுக்கோட்டை பிரபல ஜவுளி நூல் வியாபாரி உயர்திரு. அ. கு. சி. சிவசுப்பிரமணிய முதலியார் அவர்களும் முறையே "வாசகசாலையின் பயன்" "சமூக மகாநாடுகளின் அவசியம்" என்பனபற்றி சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தனர்.

தலைவர் அவர்களின் வேண்டுகோட் கிணங்கி மதுரை அமெரிக்கன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் உயர்திரு. ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் சங்கம் ஆற்றியுள்ள தொண்டினைக் குறித்து விரிவுரையொன்று நிகழ்த்தினர். பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் அவர்கள் தமது முடிவுரையில் நமது சமூகத்திடையேயுள்ள முக்கிய குறைபாடுகளை எடுத்துக் கூறி அவற்றினைப் போக்குதற்குரிய மார்க்கங்களைப்பற்றி சுமார் இரண்டுமணி நேரம் வரை தமது இனிய எளிய நடையில் ஆணித்தரமாகப் பேசினர்.

(நமது தலைவர்களின் பிரசன்னத்தால் செங்குந்த மக்களிடையே தீவிர சமூகப்பற்றும் புத்துணர்ச்சியும் உண்டாகியுள்ளது)

கூட்டம் இரவு 9-45 மணிக்கு சங்கத்தலைவர் திரு. நா. ப. பழனிக்குமாரு முதலியார் அவர்களின் வந்தனோபசாரத்துடன் இனிது முடிவுற்றது.

தலைவர்கள் அனைவரும் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் இலவச வாசகசாலையைப் பார்வையிட்டு தமது நல்லபிப்பிராயத்தை பார்வையாளர் புத்தகத்தில் பதிவுசெய்தனர்.

மதுரை செங்குந்த ஜவுளி வியாபாரிகள் அனைவரும் தமது கடைகளை அடைத்து பெரிவாரியாகக் கலந்துகொண்டது பாராட்டத்தக்கது

## தீர்மானங்கள்

(1) நங்குல பிரபலஸ்தர்களில் ஒருவரும், எமது சங்கத்தின் பேருழைப்பாளர் திரு. ச. மாணிக்க முதலியாரின் சிறிய தந்தையுமான உயர்திரு. கொ. பழனிசாமி முதலியார் அவர்களும், மதுரை பொதுநல ஊழியர் சங்க அமைப்பாளர் உயர்திரு. ஜே. என். இராமநாதன் அவர்களும் எதிர்பாராவண்ணம் காலஞ் சென்றமை குறித்து இக்கூட்டம் வருந்துவதுடன் அன்னார்களின் குடும்பத்தினருக்குத் தனது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

(2) தலைச்சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கட்டட நிதி, கல்விநிதி இவைகட்கு உதவவும், நம்குல முன்னேற்றங் கருதி உழைத்துவரும், "செங்குந்த மித்திரன்" பத்திரிகைக்கு பெரும் போஷகர்களாகவும், போஷகர்களாகவும், பரம்பரைச் சந்தாதாரர் களாகவும் சேர்ந்து ஆதரிக்கவும் வேண்டுமாய் இக்கூட்டம் செங்குந்த ரனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறது.

(3) இந்நகர் இரண்டாவது வார்டு தல்லா குளத்திலும், மதிச்சியத்திலுமுள்ள எல்லாத் தெருக்களிலும் ரோடு, சாக்கடை, மின்சார விளக்கு, தண்ணீர் முதலிய வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதால் அங்கு வசிப்பவர்கள் அனைவரும் சுகாதாரக் கேட்டால் பலவித தொத்து நோய்களுக்கு இலக்காகி வருவதை நகர பரிபாலன சபையினருக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எடுத்துக் காட்டுவதோடு இக்குறைகளை உடனே நிவர்த்திக்கப் போதிய பணத்தொகையை நகரபரிபாலன சபையின் 1935—36-ம் வருஷத்திய (கெஜட்டில்) வரவு செலவு கணக்கில் ஒதுக்கி வைக்கவேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(4) இந்நகரிலுள்ள இதர வாசகசாலைகளுக்கு பணவுதவி செய்து வருவதே போல் நமது சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் இலவச வாசகசாலைக்கும் பொருளுதவி செய்யவேண்டுமென இந்நகர் முனிசிபல் கௌன்சிலுக்கு அனுப்பிய கடிதத்தின்படி போதிய பணவுதவி செய்யவேண்டுமாய் மறுமுறையும் அச்சபையினரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(5) நமது வகுப்பினரிடையே இதுவரை நடை பெற்ற சுபகாரியங்களில் நமது சங்க நிதிக்கு நன்கொடை வழங்கியவர்களை இக்கூட்டம் போற்றுவதோடு இனி நடைபெறவிருக்கும் சுபகாரியங்களிலும் அவ்விதமே வழங்கவேண்டுமெனப் பெரிதும் வேண்டுகிறது.

(9) நமது சங்கத்திலிருந்து அனுப்பிவரும் உண்டியலுக்கு செங்குந்த வியாபாரிகள் அனைவரும் பொருளுதவி செய்து வந்தமைக்கு மிக்க நன்றி பாராட்டுவதுடன் இனியும் இவ்வாறே ஆதரவு காட்டி வருமாறு இக்கூட்டம் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறது.

(7) நமது மரபினர்கள் தம்மகளுக்குக் கல்வி பயிற்றுவிக்க வேண்டுமென்றும், தல்லாகுளத்தில் நடைபெறுவதே போல் நம்மவர் வதியும் பல விடங்களிலும் இராப்பள்ளிக்கூடங்கள் நிறுவி இலவசமாகப் படிப்பிக்கச் செய்யவேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

புது வருடத்திற்குக் கீழ்க்கண்டவர்கள் சங்க நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உயர்திரு. நா. ப. பழனிக்குமாரு முதலியார் தலைவராகவும், ப. மு. ம. முத்துக்குமார முதலியார் உபதலைவராகவும், க. சண்முகவேலு, P. V. முத்துக்கருப்ப முதலியார் பொருட்காப்



பாளர்களாகவும், எஸ். செண்பக முதலியார் வாசகசாலை நிருவாகியாகவும், எஸ். பாலசுப்ரமணிய முதலியார், மு. திருமேனி முதலியார், நா. வெ. பழனியப்ப முதலியார், ச. மீனாக்ஷிசுந்தர முதலியார், சு. ஜோதிமய முதலியார், அ. ப. சுப்பு முதலியார், சு. கு. மீனாக்ஷி சுந்தர முதலியார், மு. கருப்பசாமி முதலியார், க. சோணைமுத்து முதலியார், ரா. கனகசபாபதி முதலியார், சி. ந. மு. நடராஜ முதலியார், கு. மயிலப்ப முதலியார், ந. சி. ந. குருநாத பண்டார முதலியார் முதலியவர்கள் நிர்வாக உறுப்பினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

**க. சண்முகவேலு, ப. மு. ப. முத்துக்குமாரன்,** காரியதரிசிகள்

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கர நயினார் கோவில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
### நான்காம் ஆண்டு விழா

21-12-34-ல் ஷை நான்காம் ஆண்டு விழா பந்தல் வாழை கமுகு, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட செங்குந்தர் தருமர்கோவில் மண்டபத்தில் காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ ச. சிவசுவாமி தேசிகர் அவர்கள் தலைமையில் மாலை மணி 6-க்கு ஆரம்பிக்கப்பெற்று கடவுள் வணக்கம் நடைபெற்றது. தலைவர் அவர்கள் முன்னுரைக்குப்பின் சங்க அறிக்கை வாசிக்கப்பட்டது.

தேவகோட்டை ஸ்ரீ முருகானந்த தருமவைத்தியசாலை அதிபர் திருவாளர் S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் 'ஜீவ காராண்யம்' என்பதுபற்றி கேட்போர் மனதைக் கவரும்படியாகத் தமது இயற்கையான இன்சொற்களால் பேசினார்கள். திரு. S. சங்கர நாராயணன் 'சீர்திருத்தம்' என்பதுபற்றியும், A. தருமலிங்கம் 'ஒற்றுமை' என்பதுபற்றியும், T. M. சங்கரன் 'கல்வி' என்பதுபற்றியும் ஆணித்தரமாகப் பேசினார்கள்.

தலைவர் அவர்கள் முகவுரையிலும் முடிவுரையிலும் நமது சமூக முன்னேற்றத்திற்கான அனேக அரிய விஷயங்களை விளக்கிக் காட்டியும், செங்குந்த மகாஜனங்கள் சங்க வளர்ச்சியிலும் மித்திரன் அபிவிருத்தி சம்மந்தமாகவும் தீவிர சிரத்தை காட்ட வேணுமென்றும், ஜீவகாருண்யம் முதலிய ஒழுக்க நெறிகளைக் கைப்பற்ற வேண்டுமென்றும் மக்கள் உள்ளத்தில் உணர்ச்சி ததும்ப ஆர்வத்துடன் அழகாகப் பேசினார்கள். காரியதரிசியின் வந்தனோபசாரத்திற்குப் பின் சந்தண தாம்பூலம் வழங்கப்பட்டு விழா இனிது நிறைவேறியது.

சங்க வாசகசாலை அபிவிருத்தியின் பொருட்டு ஆண்டு விழாத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ ச. சிவசுவாமி தேசிகர் அவர்கள் நன்கொடையாக ரூ. 5 வழங்கினார்கள். திரு. S. பிச்சாண்டி முதலியார், S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார் முதலிய அன்பர்கள் வாசகசாலைக்கு

தின, வார, மாதப் பத்திரிகைகளைத் தருவித்துத் தருவதாக ஒப்புக் கொண்டார்கள்.

## தீர்மானங்கள்

1. நமது ஆண் மக்களையும் பெண் மக்களையும் கட்டாயமாய்க் கல்விச்சாலைக்கு அனுப்பவேண்டும். ஊர்ப்பொதுப்பணம் திரட்டி கல் விச்சாலைகள் நிறுவவும் நமது சமூக கல்வி அபிவிருத்தி சம்பந்தமாக எல்லா வேலைகளையும் செய்யவும் வேண்டுமென இவ்வூர் செங்குந்தர் களை வேண்டிக்கொள்ளுகிறது.

2. ஏழைத் தொழிலாளிகளிடமிருந்து வசூலிக்கும் மகமைப் பணத்தை ஏழை மக்களின் கல்வி கைத்தொழில் முதலிய முன்னேற் றத்திற்கு செலவு செய்வதே முறை என்று இக்கூட்டம் அபிப்பிராயப் படுகிறது.

3. புலால் உண்பதையும், தெய்வத்தின் பேரால் ஆலயங்களில் பலியிடும் குருட்டுப் பழக்க வழக்கத்தையும் அறவே ஒழிக்க வேண்டு மென இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. நம்மவர்கள் கைத்தொழிலை ஆதரிக்கவும், சுதேசிப்பொருள் களையே வாங்கவும், கதரை அபிவிருத்தி செய்யவும் வேண்டிக்கொள் கிறது.

சங்க உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

தலைவர் A. T. சங்கரநமசிவாய முதலியார், உபதலைவர் S. M. திருவுடையா முதலியார்; காரியதரிசி S. பிச்சாண்டி முதலி யார்; உபகாரியதரிசி S. ஆறுமுக முதலியார்; பொக்கிஷதார் C. P. M. பிச்சாண்டி முதலியார்;

மற்றும் அறுவர் நிர்வாக கமிட்டி அங்கத்தினர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர்.

ச. பிச்சாண்டி முதலியார், காரியதரிசி.

4-1-35-ல் ஷை சங்க நிலையத்தில் மாலை மணி 6-க்கு திருவாளர் S. பிச்சாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. நமது மகாநாட்டின்மூலம் அகில இந்திய கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம் அமைக்க உடனே வேண்டுபவைகளைச் செய்ய தலைச் சங்கத்தினரையும், வரவேற்புக் கழகத்தினரையும் வேண்டிக் கொள்ளுகிறது.

2. மகாநாட்டுத் தீர்மானங்களில் முக்கியமானவற்றிற்குத் திட் டம் வகுத்துத் தீவிரமாய்ப் பரவச்செய்ய முயற்சிக்க வேண்டு மென்றும், பல பிரசாரர்களை நியமித்து செங்குந்தர் வதியும் இக்கிரா மங்களிலெல்லாம் தீவிரமாக சீர்திருத்த பிரசாரம் செய்ய வேண்டு மென்றும் இக்கூட்டம் வேண்டுகிறது.



## மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

31-12-34உ மாலை 4-மணிக்கு இச்சங்கத்தின் 24-வது கூட்டம் சங்கஹாலில் தலைவர் ஸ்ரீமான் அம்பலம். வீ. சி. வீரபத்திர முதலி யார் அவர்கள் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. காரியதரிசி திரு. இ. முனியப்ப முதலியாரவர்களால் சென்ற வருஷ அறிக்கை வாசிக்கப்பட்டு எல்லோராலும் ஆமோதிக்கப்பட்டபின் நிறைவே றிய தீர்மானங்கள்.

1. நமது 5-வது மகாநாட்டுக்கு பிரதிநிதியாகச் செல்ல இச் சங்கத்தின் சார்பாக திரு. மு. ஆ. பாதம்பிரியா முதலியார், ஞா. சு. மு. பாதம்பிரியா முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2. தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்கு திரு. இ. முனியப்ப முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3. 1935ஞுக்கு சங்க நிர்வாக உத்தியோகஸ்தர்கள் கீழ்க்கண்ட படி தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர் ஸ்ரீமான். வெ. மு. கிருஷ்ண முதலியார்; உபதலைவர் ப. சி. மு. மூக்க முதலியார்; காரியதரிசி நா. ப. க. ராமசாமி முதலி யார்; பொக்கிஷதார் சு. பா. பொன்னுசாமி முதலியார்; ஆடிட்டர் இ. மா. இளையபெருமாள் முதலியார்;

### மெம்பர்கள்

திருவாளர்கள். மு. ஆ. பாதம்பிரியா முதலியார்; ஆ. வீ. சி. வீர பத்திர முதலியார்; ஆ. இ. மு. சித்திரவேல் முதலியார்; நா. சு. கு. நடராஜ முதலியார்; ஞா. சு. மு. பாதம்பிரியா முதலியார்.

### புத்தகசாலை நிர்வாக உத்தியோகஸ்தர்கள்

தலைவர் ஸ்ரீமான். கதிர். வாழவந்த பண்டாரம்; உபதலைவர் சொ. குருசாமி முதலியார்; காரியதரிசி அ. குருசாமி முதலியார்; பொக்கிஷதார் சு. பா. பொன்னுசாமி முதலியார்; ஆடிட்டர் கு. பெ. முத்துசாமி முதலியார்.

### மெம்பர்கள்

திருவாளர். மு. நா. பொன்னுசாமி முதலியார்; மு. செ. முருக லிங்க முதலியார்; மே. பெ. புனுக முதலியார்; சு. கு. மாரி முதலியார்; அ. கி. கோ. அய்யம் பெருமாள் முதலியார்; வா. வெள் ளைச்சாமி பண்டாரம்; பொதுக்காரியதரிசி. திரு. இ. முனியப்ப முதலியார்.

3. திருவாளர் சு. கு. மாரிமுதலியார், அ. குருசாமி முதலியார், கோ. அய்யம்பெருமாள் முதலியார் இவர்கள் சங்கத்தின் புதுச் சந்தா தாரராக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

4. புது ஞுக்கு சந்தா வருஷம் 1-க்கு ரூ. 1 (ஒன்று) வீதம் சந்தாதாரர்களிடம் வசூல் செய்யும்படியாக தீர்மானிக்கப்பட்டது.

5. சங்கத்தின் மூலதனத்தைக் கருதி சங்க வாசகசாலையின் பேரால் 2-வது லாட்டரி சீட்டு ஒன்று ஏற்படுத்த முடிவுசெய்து ஒரு கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

## திருச்செங்கோடு, செங்குந்த வாலிபர் சங்கம்

16-12-34. தேதி மாலை 7 மணிக்கு திருஞான சம்பந்தர் மடாலயத்தில் சென்னை ம-ா-ா-ஸ்ரீ கனகசபை முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடை பெற்றது. காங்கிரஸ் பிரசிடெண்டு திரு. K. A. காசி விஸ்வநாத முதலியார் அவர்களும், திரு. T. R. நாராயணசாமி முதலியார், திரு T. M. அருணாசல முதலியார் அவர்களும் 'நமது முன்னேற்றம்' என்னும் விஷயத்தைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

பிறகு தலைவர் 'ஊர் பெரியதனக்காரர்கள் வாலிபர்களுடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், வாலிப சங்கத்தால் தற்சமயம் நடத்தப்பட்டுவரும் இராப்பள்ளிக்கூடத்திற்கு உதவி அளிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் பேசினார். கூட்டம் வந்தனோபசாரத்துடன் சுமார் இரவு 9 மணிக்கு கலைந்தது.

28-12-34 தேதி மாலை 6 மணிக்கு திரு காசிவிஸ்வநாத முதலியார் தலைமையின்கீழ் ஓர் பொதுக் கூட்டம் கூடிற்று. அவ்வமயம் காரியதரிசி பி. எ. எஸ். எல். மாரியப்பாவால் கம்பராமாயணம் கையடைப்படலம் உபந்நியசிக்கப்பட்டது. பிறகு பல தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது.

5-1-35 தேதி மாலை 6-மணிக்கு சங்கக் கட்டடத்தில் திரு R. மாணிக்க முதலியார் தலைமையின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

**தீர்மானங்கள்:—**

(1) நடப்பு வருஷத்தின் வரவு செலவுத்திட்டம்.

(2) திரு K. A. காசிவிஸ்வநாத முதலியாரை ஆடிட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(3) இச்சங்கத்தை தலைச் சங்கத்துடன் இவ்வருஷத்தில் இருந்து இணைத்துக் கொள்ளல்.

(4) திருவாளர்கள்:—K. பச்சியன முதலியார், R. V. மாணிக்க முதலியார், K. A. காசி விஸ்வநாத முதலியார், பி. ஏ. எஸ். எல். மாரியப்பர், M. அருணாசல முதலியார், T. R. நாராயணசாமி முதலியார் முதலியவர்களை செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(5) நமது சங்கத்திற்கு இந்தியா, செங்குந்த மித்திரன் முதலியவைகள் சில நிர்வாகஸ்தர்களால் வரவழைத்து சங்கத்திற்குக் கொடுக்கத் தீர்மானம்.

(6) சங்கத்தின் இரவு பாடசாலையைக் கவனிக்கவும், பரீக்ஷைகள் நடத்தவும் திருவாளர்கள். K. பச்சியண முதலியார், K. A. காசி விஸ்வநாதன், T. R. பரமசிவ முதலியார், மு. கி. சித்தநாதமுதலியார், M. அருணாசல முதலியார் அடங்கிய கமிட்டி நியமிக்கப்பட்டது.

பி. ஏ. எஸ். எல். மாரியப்பா, அமைச்சர்.

208453